யாழ்நகரில்
தரமான
A/L
விஞ்ஞானக் கல்விக்கு
என்றும்
New Master
Institute
B.M.C. Lane, JAFFNA.

# சஞ்சீவி

விலை ரூ 2/-

அறிவு-ஆக்கம்-அபிவிருத்தி

A/L 88
விஞ்ஞான
வகுப்புக்கள்
Iம், IIம் பிரிவுகள்
நடைபெறுகின்றன
IIIம் பிரிவு
ஆரம்பமாகின்றது
விபரங்கட்கு:
New Master
Institute
B.M.C. Lane, JAFFNA.

மலர்:- 1 யாழ்ப்பாணம் அக்ஷய ஸ்ரீ ஆனி மீ 28 உ சனிக்கிழமை ஹிஜ்ரி 1406 ஜுல்கஃ பிறை 4 (12 07-1986) SANJEAVY - REGENERATIVE TAMIL WEEKLY சிகரம்: 25

## கருத்துக் கலசம்

மயூரா

### பனையும் கடலும்

மனிதர்களில் சிலர் அங்கவீனர்களாகப் பிறந்துவிடுகிறார்கள். ஆனால் இறைவன் அவர்களை ஒதுக்கி வைத்து விடுவதில்லை. அங்கத்தால் ஏற்பட்ட குறைவினை ஈடுசெய்யும் விதத்தில் அவர்களுக்கு ஏதோ ஒரு துறையில் விசேஷ ஆற்றலை— சக்தியை— திறமையைக் கொடுத்து விடுகிறான்.

அதனால் அவர்கள் சமூகத்திலிருந்து ஒதுங்கி வாழ்பவர்களாக இல்லாமல் ஏனையோரைப் போல சகஜ வாழ்க்கை வாழ முடிகிறது. சில வேளைகளில் சாதாரணர்களுக்கு இல்லாத விசேஷ சக்தியைக் கொண்டு சமூக வளர்ச்சியில் பெரும் பங்களிப்பையும் செய்கிறார்கள் புகழும் கீர்த்தியும் அடைகிறார்கள்.

யாழ்ப்பாணக்குடா நாட்டையும் இயற்கை அதே மாதிரித்தான் அமைத்திருக்கிறது எனலாம். இங்கு மலைகள், ஆறுகள் இல்லை. நீர் வளம் மிகமிகக் குறைவு. கிடைக்கும் சிறு அளவு மேற்தரை நீரும் உவராகும் ஆபத்து. அதனால் வரண்ட பிரதேசம்; வானம் பார்த்த பூமி என்ற குறிப்பெயர்களால் அழைக்கப்படுகிறது.

எனினும் அந்தக் குறையை ஈடுசெய்ய இயற்கை பின்விற்க விலை பனைவளத்தையும் கடல் வளத்தையும் அள்ளித் தந்திருக்கிறன் அந்த அன்னை. ஆனால் நாம் அவை இரண்டையும் இன்னமும் பூரணமாகப் பயன்படுத்த ஆரம்பிக்கவில்லை என்றே சொல்லலாம்.

எமது பிரதேசத்தின் இயற்கை அமைப்பைப் பொறுத்து, மேற்சொன்ன இரண்டு வளங்களையும் எமது பிரதான வளங்களாகவே முதலிடம் கொடுத்திருக்க வேண்டும். இதுவரை அது செய்யப்படவில்லை, பனைவளத்துக்கும் கடல் வளத்துக்கும் இன்னமும் போதிய அளவு முக்கியத்துவம் தரப்படவில்லை, இனியும் அவ்வாறு இருந்து விடல் ஆகாது.

எந்த பிரதேசத்தின் பொருளாதார அபிவிருத்திக்கும். அங்குள்ள பிரதான மூல வளங்களுக்கே முதலிடம் தரப்படுகிறது. ஆனால் நாம் காலத்துக்கு காலம் செயற்கை மூலவளங்களுக்கு முக்கியத்துவம் தந்து பழக்கப்பட்டு விட்டோம்.

மலேஷியா, சிங்கப்பூர் வேலைவாய்ப்பு எங்கள் பேரன் காலத்தில் கொடிகட்டிப் பறந்தது. பின்னர் ஆங்கிலேயர் ஆட்சியில் அரசாங்க சேவகம் எங்கள் தந்தையர் காலத்தில் பணம் ஈட்டித் தந்தது. சிங்களவர் ஆட்சி வந்த பிறகு அந்த மணியோடர் பொருளாதாரமும் மலையேறியது இப்போது மத்தியகிழக்கு, ஆபிரிக்க நாடுகளில்

(8 ஆம் பக்கம் பார்க்க)

# மாகாண சபைகள்

# முதலில் வடக்கு, கிழக்கில் தான்

## மேலதிக யோசனைகளில் பல புதிய மாற்றங்கள்

யாழ்ப்பாணம், ஜூலை 12

மாகாண சபைகள் முதலில் வடக்கு, கிழக்கு மாகாணங்களிலேயே நிறுவப்படும்.

மாகாணங்களுக்கு அதிகாரத்தைப் பகிர்ந்து அளிக்கும் விதத்தில் அரசமைப்புச் சட்டத்தில் திருத்தம் கொண்டு வரப்படும்.

இவ்வாறு அரசியல் கட்சிகள் மாநாட்டில் கலந்துகொள்ளும் கட்சிகளுக்கு நேற்று அனுப்பப்பட்ட மேலதிக யோசனைகளில் தெரிவிக்கப்பட்டிருக்கிறது.

இந்தியத் தூதுவர் திரு ஜே என். டிக்ஸித் மூலம் கடந்த திங்கட்கிழமை புதுடில்லிக்கு அனுப்பப்பட்ட விளக்கங்கள் இப்போது மேலதிக யோசனைகளாகச் சேர்க்கப்பட்டுள்ளன.

மேலதிக யோசனைகளில் செய்யப்பட்டிருக்கும் புதிய முக்கிய மாற்றங்கள் வருமாறு:-

● அரசமைப்புச் சட்டத் திருத்தம் நடைமுறைக்கு வந்தவுடன் வடக்கு, கிழக்கு மாகாணங்களில்தான் முதலில் மாகாணசபை நிறுவப்படும்.

● சட்டவாக்க, நிறைவேற்று அதிகாரங்கள் மாகாண சபைகளுக்கு பகிர்ந்து வழங்கப்படும்.

(முன்னர் அதிகாரம் மாற்றப்படும் என்றே தெரிவிக்கப்பட்டிருந்தது.)

● கூடுதலான நிதிநிர்வாக அதிகாரங்களும் மாகாண சபைகளுக்கு வழங்கப்படும்.

● சர்வசன வாக்கெடுப்பு நடத்தும் அவசியம் ஏற்படாத முறையில் மேற்கண்ட அதிகாரங்கள் மாகாணசபைக்கு வழங்கப்படும்.

● ஒவ்வொரு மாகாணத்துக்கு, மேல் நீதிமன்றம் இருக்கும். உயர்நீதிமன்றம் அரசமைப்புச் சட்ட விஷயங்களை மட்டுமே கவனிக்கும்.

● வடக்கு மாகாண

(8 ஆம் பக்கம் பார்க்க)

### ★ அனிலுக்கு உதித்த யோசனை!

கொழும்பு, ஜூலை 12

கிழக்கு மாகாணத்தில் ஒவ்வொரு 3 மைலுக்கும் இராணுவ முகாம் நிறுவப்பட வேண்டும்' ஒரு தமிழ் தீவிரவாதிக்கு 3 சிப்பாய்கள் என்ற விகிதாசாரத்தில் எமது ஆயுதப்படை அதிகரிக்கப்பட வேண்டும்.

இப்படி மத்துகம எம்.பியும் ஸ்ரீ ல. சு. கட்சி உறுப்பினருமான திரு அனில் முனசிங்க சொன்னார்.

கடந்த வாரம் நடந்த நாடாளுமன்ற விவாதத்தில் பங்குபற்றிப் பேசுகையிலேயே அனில் முனசிங்க மேற்கண்டவாறு அரசைக் கேட்டுக்கொண்டார். (உ-எ)

### சுபநேரம்

12-07-1986
சனிக்கிழமை

சுபநேரம்:-
2 59 முதல் 4 29 வரை
ராகுகாலம்:-
8 59 முதல் 10.29 வரை
இவை பகலுக்கும் இரவுக்கும் பொருந்தும்

குமார ஷஷ்டி விரதம்

### மீனுக்கு மவுசு!

கொழும்பு, ஜூலை. 12

ஒரு கிலோ 'அறுக்குளா' மீன் கண்டி மத்திய மார்க்கட்டில் 125 ரூபாவுக்கு விற்கப்படுகிறது

'சூறை' மீன் ஒரு கிலோ 70 ரூபாவரை விற்கப்படுகிறது

வன்செயல்கள் காரணமாக கிழக்கு மாகாணத்தில் இருந்து மீன்கள் வருவது குறைந்துள்ளதாம்.

அதனால் தான் இந்த விலை உயர்வு. (உ-எ)

### திருமலை ஊரடங்கு

திருகோணமலை ஜூலை 12

திருகோணமலை நகரில் நேற்றுக்காலை 6 மணிக்கு நீக்கப்பட்ட ஊரடங்குச் சட்டம் மாலை 6 மணிக்கு மீண்டும் அமுலுக்கு வந்தது.

இன்று காலை 6 மணியுடன் ஊரடங்குச் சட்டம் நீக்கப்பட்டது. (உ-எ-150)

ஈழவர் முன்னணியின் ஆதரவில்

### காரைநகரில் நேற்று ஆர்ப்பாட்டப் பேரணி

யாழ்ப்பாணம், ஜூலை 12

தமிழ் இனத்தின் மீதான அரசு அடக்குமுறைச் செயல்களைக் கண்டித்து ஈழவர் முன்னணியின் ஆதரவிலான ஆர்ப்பாட்டப் பேரணி நேற்றுக் காரைநகரில் நடைபெற்றது.

மடத்துக்கரை அம்பாள் ஆலய முன்றலில் இருந்து ஊர்வலம் புறப்பட்டது.

முடிவில் காரைநகர் வியாவில் ஐயனார் கோயில் முன்றலில் பொதுக் கூட்டம் நடைபெற்றது. ஏராளமான மாணவர், பொதுமக்கள் கலந்து கொண்டனர்.

பிரஜைகள் குழுத் தலைவர் திரு எஸ் சுப்பிரமணியபிள்ளை தலைமை வகித்தார்.

ஊர்வலத்தில் பல சுலோக அட்டைகள் எடுத்துச் செல்லப்பட்டன.

● வடக்கு, கிழக்கு, மலையகம் ஆகியவற்றை ஈழப்பிரதேசமாக அங்கீகரி.

● ஈழப்பிரதேசத்தில் சிங்களக் குடியேற்றத்தை தடுத்து நிறுத்து.

● இஸ்லாமியரை ஈழவரிடமிருந்து பிரிக்காதே.

—மேற்கண்டவாறு கோரும் சுலோகங்கள் அட்டைகளில் எழுதப்பட்டிருந்தன. (உ-எ)

### கூட்டணி தூதுக்குழு இன்றுவருகை

கொழும்பு, ஜூலை 12

தமிழர் விடுதலைக் கூட்டணித்தலைவர்கள் இன்று பகல் கொழும்பு வருவர் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

இந்தியன் எயர்லைன்ஸ் விமானமூலம் வரும் அவர்களுக்குடுமையான பாதுகாப்பு வழங்க கொழும்

(8 ஆம் பக்கம் பார்க்க)

### புலிகள் தாக்குதல்

யாழ்ப்பாணம், ஜூலை 12

நேற்று நண்பகல் பருத்தித்துறை இராணுவ முகாமில் இருந்து இராணுவத்தினர் கால் நடையாகப் புறப்பட்டு நடராஜா கலா அரங்கம் பக்கமாக வந்தபோது விடுதலைப் புலிகள் தாக்குதல் நிகழ்த்தியதில் இராணுவத் தரப்பில் உயிர்ச்சேதங்களும், காயங்களும் ஏற்பட்டன. இராணுவம் முகாம் திரும்பியது.

இந்த மோதலில் விடு

(8 ஆம் பக்கம் பார்க்க)

# நாளை பெரும் ஆர்ப்பாட்ட பேரணி

# மாகாணசபையை எதிர்த்து

## மருதனுமடத்தில் ஆரம்பம்

யாழ்ப்பாணம், ஜூலை 12

அரசியல் கட்சிகளின் மாநாட்டையும், மாகாண சபையையும் எதிர்த்து நாளை ஞாயிற்றுக்கிழமை மாபெரும் ஆர்ப்பாட்டப் பேரணி ஒன்றுக்கு ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது.

நாளை காலை 9 மணிக்கு மருதனுமடம் சந்தியில் ஆரம்பமாகும் பேரணி காங்கேசன்துறை வீதி வழியாக நாச்சிமார் கோவிலடிவரை சென்று அங்கிருந்து யாழ். பல்கலைக்கழகத்தைச் சென்றடையும் எனத் தெரிவிக்கப்படுகிறது.

பேரணியின் பின்னர் யாழ். பல்கலைக்கழகத்தில் பொதுக்கூட்டம் ஒன்றிற்கும் ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது.

சில்லறைச் சலுகைகளையும், அரைகுறைத் தீர்வையும் உறுதியாக எதிர்ப்பதற்காகவும்—

சர்வதேசமும் தமிழர் விடுதலைப் போராட்டத்தை அங்கீகரிக்கவேண்டும் என்று கோரியும்—

விடுதலைப் போராட்டத்தை இந்திய மத்திய அரசு அங்கீகரிக்க வேண்டும் என வலியுறுத்தியும் இந்த ஆர்ப்பாட்டப் பேரணி நடத்தப்படுவதாக இது தொடர்பாக விடுக்கப்பட்ட துண்டுப் பிரசுரத்தில் தெரிவிக்கப்பட்டிருக்கிறது.

எமது மக்களைக் கொன்றொழிக்க அரசு கங்கணம் கட்டிக்கொண்டு செயற்பட்டு வருகிறது. அதற்கு சர்வதேச பிற்போக்குச் சக்திகளின் உதவியையும் பெற்றுவருகிறது.

இவ்வாறு தன்னைப் பலப்படுத்துவதற்கு கால

(8 ஆம் பக்கம் பார்க்க)

### போராளிகள் இன்று புதுடில்லியில் பேச்சு

புதுடில்லி, ஜூலை. 12

ஐந்து தமிழ்ப் போராளிகள் அமைப்புக்களின் பிரதிநிதிகளும் இன்று சனிக்கிழமை இந்திய அரசு அதிகாரிகளுடன் புதுடில்லியில் பேச்சுக்கள் நடத்துவர்.

இந்திய அரசின் அழைப்பின் பேரில் போராளிகளின் பிரதிநிதிகள் இன்று (சனி) காலை புதுடில்லி செல்கின்றனர்.

மாலையில் இந்திய அதிகாரிகளுடன் பேச்சுக்கள் நடத்துவர்.

ஐந்து போராளி அமைப்புகளும் அண்மையில் தனித்தனியே தமிழக முதல் அமைச்சர் திரு. எம் ஜி. இராமச்சந்திரனிடம் எழுத்து மூலம் சமர்ப்பித்த கருத்துக்கள் குறித்து பேச்சுக்கள் இடம் பெறும் என்று எதிர்பார்க்கப்படுகின்றது

வெளியுறவு அமைச்சர் பி. சிவ்சங்கர், வெளியுறவுச் செயலாளர் ஏ. பி. வெங்கடேஸ்வரன், ஜி பார்த்தசாரதி ஆகியோருடன் அவர்கள் பேசுவார்கள் என எதிர்பார்க்கப்படுகிறது. (உ-எ-2)

### எழுத்துமூல பதில் இல்லை

கொழும்பு, ஜூலை 12

ஜனாதிபதி ஜெயவர்த்தனாவை சந்தித்து எமது எண்ணங்களை, யோசனைகளை விளக்கிச் சொல்வோம்.

எழுத்துமூலமாக ஒன்றும் கொடுக்கமாட்டோம்

இப்படி தமிழர் விடுதலைக் கூட்டணிச் செயலதிபர் திரு அ அமிர்தலிங்கம் சொன்னார் (எ-2)

மாகாணசபை யோசனை

### சுதந்திரக் கட்சியின் இறுதிமுடிவு திங்களன்று

கொழும்பு, ஜூலை 12

மாகாண சபை யோசனைகள் குறித்து சுதந்திரக்கட்சி இறுதி முடிவை நாளை மறுநாள் திங்கட்கிழமை எடுக்க இருக்கின்றது.

400 உறுப்பினர்கள் கொண்ட சுதந்திரக் கட்சியின் செயற்குழு நாளை கட்சித் தலைமையலுவலகத்தில்கூடி மாகாணசபை யோசனைகளைப் பரிசீலனை செய்யவுள்ளது.

இக்கூட்டத்துக்கு திருமதி சிறிமாவோ பண்டாரநாயக்கா தலைமை வகிப்பார்.

செயற்குழுக் கூட்டத்தின் முடிவு, அடுத்தநாள் திங்கட்கிழமை நடைபெறவுள்ள கட்சி மத்திய குழுவின் கூட்டத்தில் சமர்ப்பிக்கப்படும்.

இக்கூட்டத்தில் தான், மாகாண சபை யோசனைகளை ஏற்பதா? அரசியல் கட்சிகள் மாநாட்டில் பங்குபற்றுவதா? என்பது பற்றி முடிவு செய்யப்படும்—

இப்படி எதிர்க்கட்சித் தலைவர் அனுரா பண்டாரநாயக்கா சொன்னார். (உ-எ)

உயிருக்குப் பாதுகாப்பு இல்லை

### லலித், வேரப்பிட்டிய மீது வழக்குத் தாக்கல்

கொழும்பு, ஜூலை 12

பிரஜைகளின் உயிருக்கு பாதுகாப்பு வழங்க தவறிவிட்டதாக தேசிய பாதுகாப்பு அமைச்சர் அத்துலத்முதலி, பிரதிப் பாதுகாப்பு அமைச்சர் திரு ரி. பி. வேரப்பிட்டிய ஆகியவர்கள் மீது சிங்களக் குடியானவர் ஒருவர் உயர் நீதிமன்றத்தில் வழக்குத் தாக்கல் செய்துள்ளார்.

கடந்த புதன்கிழமை இம்மனுவை தெஹிவளையைச் சேர்ந்த ஆர் கே. டேவிட் தாக்கல் செய்தார்.

அடிப்படை உரிமைச் சட்டத்தின் கீழ் இம்மனுவைத் தாக்கல் செய்த ஆர் கே. டேவிட் தமது மனுவில் கூறியிருப்பதாவது:

'எல்ல' பகுதியில் நான் நிரந்தரமாக வசித்து வந்தேன் திருமணம் செய்ததன் பின்னர் சொந்தக் கிராமத்தை விட்டு மூதூர்த் தொகுதியில் தெஹிவத்தைப் பகுதியில் குடியமர்த்தப்பட்டேன்

தீவிரவாதிகளின் நடவடிக்கைகள் காரணமாக தெஹிவத்தையை விட்டு அம் லாந்தோட்டைக்கு வந்து விட்டேன்.

எதிர் மனுதாரர்களான இரண்டு அமைச்சர்களும் எனக்கும் ஏனைய பிரசைகளுக்கும் பாதுகாப்பு வழங்கத் தவறி விட்டனர்.

—இப்படி மனுவில் கூறப்பட்டுள்ளது

மனுவை ஏற்றுக்கொண்டு விசாரிக்க உயர் நீதிமன்றம் அனுமதி வழங்கியது (உ-எ)

# ராணுவ நடவடிக்கையை நிறுத்த ஜே. ஆர். தயார்

## சென்னையில் 'விஜே' அறிவிப்பு

சென்னை, ஜூலை 11

இராணுவ நடவடிக்கையை நிறுத்தி, சமாதானம் ஒன்றைக் காண்பதற்கு ஜனாதிபதி திரு. ஜே ஆர் ஜெயவர்த்தன தயார்.

அந்தச் செய்தியைப் போராளிகளுக்குத் தெரிவிக்கவே தமிழகம் வந்திருக்கிறோம்.

இலங்கை மக்கள் கட்சிச் செயலாளர் விஜய குமாரணதுங்க சென்னையில் வைத்து இப்படித் தெரிவித்தார்.

தீவிரவாதிகள், அரசு, வடக்கு கிழக்குப் பிரசைகள் குழு, இலங்கை மக்கள் கட்சி, கம்யூனிஸ்ட் கட்சி, லங்கா சமசமாஜக் கட்சி ஆகியவற்றின் பிரதிநிதிகள் கொண்ட கண்காணிப்புக் குழு ஒன்றை உருவாக்கி—

அதன் மேற்பார்வையில் புதிய யுத்த நிறுத்தம் ஒன்றை உருவாக்கலாம்.

இந்த யுத்த நிறுத்தம் குறித்து பேச்சுவார்த்தை ஒன்றை நடத்த ஜனாதிபதி திரு. ஜெயவர்த்தன தயாராக இருக்கிறார்.

பயங்கரவாத தடுப்புச் சட்டத்தையும், அரசமைப்பிற்குக் கொண்டு வரப்பட்ட ஆறாவது திருத்தச் சட்டத்தையும் விலக்க ஜனாதிபதி தயாராக இருக்கிறார்.

இன்று இலங்கைத் தீவின் மக்களின் தேவை சமாதானமும் தீர்வுமே. வலிந்தோ வேறு யாரோ மோ மக்களுக்கு எதிராகப் போகமுடியாது

இலங்கையில் தமிழர்களுக்கு தாயகம் இருக்கத்தான் வேண்டும். ஆனால் அது தனிநாடாக அல்ல.

1970 இல் கொண்டு வரப்பட்ட பல்கலைக்கழக அனுமதிக்கான தரப்படுத்தல் முறையைக் கூட எதிர்த்துப் போராட நாம் தயாராக இருக்கிறோம்.

—இப்படி அவர் மேலும் தெரிவித்தார்.

### சூசையின் கார் சேதம்

கொழும்பு, ஜூலை 12

கொழும்பு கம்பரஸ் ஹோட்டலுக்குக் குண்டு வீசப்பட்ட சம்பவத்தில் மன்னார் முன்னாள் எம். பி திரு பி எஸ். சூசைதாஸனின் கார் சேதம் அடைந்தது.

காரை ஹோட்டலுக்கு முன்னால் விட்டு விட்டு திரு சூசைதாஸன் வேறோர் இடத்துக்கு இரவுச் சாப்பாட்டுக்குச் சென்றிருந்தாராம் (உ-எ-21)

# மாநில சுயாட்சி இல்லையேல்

# கொழும்பில் இரத்தத் தீர்ப்பு

## சென்னையில் பேச்சு

சென்னை, ஜூலை 11

இலங்கைத் தமிழருக்கு பூரண மாநில சுயாட்சி வழங்கப்பட வேண்டும். இல்லையேல் இது பற்றிய தீர்ப்பு கொழும்பு மாநகரில் இரத்தத்தினால் எழுதப்படும்.

இந்திய உயர்நீதிமன்ற முன்னாள் நீதியரசர் திரு. வி. ஆர். கிருஷ்ண ஐயர், சென்னையில் இலங்கை - இந்திய மைத்திரி சங்கக் கூட்டத்தில் பேசுகையில் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்

திரு கிருஷ்ண ஐயர் மேலும் சொன்னதாவது;

பூகோள ரீதியாக, மொழி ரீதியாக, இனரீதியாக இலங்கைத் தமிழர் தனி இனம்.

அவர்களுக்கு முழு அளவிலான மாநில சுயாட்சி வழங்க இலங்கை ஜனாதிபதி தவறினால், அதற்கான தீர்ப்பு கொழும்பில் இரத்தத்தினால் எழுதப்படும்.

நேர்மையான அரசியல் தீர்வு ஒன்றை உருவாக்கும் காலம் வந்துவிட்டது.

எமக்கு இன்று தேவை மாநில சுயாட்சி; அதற்கு குறைந்த எதுவும் அல்ல.

— இப்படி முன்னாள் நீதியரசர் சொன்னார். (உ-எ)

புதுமையும் எழிலும் பல்சுவை வார இதழ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தமிழர் பிரச்சினை: ஒப்பந்தங்களும் தீர்வு முயற்சிகளும்

# வடக்கு-கிழக்கை ஒன்றுக

## சொல்லத் தயங்கும் புதிய திட்டம்

பகுதி 1

பிரிட்டிஷார் இலங்கையை விட்டு வெளியேறியதைத் தொடர்ந்து இலங்கையில் வாழ்ந்து வரும் தமிழ் சிங்கள இனங்களிடையே தோன்றியுள்ள அரசியல் நெருக்கடிகளைத் தணித்து அமைதியைப் பேண இரு இனத்தவர்களினாலும் ஏற்றுக்கொள்ளப்பட்ட திட்டங்களில் முதலாவதானது பண்டாரநாயக்கா-செல்வநாயகம் ஒப்பந்தம் இரண்டாவது எழுத்துருவில்லாத சிறிமா — செல்வநாயகம் இணக்கம், மூன்றாவது டட்லி—செல்வா ஒப்பந்தம், நான்காவது இந்திய அரசின் அனுசரணையோடு உருவாக்கப்பட்டு சிதைந்துபோன சர்வகட்சி மாநாட்டுக்கு சமர்ப்பிக்க தயாரிக்கப்பட்ட இணைப்பு "சி" என்ற ஆவணம். ஐந்தாவதாக வந்துள்ளது. தற்பொழுது ஜனாதிபதி ஜெயவர்த்தனவால் தயாரிக்கப்பட்டு அங்கீகரிக்கப்பட்ட அனைத்துக் கட்சி தலைவர்களுக்கும் கொடுக்கப்பட்டுள்ள திட்டம்.

இவற்றில் முதல் மூன்றும் சம்பந்தப்பட்ட இனங்களின் தலைவர்களினால் பேச்சுவார்த்தைகள் நடத்தி உருவாக்கப்பட்டவை நான்காவது இந்திய சமரச முயற்சியினால் உருவாக்கப்பட்டது ஐந்தாவது அதிகாரத்தைக் கைப்பற்றியுள்ள சிங்கள தலைவரினால் தயாரிக்கப்பட்டு அறிவிக்கப்பட்டது

### குடியுரிமை பிரச்சினை

இலங்கை சுதந்திரம் பெற்ற பின் முதலாவதாக தமிழ் மக்கள் எதிர்நோக்க வேண்டியிருந்தது குடியுரிமைப் பிரச்சினை மலையகத் தமிழர் முழுமையாக நாடற்றவராக்கப்பட்டனர். ஏனைய தமிழ் முஸ்லிம் மக்கள் சந்தேகப் பிரஜைகளானார்கள். அடுத்து தேசியக்கொடிப்பிரச்சினை உருவானது. அதற்கடுத்தாற்போல தமிழ் மக்கள் எதிர்நோக்க வேண்டியிருந்தது குடியேற்றத் திட்டங்களினால் தமிழ் நிலம் பறிக்கப்பட்ட பிரச்சினை. அடுத்து மொழி உரிமை மறுக்கப்பட்ட நிலையில் தமிழ் மக்களிடையே ஏற்பட்ட அரசியல் விழிப்புணர்ச்சி அவர்களை ஒருபொருட்டாகக் கணிக்காமல் தம் மிஷ்டப்படி ஆட்சி செய்ய முடியாது என்பதை சிங்களத்தலைவர்களுக்கு விளக்கியது. இதன் காரணமாகவே சிங்கள தமிழ் தலைவர்களிடையே ஒப்பந்தங்கள் உருவாயின.

### குடியேற்றம்

தமிழ் மக்கள் சார்பில் ஒப்பந்தங்களைச் செய்து கொண்ட தலைவர்கள் தமிழ் மக்கள் எதிர்நோக்கும் மிகப்பெரும் பிரச்சினையாக திட்டமிடப்பட்ட சிங்கள குடியேற்றங்களினால் தமிழ் நிலம் பறிபோவதையே கருதினார்கள். இவ்வகையில் ஆகக்குறைந்தது வடக்கு, கிழக்கு மாகாணங்கள் தமிழ் மாநிலங்கள் என்பதை சிங்களவர்கள் ஏற்க வேண்டுமென்றும் இம்மாகாணங்களின் அரச அதிகாரங்கள் சிலவற்றையேனும் தமிழ் மக்களே பெற்றிருக்க வேண்டும் என்றும் குறிப்பாக குடியேற்றத் திட்டங்களைப் பொறுத்தளவில் வடக்கு, கிழக்கு மாகாணங்களில் குடியேற்றத் திட்டங்கள் அம்மாகாணங்களில் உருவாக்கப்படும் அரச அதிகார சபைகளினாலேயே நடத்தப்பெற வேண்டும் என்பதிலும் அக்கறை காட்டினார்கள்

பண்டாரநாயக்கா — செல்வநாயகம் ஒப்பந்தத்தில் கீழ்க்கண்ட இணக்கங்கள் காணப்படுகின்றன:

(உ) உத்தியோக மொழியின் அந்தஸ்தை அவ்வகையில் பாதிக்காது வடக்கு - கிழக்கு மாகாணங்களின் நிர்வாக மொழியாக தமிழே இருக்கும். வடக்கு -

### "செங்கோல்"

கிழக்கு மாகாணங்களில் வாழக்கூடிய தமிழ் பேசாத சிறுபான்மையினருக்கு வேண்டிய ஏற்பாடுகள் செய்யப்படும்.

டட்லி - செல்வா ஒப்பந்தத்தில் கீழ்க்கண்ட இணக்கங்கள் காணப்படுகின்றன

(1 தமிழ்மொழி (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் கீழ் தமிழை வடக்கு - கிழக்கு மாகாணங்களின் நிர்வாக மொழியாகவும் - பதிவு மொழியாகவும் ஆக்க வேண்டிய நடவடிக்கைகள் விரைவில் எடுக்கப்படும்

(2) நீதிமன்றமொழி சட்டத்தை திருத்தி வடக்கு-கிழக்கு மாகாணங்களில் வழக்குகளை தமிழில் நடத்தவும் பதியவும் வேண்டிய ஏற்பாடுகளைச் செய்ய வேண்டுமென்பதே தமது கட்சியின் கொள்கை என திரு சேனநாயக்கா விளங்கப்படுத்தினார்.

(3) குடியேற்றத் திட்டங்களின் கீழ் காணிகள் வழங்கப்படுமிடத்து வடக்கு - கிழக்கு மாகாணங்களில் கீழ்க்கண்ட முன்னுரிமைகள் பேணப்ப வேண்டுமெனத் திரு. சேனநாயக்கா மேலும் ஒத்துக்கொண்டார்

(அ) வடக்கு - கிழக்கு மாகாணங்களிலுள்ள காணிகள் முதற்கண் அம் மாவட்டத்திலுள்ள காணியற்றவருக்கு வழங்கப்பட வேண்டும்

(ஆ) இரண்டாவதாக வடக்கு - கிழக்கு மாகாணங்களில் வசிக்கும் தமிழ் பேசும் மக்களுக்கு வழங்கப்பட வேண்டும்.

(இ) மூன்றுவதாக இலங்கையின் ஏனைய குடிமக்களுக்கு ஆனால் இவர்களில் இலங்கையின் ஏனைய பகுதிகளிலுள்ள தமிழ் மக்களுக்கு (பிரசைகள்) முன்னுரிமை வழங்கப்படல் வேண்டும்.

சிறிமா - செல்வநாயகம் இணக்கம் எழுத்துருவில் இல்லை

இணைப்பு 'சி' என்ற ஆவணத்தில் கீழ்க்கண்டவை இடம்பெறுகின்றன

1. மாவட்டத்தில் சர்வஜன வாக்களிப்பு மூலம் ஏற்றுக்கொள்ளப்படும் மாவட்ட அபிவிருத்தி சபையின் தீர்மானத்தின் பேரில் ஒரு மாகாணத்திலுள்ள மாவட்டங்கள் தமக்குள் ஒன்றாகவோ பலவாகவோ இணைந்து பிரதேச சபைகளை உருவாக்கிக் கொள்ளலாம்.

2 வடக்கு - கிழக்கு மாகாணங்களிலுள்ள மாவட்ட சபைகள் பெரும்பான்மை உறுப்பினர்களின் ராஜினாமா காரணமாக செயற்படாமல் இருப்பதால் அம் மாவட்ட சபைகள் அம் மாகாணத்திற்குள் இணைந்ததாக ஏற்றுக் கொள்ளப்படவேண்டும்.

3. வடக்கு - கிழக்கு பிரதேசங்களில் உள்நாட்டுப் பாதுகாப்புக்குப் பொறுப்பான பொலிஸ் படை இப்பிரதேசங்களிலுள்ள வெவ்வேறு இனமக்களின் எண்ணிக்கையை பிரதிபலிக்கும்

4 குடியேற்றத் திட்டங்கள் இன விகிதத்தின் அடிப்படையில் செயற்படவேண்டுமென்பதோடு பிரதேச இனத்தொகையில் எவ்வித மாற்றத்தையும் செய்யப்படாது.

### புதிய திட்டம்

ஜனாதிபதி ஜெயவர்த்தனவினால் வெளியிடப்பட்டுள்ள திட்டங்களில் வடக்கு-கிழக்கு மாகாணங்கள் என்ற பதத்தையே காணவில்லை அவருடைய அறிக்கையில் 23, 26, 29ம் பந்திகளில் இப்பதம் காணப்படுகிறது ஆனால் அது பழைய சரித்திரத்தைக் கூறும் வகையில் இடம்பெற்ற கூற்றுக்கள். 23ம் பந்தியில் டொனமூர் கமிஷனர்கள் 1928 இல் மூன்று சன்னாட்சி பெற்ற பகுதிகளை உருவாக்கலாம் எனக்கூறினார்கள் என்றும் அவ்வகையில் அவர்கள் கூறிய பகுதிகள் வடக்கு - கிழக்கு மாகாணங்களை உள்ளடக்கிய ஒரு பகுதி,கண்டி மாகாணங்களை உள்ளடக்கிய இரண்டாம் பகுதி. தென் மேற்கு மாகாணங்களை உள்ளடக்கிய மூன்றும் பகுதி என்று சரித்திரத்தைக் கூறும் வகையால் வடக்கு - கிழக்கு மாகாணங்கள் என்ற பதம் உபயோகத்திற்கு வருகிறது 26 ஆம் பந்தியில் திரு பண்டாரநாயக்கா வடக்கு மாகாணத்திற்கு ஒரு மாகாண சபை கிழக்கு மாகாணத்திற்கு இரண்டு அல்லது மேற்பட்ட மாகாணசபைகளும் அமைக்க ஒத்துக் கொண்டாரென்றும் — 29-ம் பந்தியில் வடக்கு மாகாணத்தில் 4 மாவட்ட சபைகளும் கிழக்கு மாகாணத்தில் உள்ள மூன்றில் இரண்டு மாவட்ட சபைகளும் இயங்கவில்லை என்றும் சரித்திரக்கதை கூறும் வகையல்ல வடக்கு-கிழக்கு மாகாணங்கள் என்ற சொற்பிரயோகம் இடம்பெறுகிறது (தொடரும்)

அடுத்த வாரம்: பகுதி - II

---

## அரசாங்க அலுவலகங்களில்

"சிகதி"

### நிதானத்துடன் அணுகவேண்டும்

சில ஆண்டுகளுக்கு முன்னதாக ஆரம்பிக்கப்பட்ட குடும்ப நீதி மன்றங்களும் குடும்ப ஆலோசகர்களும் குறிப்பிடத்தக்க பெறுபேறுகளை பிரச்சினைக்குரிய விடயங்களில் தீர்த்து வைத்து வரவேற்கப்பட வேண்டியதொன்றாகும். பல காலம் தீர்வு காண முடியாத விடயங்களில் குடும்ப ஆலோசகர்கள் நம்பிக்கையையும் நல்லெண்ணத்தையும் சம்பந்தப்பட்ட தரப்பினர்களுக்கிடையில் ஏற்படுத்தி பிரச்சினைகளை பொறுமையுடனும் நிதானத்துடனும் அணுகியது தான் இதன் வெற்றிக்குக் காரணம் எனிறும் மிகையாகாது மேலும் சரியான முறையில் செய்வதற்கு அரசு போதிய இடவசதி தளபாடங்கள் முதலியவற்றைக் கொடுத்து உதவுவது இச்சேவையைச் செவ்வனே செய்வதற்கு உதவும்.

* * *

இலங்கை மின்சார சபைக்கு யாழ் அபிவிருத்திச் சபை மின் பாவனையாளரிடமிருந்து பெறுவதைவிட இரட்டிப்பாக அதிக பணத்தை செலுத்துவதை சட்டத்தையும் ஒழுங்கையும் பேணும் எவரும் அனுமதிக்க முடியாது. சந்தர்ப்பத்தையும் சூழ்நிலையையும் பயன்படுத்தி இப்படியான நிகழ்வுகளுக்கு சிலர் அனுசரணையாக இருந்து வருவது நல்லதல்ல அபிவிருத்திச் சபை பணியாளர்களும், சகல பொது மக்களும் ஒத்துழைப்புக் கொடுத்து இந்த சட்ட விரோதமான செயல்களை நிறுத்த வேண்டும். வீட்டில் ஒழுக்கம் பேணப்பட்டால் தான் நாட்டில் ஒழுங்கு ஏற்படும்.

* * *

போக்குவரத்து அமைச்சர் தற்பொழுது நாட்டில் ஏற்பட்டிருக்கும் பிரயாணக்குறைபாடுகளைக் கவனத்திற்கு எடுத்துக்கொள்வது மிகவும் அவசியமானதாகும் இங்கே போக்கு வரத்துச் சேவை ஸ்தம்பிக்கும் நிலைக்கு வந்துள்ளது. வருடா வருடம் மோட்டார் திணைக்களப் பகுதி தமது வரியை அறவிட்டால் மட்டும் போதாது

* * *

கூட்டுறவு திணைக்களத்தின் மேற்பார்வையில் இயங்கும் ப. நோ. கூ. சங்கங்கள் தற்பொழுது செயற்பட்டு வரும் முறைகள் பற்றி ஓர் வாசகர் தெரிவித்திருக்கும் கருத்து வருமாறு:- பணத்தைச் செலவு செய்வதில் தவறான வழிமுறைக் கையாளுதல், வாகனங்களை கட்டுப்பாடற்ற முறையில் உபயோகித்தல், தனியார் துறையினரிடமிருந்து கூற்றுவிலைகள் கோராது பொருள்களைக் கொள்வனவு செய்தல், தனியார் காசோலைகளை மாற்றி அதனால் வங்கியில் பணம் இல்லை என்ற நிலையில் பணம் முடக்கப்படுதல், கட்டிடங்கள் கட்டப்படும் பொழுது கேள்விகள் கோராது விடுதல், சேர்வுகளை அறவிட நடவடிக்கை எடுக்க தயங்குதல், தகுதியற்றவர்களையும் தேவையற்ற நிலையிலும் விளம்பரப்படுத்தாது நியமனங்கள் செய்தல். இதனை சம்பந்தப்பட்ட திணைக்களம் கவனத்திற் கொண்டு குறைபாடுகளை நீக்கி நடவடிக்கைகள் மேற்கொண்டால் சங்கங்கள் திருந்த வழி உண்டு.

* * *

நீதித்துறையை நிர்வகிப்போருக்கு பலகுறைபாடுகள் இருப்பதை நீதிச்சேவை சங்கத்தினரால் பிரசுரிக்கும் செய்தித்தாள் வெளிப்படுத்தியுள்ளது. அதில் முக்கியமானவை சம்பளம், வீடு, வாகன வசதி இவற்றினை அரசு உரிய முறையில் செய்தால்தான் நீதிபதிகளினால் அன்றைய கடமைகளை இலகுவாகவும் திருப்தியுடனும் செய்ய முடியும் என்பது அச் செய்திக்குறிப்பில்இருந்து அறிய முடிகிறது. இதனை அரசு தாமதமாக்குவது அர்த்தமற்றதாகும். அரசாங்க திணைக்களங்கள் சில நவீன ஹோட்டல்கள் போல் பல வசதிகளுடனும் காணப்படுகின்றன. திணைக்கள அதிகாரிகள் உபயோகிக்கும் வாகனங்கள் மிகவும் நவீனமானவை. அமைச்சர்களுக்கு அண்மையில் இருப்பதால் இத்தனை வசதிகள் போலும். எனினும் நாட்டின் நீதியை நிர்வகிக்கின்ற நீதிபதிகளுக்கும் அச்சேவையைச் சார்ந்தவர்களும் திருப்தி அளிக்கும் வகையில் சகல வசதிகளையும் வழங்கினால் என்ன? திறைசேரி வங்குரோத்தாகி விடுமா?

---

LADIES' ACADEMY

(Regd. No: 15918)
VICTORIA ROAD.
JAFFNA.

Phone: 22365

மனையியல் டிப்ளோமா வகுப்புக்கள்

| | |
|---|---|
| கேக் ஐசிங் | சமையற்கலை |
| தையற்கலை | கை வேலை |
| பூ வேலை | கோலம் |
| கூந்தல் அலங்காரம் | கண்ணாடிகளிலும் துணிகளிலும் |
| ஆங்கிலம் | வர்ணம் தீட்டுதல் |

இத்துடன் இலவச முதலுதவி வகுப்புக்களும் நடைபெறும்.

* பயிற்சிகள் யாவும் 9 மாதம் நடைபெற்று சிறப்புச் சான்றிதழும் வழங்கப்படும்.

புதிய வகுப்புக்கள் ஆரம்பம்: 18-07-86

பிரயாண ஒழுங்குகள்

* கனடா
* ஜேர்மன்
* பிரான்ஸ்
* டென்மார்க்

ஆகிய நாடுகளுக்கு பிரயாண ஒழுங்குகளை மேற்கொள்ளவும்

மற்றும்

பாஸ்போட், விசா, பொன்ட், (BOND) ரிக்கட்

ஆகியனவும் செய்துகொடுக்கப்படும்.

INTERSUN GROUP

சின்னத்தம்பி அவெனியூ,
(மகளிர் கல்லூரிக்கருகாமையில்)
மானிப்பாய்.

---

# தொழிற்சங்க வரலாற்றில் 'நித்தி' ஓர் ஒளி விளக்கு

## தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தின் தந்தையாகவும் விளங்கியவர்

"நித்தி" இந்த முன்றெழுத்து ஆயிரத்துத் தொள்ளாயிரத்து நாற்பதுகளிலிருந்து சுமார் மூன்றரைத் தசாப்தங்களாக இலங்கையில் தொழிற்சங்க, சமூகசேவைத் துறைகளில் ஒருபுகழ் பூத்த பெயராக விளங்கியது

சட்டத்துறையில் அமரர் ஜி. ஜி பொன்னம்பலத்தின் ஆங்கிலச் சொல்லாட்சி பெற்றிருந்த செல்வாக்கைத் தொழிற்சங்கத் துறையில் நித்தியின் ஆங்கிலச் சொல்லாட்சி பெற்றிருந்தது. அ. லி. சே. சங்கத்தின் கூட்டங்கள் அந்நாளில் கொழும்புச் செயலகத்தின் கராஜ்களில் நடைபெற்றபோது இவரது ஆங்கிலச் சொல்லாட்சித் திறனால் கவரப்பட்ட சில அமைச்சர்களே செயலகத்தின் மேற்றளத்தில் இவரது சொற்பொழிவைக் காத்து நின்று கேட்டதுண்டு.

'தேசியத்தொழிற்சங்கவாதி எனவும் தொழிற்சங்கத் துறையில் ஒரு 'தங்கமூளை' எனவும் இவர் வர்ணிக்கப்பட்டதுமுண்டு.

அ லி.சே. சங்கம் 1920 இலேயே ஆரம்பிக்கப்பட்ட போதிலும் 1945 வரை அதன் தொழிற்பாடு மந்தகெதியிலேயே இருந்தது 1945, 46 இல் நித்தி செயலாளராக இருந்த போதே அப்போதைய இளம் இடதுசாரிகளான டொக்டர் கொல்வின் ஆர். டி சில்வா என். எம். பெரேரா போன்றோரது தொடர்புடன் அ. லி. சே. சங்கம் உத்வேகம் பெற்று இலங்கை அரசியலின் ஒரு உந்துசக்தியாக விளங்கத் தலைப்பட்டது.

> அமரர் கே. சி. நித்தியானந்தா புகழ் பூத்த தொழிற் சங்கவாதியாவார். தமிழ் அகதிகள் புனர்வாழ்வுக் கழகத்தின் ஆரம்ப கர்த்தாவாகவும் பணம் பொருள் அபிவிருத்திச்சபையின் முதல் தலைவராகவும் இருந்து அவர் ஆற்றிய பணிகளை நாடறியும்.
>
> அன்னாரின் 6 ஆவது சிராத்த தினம் இன்றாகும். அதனையொட்டி இக்கட்டுரை இங்கு பிரசுரமாகிறது.

வரலாற்றுப் புகழ்மிக்க 1947 மே, யூன் வேலைநிறுத்தப் போராட்டம் 1953 ஓகஸ்ட் அரிசி வெட்டிற்கெதிரான ஹர்த்தால்; 1958 மே மாத பொது வேலைநிறுத்தம் என்பன எல்லாவற்றிற்கும் பின்னால் நித்தியின் [illegible] முதல்வராக இ. தே. ஆட்சி அரசாங்கம் நித்தியும் அதனை ஐ. தே. கட்சி அரசாங்கம் தடைசெய்ததெனவும் அறியப்படுகிறது. பின்னாளில் அ லி. சே. சங்கத்தின்Red Tape பத்திரிகையின் ஆசிரியராயிருந்தார்

[illegible] அவரது தொழிற்சங்க ஈடுபாட்டிற்காகப் பல்வேறு இடங்களுக்கு இடம் மாற்றியது. ஆனால் எங்கொரு இடம் மாற்றலாகிச்சென்றாலும் அங்கங்கெல்லாம் அ லி. சங்கத்தின் கிளைகளை உருவாக்கினார் நித்தி.

இந்நிலையில் 1952-53 இல் அ லி சே சங்கத்தின் தலைவராக இருந்த போது அ. லி சே சங்கத்திற்கென ஒரு தலைமையகம் அமைக்க அவர் முடிவுசெய்தார். அரசாங்கத்திடமிருந்து 99 வருடக் குத்தகையில் காணி பெற்றார். அன்றுவரை யாருமே செய்திராத செயலை கட்டிட அமைப்புக்கென ஒரு கவிப் நடத்தலை மேற்கொண்டு அந்நாளிலேயே ஏறத்தாழ ஒன்றரை இட்சம் ரூபா நிகரஇலாபம் பெற்றார்.

இன்று கொழும்பு பார்சன்ஸ் வீதியில் பன்மாடிக் கட்டிடமாய்க் கம்பீரமாய்க் காட்சி தரும் அ லி. சே. சங்கத்தின் தலைமையகத்தின் ஒவ்வொரு செங்கலிலும் நித்தியின் பங்களிப்பினை எடுத்துக் கூறும்.

ஆரம்பகாலத்தில் Public Services League என்னும் பத்திரிகையை நித்தி நடத்தினார் என

1953 இல் இன்றைய ஜனாதிபதி ஜெயவர்த்தன நிதி அமைச்சராயிருந்து சமர்ப்பித்த வரவு செலவுத் திட்டத்தை விமர்சித்ததற்காகவேலையிடை நிறுத்தம் செய்யப்பட்டவர்

தேசிய தொழிற்சங்கங்களின் தேசிய முலாம் வெறும் பகட்டென உணர்ந்து கொண்டதால் ஆரம்பத்தில் தம்மால் எதிர்க்கப்பட்டுவந்த மொழி வழித் தொழிற் சங்கங்களுடன் இணைந்து கொள்ளாவிட்டாலும் தமக்கு ஏற்பட்ட திருப்புமுனையான 1966 ஜனவரி 8 இன் பின் மொழிவழித் தொழிற் சங்கங்களின் முன்னோடியான அரசாங்க எழுதுவினைஞர் சங்கத்தின் ஆலோசகராக விளங்கினார்.

இடமாற்று சபையில் அரசாங்க எழுதுவினைஞர் சங்கத்தின் நோக்குநர் அந்தஸ்துகூடப் பறிக்கப்பட்டபோது, அதற்கெதிராகப் போராடி சபையின் முழு உறுப்பினர் அந்தஸ்தே கிடைத்திட உதவினார் அரசாங்க எழுதுவினைஞர் சங்கம் அனைத்துலக அரச சேவைத் தொழிற் சம்மேளனத்தில் இணைந்தி

(7 ஆம் பக்கம் பார்க்க)

சி. சோதிநாதன்

---

நீர்வேலி
செல்வன். தம்பிராசா
சித்திரவடிவேல் (சித்திரன்)
அவர்களின்

### 3வது ஆண்டு நினைவஞ்சலி



அன்னை மடியில்
06 - 7 - 1963

ஆண்டவன் அடியில்
12 - 07 - 1983

பாசமலராய் மலர்ந்து, அறிவால் எங்கும் மணம் வீசி, அன்பால் உயர்ந்த நற்பண்பால், அரிய நற்சேவையினால் உலகில் நல்லோனாய், வல்லோனாய் எல்லோர் உள்ளத்திலும் உறைந்து திடீரென உதிர்ந்துவிட்ட எம் அன்புச் செல்வமே!

எங்கள் எல்லோருக்கும் ஒளிவீசுவாய் என்று எதிர்பார்த்திருந்தோம். எம்முள்ளத்தில் இருளைப் படியவைத்து எங்கோ ஒளித்திட்டாய்!.

இன்று உம்மைத் தெய்வமாக மதித்து என்றும் அஞ்சலி செய்கின்றோம்.

நீர்வேலிச்சந்தி,
நீர்வேலி.

அன்புத் தந்தை, தாய்
சகோதரிகள் செல்வம்
நந்தினி, செல்வி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


# அருள் வேல் அழகன்

# மாவைக் கந்தன்

ஈழமணித் திருமணி நாட்டின் அணிகலமாகவும், பழமைக்குப் பழமையாய், புதுமைக்குப் புதுமையாய் வேதாகம நெறிமுறை சார்ந்து ஞானப் பெருங்கோயிலாக விளங்கும் மாவிட்டபுரம் கந்தசுவாமி கோயிலின் ஆடி மகோற்சவங்கள் 12-7-86 சனிக்கிழமை கொடியேற்ற விழாவுடன் ஆரம்பமாகி 21-7-86 திங்கட்கிழமை ஸ்ரீ விசாலபஞ்சப் பவனியுடனும், 26-7-86 திருக்கைலாயபர்வத ஊர்திப் பவனியுடனும், 30-7-86 புதன்கிழமை திருக்கார்த்திகைத் திருவிழாவுடனும் 2-8-86 லிருந்து 6-8-86 வரை முறையே வேட்டைத் திருவிழா, தெரியசப்பறம், பஞ்சரதோற்சவம், ஆடிஅமாவாசைத் தீர்த்தம்-பழனியாண்டவர் உற்சவத்துடன் நிறைவுற ஒழுங்குகள் செய்யப்பட்டுள்ளன.

தமிழர்களது பூர்வீக குடியேற்றத்திற்கு நிலைக்களனாக அமைந்த மாவிட்டபுரம் கந்தசுவாமி கோயில் ஏழாம் நூற்றாண்டில் சோழஇளவரசி மாருதப்புரவீகவல்லியினால் ஸ்தாபிக்கப்பட்டது. அதற்கு முன் ஐயாயிரம் வருஷங்களாக இக்குறிச்சி 'கோயிற்கடவை' எனும் பெயரில் புனித யாத்திரை ஸ்தலமாக இருந்துள்ளது.

ஆயிரத்து முந்நூறு ஆண்டுகளுக்கு முன்னே கன்ம வினைப் பயனால் குன்ம நோயாலும், குதிரை முகத்தாலும் பீடிக்கப்பட்ட தென்னகத்து இளவரசி மாருதப்புரவீகவல்லி, தன் தீராநோய் தீர்க்கத் தலயாத்திரை பல செய்தும் தீர்த்தங்கள் பல ஆடியும் பயன் கிட்டவில்லை. கடைசியாக நகுலமலை சேர்ந்து காசி விஸ்வநாத சுவாமியைத் தொழுது மலையடிவார நன்னீர் ஊற்றுக்கள் கடலுடன்



சங்கமிக்கும் புனிதப் புனலாடி, முருகப்பெருமானை நீள நினைந்து நித்தலும் கைதொழுது தனது மாறுப்பிணி தீர்ந்தாள்.

மகிமை பெறும் இந்த அருளாடல் நிகழ்ச்சியின் பின்னணியிலே அம் மாதரசி கட்டி எழுப்பிய பேராலயமே இம் மாவை ஆலயம். இதனை ஆட்சி செய்யத் தில்லை மூவாயிரவர் முதல்வர் சிதம்பரம் தீட்சிதர் பரம்பரையினரை இங்கு நிலைபெற வைத்தார் அம் மாதரசி என்பதும் வரலாறு தரும் செய்தி.

தற்போதுள்ள மாவை ஆதீன கர்த்தர் மஹாராஜஸ்ரீ சு. து. ஷண்முகநாதக் குருக்கள் அவர்கள் இச் சிதம்பர ஷிதிரர் பரம்பரையினரேயாகும்.

வனிதையர்களை இரு வருடன், வானுயரும் மலைகளிலும், ஞானியர்கள் உளமதிலும் வண்ண மயிலூர்தியாக வந்தருளும் வடிவழகன். இம் மாவையம்பதியிலே 'பந்தாகினி தந்த வரோதயன்'' -- 'காங்கேயன்' - என்ற திருநாமத்துடன் மாருதப்புரவீகவல்லி காலந் தொட்டு அருளாட்சி நடத்தி வருகிறான் ஆராத காதலுடன் ஆறெழுத்தோதித் தன்னடி போற்றி அல்லி முடி சூட்டவல்ல அடியார்க்கு நல்ல பெருமானாகவும், அண்டத்து இறைவன் பொன்முடிக்கும், அமலச்சமலன் மணிமுடிக்கும் அமரர் முனிவர் தலைகளுக்கும், அணியப் பணியக் கிடையாத தன் தண்டையணி வெண்டையங் கிண்கிணி சதங்கை கொஞ்சும் சிவந்த பாதத்தைத் தந்தருளும் செம்பொருட் செல்வனாகவும், விளங்குகிறான்

அற்றார்க்கும் அலந்தார்க்கும் தேறுமுகமின்றித் தவிர்க்கும் ஆறுமுகங்காட்டி அருள் பொலி உருக்காட்டித் தன் அருளாலும், அழகாலும் அவர்தம் பாவம் தடிந்து தாபம் தவிர்க்கும் தனிஞான மூர்த்தியாகவும், தன் தெய்வ நிறை சந்நிதி முன்னின்று கைநீட்டித் திருவருட் திறங்கள் உன்

(6 ஆம் பக்கம் பார்க்க)

மாவிட்டபுரம் கந்தசுவாமி கோயில் வருடாந்த மகோற்சவம் இன்று தொடங்கும் கொடியேற்றத் திருவிழாவுடன் ஆரம்பமாகின்றது.

தொடர்ந்து 25 நாள் நடைபெறும் திருவிழா ஆடி அமாவாசைத் தீர்த்தத் திருவிழாவுடன் 6-8-86 அன்று நிறைவு பெறும்.

## கடல் கடந்த கடிதம்

### பொன் மானு? கவனம்!

தம்பி,

தீர்வுக்காகப் பேச்சுகள் - எதிர்ப்பு ஆரவாரம் - எங்கும் பரபரப்பு - இவை பற்றிய ஆவலோடு உனது கடிதம் கிடைத்தது ஏதோ ஒரு முடிவு எப்போதாவது வந்துதான் தீரவேண்டுமல்லவா?

விட்டுக் கொடுத்தாவது தீர்வுகாண வேண்டியது அவசியம் தான். ஆனால், தம்பி விழிப்பாயிருக்க வேண்டும்! கிடைக்கக் கூடியதை, சட்டப் பாதுகாப்போடு பெற்றுவிட வேண்டும். சட்ட அறிஞர்கள் விழிப்பாயிருந்து நுணுகி ஆராய வேண்டும். ஒரு சொல் மாறினாலும், கிடைத்தவை கை நழுவி விடும்!

முன்னொருபோது, தம்பி, Shall என்பதற்குப் பதிலாக May என்ற சொல்லைப் பயன்படுத்திச் சட்டமியற்ற முயன்றார்களாம்! எல்லாவற்றையும் மேய்ந்துவிட முயன்றார்களாம்! எதிரியோடு இணங்கிப் போ - ஆனால் முற்று முழுதாக நம்பிக் கெடாதே! இதனைத்தான் ஔவையார், ஒன்னாரைத் தேறேல்!' எனக் கூறி வைத்தார். (ஒன்னார்-பகைவர், தேறல் - நம்பாதே)

பிரசார சாதனங்கள் பூரணமாகச் செயற்படும் ஒதுங்கியிருந்தோர் ஓலமிடவருவர்; அன்புப் போதனை முழங்கும்! மாயவலை விரியும் — அழகிய பொன்மான்கள் உலாவும் வலைக்குள் விழுந்து விடாதே பொன்மானைக் கண்டு பேதலித்தாலும், தம்பி, பொன்மானைக் கண்டு ஏமாந்து விடாதே!

ஏதோ ஒரு முடிவை ஏற்க வேண்டும்; ஆனால் ஏமாறக் கூடாது! எடுப்பார் கைப்பிள்ளையாகக் கூடாது! இந்த நெருக்கடி நிலையிலும், தம்பி, ஔவையை மறந்து விடாதே! 'ஒன்னாரைத் தேறேல்!'

அன்புடன்
— சிவா —

## புத்தகம் சேகரிப்பதும் ஒருவிதக் கலையே

சிலர் தபால் தலைகளைச் சேர்க்கிறார்கள் சிலர் பேனாக்களைச் சேர்க்கிறார்கள். சிலர் பூச்செடிகளைச் சேர்க்கிறார்கள்.

இப்படி பொழுதுபோக்காக எதையாவது சேர்ப்பது என்பது நம் நாட்டிலும் இன்று நிறைந்த அளவில் பரவி வருகிறது.

காசுகளைச் சேர்த்து வைப்பவர்கள், பழைய காசுகளை ஏகப்பட்ட விலைக்கு விற்கிறார்கள்.

புகழ்பெற்ற மனிதர்களுடைய கையெழுத்துக்களை சேர்த்து வைத்தால் பிறகு இவை ஏகப்பட்ட விலைக்குப் போகிறது

இதைப் போல புத்தகங்களைச் சேர்த்து வைப்பது பலருக்கு இப்போது புதுப் பொழுதுபோக்காகி வருகிறது. ஒவ்வொருவரும் நூற்றுக்கணக்கில், ஆயிரக்கணக்கில் சொந்தமாகப் புத்தகங்களை வாங்கிச் சேர்த்து வருகிறார்கள்.

மற்றப் பொழுதுபோக்குகளைக் காட்டிலும் இந்தப் பொழுதுபோக்கால் நாட்டிற்கும் நல்லவர்களுக்கும் பயன் இருக்கிறது.

தொகுப்பு- க. கனகராசா

# ஜெயவர்த்தன விடும் அரசியல் சவாரி

## அவரையே வில்லங்கத்தில் மாட்டலாம் என எச்சரிக்கிறது 'புரொண்ட் லைன்' கட்டுரை

அரசியல் மயமான இலங்கைச் சமூகம் தங்கள் ஜனாதிபதியை 'ஜே ஆர்' என்றே அழைக்கின்றது.

கிராமங்களில் கூட 'ஜே. ஆர்' தான்

அரசியல்வாதிகள் மீது சவாரி விடுவதில் புத்திக் கூர்மை, தந்திரம் படைத்தவர் என்று நீண்டகாலப் பேர் பெற்றவர் 'ஜே ஆர்.'

இச் சிறப்பை அவரின் எதிர்ப்பாளர்கள், ஆதரவாளர்கள், பரிந்து பேசுபவர்கள் ஆகியோர் எடுத்துச் சொல்வர்.

இந்த இடத்தில் அவரின் மரபுவழியான விவேகத்துக்கும், யதார்த்த பூர்வமாக இலங்கைத் தமிழர் பிரச்சினையைக் கையாளுவதில் காணப்படும் முறைக்குது பொருத்தம் காணவும் முடியாத காரியமாக உள்ளது.

இலங்கைத்தமிழ் அரசியல் தலைமைத்துவத்தின் மீது 'சவாரி விடுவதில்' கொஞ்சக் காலம் அவர் ஈடுபட்டார்.

யுத்த நிறுத்தம், திம்பு மாநாடு என்ற பேரில் போராளிகள் மீதும் கூட அவர் 'சவாரி விட்டார்.

இந்தியாவின் 'நல்லா' தரவை'ப் பயன்படுத்தி ஒரு புறம் பேச்சுக்கள் என்று கூறிக்கொண்டு அடக்குமுறை இராணுவ உத்தியை மறுபுறம் கையாண்டு வந்தார்.

உண்மையில் பிரதமர் ராஜீவ் காந்தியின் உதவியுடன் தான், இந்திய விமானம் ஒன்றில் சூறாவளியினால் பாதிக்கப்பட்ட பங்களாதேஷுக்கு ஜே. ஆர், பிரதமர் ராஜீவுடன் போனார்.

ஆனால் இந்தியப் பிரதமர் ராஜீவ் காந்தி மீதும் ஜே ஆர். தான் சவாரி விட்டு அழைத்துச் சென்ற மாதிரிக் காணப்பட்டது.

தீவில் உள்ள தமிழர்கள் மத்தியில் நிலவும் அபிப்பிராயத்தில் இதுவும் ஒன்று.

நாசகாரச் சவாரிக்கு...!

இன்று எத்தனையோ விதமான தந்திர விளையாட்டுக்களின் பின்னர் வயதாகிக் கொண்டிருக்கும் இலங்கை ஜனாதிபதி தீவுக்குள்ளேயும் வெளியேயும் உள்ள சுதந்திர மான அவதானிகளின் கேள்வி ஒன்றுக்கு ஆளாகி உள்ளார்.

அவர், தன்னையும், தனது அரசாங்கத்தையும் இலக்கு இல்லாத வில்லங்கமான — நாசகரமான சவாரிக்கு எடுத்துச் செல்கின்றாரா?

இதுவே அந்தக் கேள்வி.

இராணுவத்தர்பார், மிகையான சாதனைகள், இராணுவத் தீவிரவாதம் ஆகியவற்றுக்கு மத்தியில் இலங்கையின் தமிழ்ப் பிரதேசங்களான வடக்கு, கிழக்குப் பகுதிகளில் மட்டும் என்ன, தீவு முழுவதிலுமே 1983 பிற்பகுதியில் இருந்ததை விட நிலைமை மிக மோசமாகவே உள்ளது.

1983 ஜூலையில் இடம் பெற்ற தமிழ் இனக் கொலையைத்தொடர்ந்து தான் இந்திய ஆதரவுடனான இணைப்பு - சி உருவாகி அரசியல் தீர்வு முயற்சிக்கு வித்திடப்பட்டது

இந்தச் சூழ்நிலையில் தான் அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சிகளின் மாநாடு கூட்டப்பட்டுள்

(7ஆம் பக்கம் பார்க்க

இலங்கைத் தமிழ் அரசியல் தலைவர்கள், விடுதலைப் போராளிகள், இந்தியப் பிரதமர் ராஜீவ் ஆகியோர் மீது 'சவாரி விட்டவராகக்' கருதப்படும் ஜனாதிபதி ஜெயவர்த்தன. இப்போது தன்னையும் துன்பத்திலும் தடுமாற்றத்திலும் தவிக்கும் அரசாங்கத்தையும் இலக்கு இல்லாத 'நாசகரமான சவாரிக்கு' எடுத்துச் செல்கிறாரா?

இப்படி சுதந்திரமான அரசியல் அவதானிகள் கேள்வி எழுப்பியுள்ளனர் என்று 'புரொன்ட லைன்' ஜூன் 28-ஜூலை 11 இதழில் வெளியான கட்டுரையில் குறிப்பிடப்படுகிறது.

அக்கட்டுரையின் முதலாவது பகுதி இங்கு பிரசுரமாகின்றது இரண்டாவது பகுதி நாளைய உதயனில் வெளிவரும்.

## வெற்றிக்கான வழிமுறை

எல்லா உயிர்களுக்கும் வெளிச்சமே உயிர் நாடியாக விளங்குகிறது. வெளிச்சத்தைக் குறித்து விளக்கு தரும் விளக்கத்தைப்பார்ப்போம்.

திரியும் எண்ணெயும் தொடர்ந்து எரிக்கப்படுவதால் அதன் விளைவாகப் பிரகாசம் ஏற்படுகிறது. அங்கே விளக்கு என்ன சொல்கிறது தெரியுமா? உங்களைச் சும்மா விட்டு வைத்தால் நீங்கள் உடனேயே அணைக்கப்படுவீர்கள். சரீர சுகத்தை நீங்கள் நாடினுல், புலன் வழி இன்பங்களிலும் ஆடம்பரங்களிலும் உங்கள் நேரத்தை பாழாக்கினால், உங்களுக்கு வாழ வழி இல்லாது போய்விடும்.

செயல்புரியாமல் சோம்பியிருத்தல் மரணத்தை ஏற்படுத்துகிறது.

செயல்புரியும் தன்மையே வாழ்வு தேங்கிக் கிடக்கும் குட்டையையும் பாய்ந்தோடும் சிற்றுறையும் பாருங்கள் ஓடும் நதியில் தெளிந்த நீர் சதா புதிதாகவும், தெளிவாகவும் குடிக்கக் கூடியதாகவும் பார்வைக்கு இனியதாகவும் இருக்கின்றது மாறாக குட்டை நீர் எவ்வளவு துர்நாற்றமுடையதும், அருவருப்புடையதும் அழுக்குடையதுமாக இருக்கிறது. வெற்றிபெற விரும்பினால் நதியின் தொடர்ந்த போக்கை சதா செயல் புரியும் பான்மையை தேர்ந்து கொள்ளுங்கள்.

எரிந்தால் தீர்ந்து விடுமே என்றெண்ணி திரியையும் எண்ணெயையும் நாசப்படுத்தும் ஒருவனுக்கு நல்வாழ்க்கைக்குரிய வழிவகை கிடையாது சதா முன்னேறிக் கொண்டும் சதா தன்னுடன் சேர்த்துக்கொண்டும் சூழ்நிலைக்குத் தக்கவாறு மாறியமைத்துக் கொண்டும் சதா தொழில் புரிந்து கொண்டும் இருக்கும் நதியின் கொள்கையைப் பின்பற்றுங்கள். வேலை செய்தல் சதா வேலை செய்தல் என்பதே வெற்றிக்குரிய முதல் வழிமுறையாகும்.

சுவாமி இராமதீர்த்தர்

# பண்டிதமணி: வரலாறும் காலமும்

### (!) பரீட்சை எடுத்த பண்டிதராவதற்கு எடுத்த முயற்சி

முற்காலத்தில் கண்டது கற்கப் பண்டிதராவர் என்னும் கருத்தில் நன்றாகப் படித்தவர்களைப் பண்டிதர் என அழைப்பது மரபாக நிலவியது. அந்த வகையில் சுன்னாகம் முருகேச பண்டிதரும் கந்தமடம் சுவாமிநாத பண்டிதரும் பெரும் புகழ் பெற்று விளங்கினார்கள். முருகேசபண்டிதர் காளமேகப்புலவரைப் போல இம்மென்னும் முன்னரே பாடல்கள் பாடவல்லவராயிருந்தார். அவர் இலக்கணவரம்பு கண்ட விவேக முறுக்கினால் பெரிய கண்டனப் புலியாயுமிருந்தார். அவர் சிலகாலம் தமிழ்நாட்டில் ஆசிரியராயும் இருந்தவர், ஆறுமுகநாவலரால் மதிக்கப் பெற்றவர்.

கந்தமடம் சுவாமிநாதபண்டிதர் தம் பையா உபாத்தியாயர் என வழங்கியவர். வித்துவசிரோமணி பொன்னம்பலபிள்ளை அவர்களிடம் முறையாகக் கற்றுப் பெரும் புலமையும்பேச்சு வன்மையும் பெற்றவர். தமிழ்நாட்டுத் திருக்கோயிற் பெருவிழாக்காலங்களில் ஆயிரக்கணக்கானோர் கேட்டின்புறும் வகையில் உரத்த குரலில் சைவப் பிரசாரஞ் செய்தவர்; திருச்செந்தூர், சிதம்பரம் முதலிய தலங்களில் சைவப்பிரகாசவித்தியாசாலைகள் தாபித்தவர், அச்சுக்கூடம் நிறுவி ஆறுமுகநாவலர் அவர்களின் நூல்களை அடக்க விலையிற் பதித்து வெளியிட்டவர், மூவர் அருளிய தேவாரப் பதிகங்களைத் தலவரிசை தவறுமல் அடங்கன் முறை என்னும் மகுடமிட்டு அழகாகப் பதித்தவர், அதுகாறும் திருவாவடுதுறையின் தம்பிரான்கள் திருக்கரங்களிலே மாத்திரம் தவழ்ந்த சிவஞானபோதவிருத்தி என்னும் திராவிட மாபாடியத்தை வடகோவைச் சபாபதி நாவலர் அவர்களின் தயாள குணத்தால் வெளிக்கொணர்ந்து, அச்சிலேற்றி எல்லோரும் படிக்கும் வகை செய்தவர். காசிவாசி செந்திநாதையர் அவர்களின் நூல்களையெல்லாம் நல்ல விலை கொடுத்து வாங்கிப் பிறருக்கு உபகரித்தவர், மேலைப்புலோலி கதிரைவேற்பிள்ளை அவர்கள் அருட்பா வழக்கில் வெற்றி பெற்றமையைப் பெருவிழாவாகக் கொண்டாடித் திருமுறைகளுக்குப் பெருமை தந்தவர், நாவலர் காவிய பாடசாலையிற் கற்று வந்த பண்டிதமணி அவர்களைத் தட்டிக் கொடுத்தவர்.

### "பண்டித பரீட்சைக்குப் பார்க்க அதிகமான அறிவு உனக்கு எப்பவோ வந்துவிட்டது"

பண்டிதமணி அவர்கள் நாவலர் காவிய பாடசாலையில் படித்து வந்த காலத்தில் தாம் பரீட்சை எடுத்த பண்டிதராதல் வேண்டும் என்றும், அப்பரீட்சையும் மதுரைத் தமிழ்ச் சங்கப் பரீட்சையாயிருத்தல் வேண்டும் என்றும் ஆசைப்பட்டார் ஆனால் புலவர் அவர்கள் தம் மாணாக்கனின் நோக்கத்தை அறிந்ததும் கண்டனத் தொனியோடு, "பண்டித பரீட்சைக்குப் பார்க்க அதிகமான அறிவு உனக்கு எப்பவோ உண்டாகிவிட்டது" என்று கூறினார். அந்தத் தொனியில், நீ பரீட்சை எடுக்கத்தான் வேண்டும் என்று விரும்பினால் புத்தகங்களையும் எடுத்துக்கொண்டு வெளியே போகலாம்'' என்னும் கருத்தும் சூசகமாக, மறைமுகமாக இருந்தது. ஆனால் புலவர்கள் அவர்கள் அந்தக் கருத்தை வாய்விட்டுச் சொல்லவில்லை.

தமிழர் வரலாற்றிலே முத்தமிழ், முச்சங்கம், மூவேந்தர் என்னும் பெயர்கள் மிகப் பழைய வழக்குகளாகும். தமிழ் வழங்கிய பழைய தேசத்திலே முச்சங்கங்கள் நிலவின என்றும் அவற்றுள் முதலிரு சங்கங்களும் நிலவின இடங்கள் கடல் அரிப்பால் அழிந்தன வென்றும் கூறுவர். பஃறுளியாற்றுடன் பன்மலையடுக்கத்துக் குமரிக் கோடும் கொடுங்கடல் கொள்ள என்பது சிலப்பதிகாரம் கடலரிப்பால் தென்னகத்து எஞ்சிய பகுதி ஆற்றிடைக் குறையாயமைந்த காரணத்தால் இலங்கை எனப் பெயர் பெற்றது. இது இலங்கியதால் இலங்கை எனப் பெற்றதுமாகும். பொன்போல் இலங்கியதால் ஈழம் எனவும் வழங்கியது போலும். இலங்கையைச் சேர்ந்த பெருநிலப்பரப்பு அழிந்து போன போது தமிழ்ச் சங்கங்கள் நிலவிய தென் மதுரையும் அழிந்து போனது.

பின்னர் இன்றைய தமிழ் நாட்டு மதுரையில் புலவர்கள் கூடிச் சங்கம் வளர்த்தமையால் அது கூடல் எனவும் பெயர் பெற்றது. கூடலில் ஆய்ந்த தமிழின் துறையில் தோய்ந்தவன் தலைவன் என்று மாணிக்கவாசகசுவாமிகள் திருச்சிற்றம்பலக் கோவையாரிற் பாடியருளியுள்ளார். அந்தக் கூடலிற் கூடிய புலவர்களுள் எங்கள் ஈழத்துப் பூதன் தேவனாரும் ஒருவர். அவர் பாடிய பாடல்கள் சங்க இலக்கியத் தொகுதியில் செறிந்து கிடக்கின்றன. அவை மனோதத்துவ விளக்கம் செறிந்தனவாயும் உள்ளன.

முச்சங்கத்து முச்சங்கங்களும் மூவேந்தர் மறைந்தபின், இருபதாம் நூற்றாண்டின் ஆரம்ப காலத்தில் இராமநாதபுரத்து மன்னர் ஏ முயற்சியால், யாழ்ப்பாணத்துக் குமாசுவாமிப் புலவர் முதலானோர் உட்படப் புலவர்கள் கூடி யமைத்த நான்காம் சங்கம் செவ்விய முறையில் தமிழ் வளர்த்து வந்த போது, செந்தமிழ் என்னும் திங்கள் ஏட்டையும் வெளியிட்டுப் பண்டித பரீட்சையையும் நடத்தி வந்தது. இந்த முயற்சியில் எங்கள் புலவர்கள் பெருப் பங்களித்து வந்தனர்

சுன்னாகம் குமாரசுவாமிப் புலவர் அவர்கள் பாடவிதானந் தயாரித்தல், வினாத்தாள்கள் தயாரித்தல், விடைத்

### ★ க. சி. குலரத்தினம் ★

தாள்கள் மதிப்பிடல் முதலிய பொறுப்பு வாய்ந்த பணிகளை மிகவும் இரகசியமான சூழ்நிலையில் செய்தளித்து வந்தார். இவற்றைப் பற்றிப் புலவர் அவர்கள் தம் மாணாக்கனுக்கு என்றுமே சொன்னதில்லை.

மதுரைத்தமிழ்ச் சங்கத்துப் பண்டித பரீட்சை யாழ்ப்பாணத்திலும் நடைபெற்றபோது நாவலர் பாடசாலை மண்டபம் ஒரு நிலையமாயிருந்தது பாடசாலை மனேச்சர் அவர்கள் நடுவு நிலை தவறுமல் மேற்பார்வையாளராயிருந்தார் இவ்வாறன சூழ்நிலையில் புலவர் அவர்களும் மனேச்சர் அவர்களும் தங்கள் மாணாக்கனைப் பரீட்சைக்காகப் படிப்பிக்கவில்லை.

பரீட்சார்த்திகள் பலரின் விடைத்தாள்களை மதிப்பீடு செய்து வந்த புலவர் அவர்களுக்குத் தம் மாணாக்கனின் கல்வித்தராதரம் நன்றாகத் தெரியும் அவருடைய தகுதி மேற்பட்டது என்பதை அவர்கள் முன்னரே கணித்துக்கொண்டார்கள். அதனால் அவர் பரீட்சைக்கு அனுப்புவதைப்பற்றி நினைக்கவில்லை. அக்காலத்தில் காரைநகர் அருணாசலம் அவர்களின் முயற்சியால் கோப்பாயில் நடைபெற்றுவந்த ஐக்கிய போதனா பயிற்சிச்சாலையில் தம்மாணாக்கனை ஆசிரியர்க்கான பயிற்சிக்கு அனுப்புவதையும் சிந்திக்கவில்லை. தம் மாணாக்கன் எதிர்காலத்தில் தலைசிறந்த தமிழறிஞனாகத் திகழவேண்டும் என்றே புலவர் அவர்கள் விரும்பினார்கள். புலவர் அவர்கள் 1922 ஆம் ஆண்டில் மறைந்ததும் அவரின் மாணாக்கர் தமது மனநிலை எவ்வாறிருந்தது என்பதைப்பற்றி எழுதியுள்ளவாறே படித்தறியலாம்.

''புலவர் அவர்கள் மறைந்ததால் பெரிதும் அதிர்ச்சி எய்தினேன். என்னிலைமை கலங்கவிழ்ந்த நாயகன் நிலையாயிற்று. மனேச்சர் அவர்களுக்குப் பிறகும் என்னைப் பேணி வந்தார்கள். தொடர்ந்து படிப்பதற்கு வழி தெரியாமல் திகைத்தேன். அந்நிலையில் பண்டித பரீட்சை எடுக்க வேண்டும் என்கின்ற அந்த ஆசையும் உண்டாயிற்று. பண்டித பரீட்சையும் மதுரைப் பண்டித பரீட்சையாயிருத்தல் வேண்டும் என்பது என் கருத்து. அப்பொழுதுதான் யாழ்ப்பாணம் ஆரிய திராவிட பாஷாபிவிருத்திச் சங்கம் முளைகொள்ளுகிறது பிரம்மஸ்ரீ சதாசிவ ஐயர் அவர்கள் முயன்றுகொண்டிருக்கிறார்கள்.

புலவர் அவர்கள் மதுரைத் தமிழ்ச்சங்கப் புல

(7ஆம் பக்கம் பார்க்க)

# ஒரு டாக்டரின் அனுபவம் இது

காலை 10. 20 ஐக் கடிகாரம் காட்டுகிறது. ஒருவாறு ஐந்து நோயாளர்களைப் பார்த்த திருப்தியில் நாடகுறிப்பை தட்டுகிறேன்.

பிரசர் பார்க்க வேண்டிய கேஸ்— 01

பென்சிலின்கொடுக்கிற கேஸ்— 02

ஆக வெளிக்கள வேலையும் குறைவு என்ற திருப்தியில் மூச்சு விடுகிறன்.

அயல்வீட்டு இளைஞன் பரபரப்புடன் உள்ளே நுழைகிறன் அவன் வந்த வேகம் ஏதவது தற்செயலாக எங்காவது.... ..சீ அப்படி என்றால் சத்தம் கேட்டிருக்குமே?

''டொக்டர் எனக்கு பழையபடி நெஞ்செரிவு. வயிற்று நோ......'' என்று அடுக்கிச் சென்றான்.

''தம்பி உமக்கு அல்சர் இருந்துதான் நான் வைத்தியம் செய்தனான். இந்த அல்சர் 35 வீதம் தான் மருந்திலை மாறுது மீதி உம்முடைய கவனம் உறைப்பு, மது, சிகரட்,எண்ணை யோசனை கூடாது. வேறை யாரிட்டை யாலும் மருந்து வாங்கப் போனல் உமக்கு அல்சர் இருந்ததைச் சொல்லவேணும். மாறியிருந்த அல்சர் ஏன் திரும்பினது? இதிலை ஏதம் பிழையோ? அல்லது நேரத்திற்கு நேரம் சாப்பிடவில்லையோ?

இது என் நெறியாள்கைக் கேள்வி:-

''டொக்டர் ஒழுங்காக நேரம் பிசகாமல் ஒழுங்கான சாப்பாடு. நாலாம் நாள் இந்த கை நோவுக்கு ....... பரியாரியாரிட்டை எண்ணெய் வாங்கப் போன இடத்திலையும் அவர் மூன்று சாதிக்குளிசைகள் 'சாப்'பிலை வாங்கிடச் சொன்னவர் அப்பவும் அவரிட்டை சொன்னனான் எனக்கு அல்சர் இருக்கிறதை''.

''அவர் என்ன சொன்னவர்! அவர் தந்த மருந்து இருக்குதே?''

இதுஎன்அங்கலாய்ப்பு

''ஓம் இந்தாங்கோ மருந்துத்துண்டு - இந்தக் குளிசைகளுக்கும் அல்சருக்கும் ஒரு தொடர்புமில்லை பயப்படாமல் குடியும்' எண்டவர்''.

பிரிஸ்கிரிப்சன் என் மூளையை குடைகிறது.

Indomethacin 50mg Bd
Butazolidin 200mg Bd
Vit Bco 1tds

2 Weeks

முதலாவதாகவும் இரண்டாவதாகவும் எழுதின 'இன்டோ மெதசின்' 'பிறற்ரு சோலிடின்' அல்சருள்ளவைக்கு ஒவ்வாதவை என்று கூறிவிட மனம் துடிக்கிறது அப்படிக்கூறி அந்த இளைஞனிடம் அவரைப்பற்றி தப்பான எண்ணம் உருவாக்க மனம் கூசுகிறது.

- சற்றுநேர சிந்தனை — பின் கூறுகிறேன்;

''உமக்கு சப்பிச் சாப்பிடுகிற குளிசை மட்டும் தாறன். சாப்பாட்டிலை கவனமாயிரும் இந்தக் குளிசையோடை அவர் தந்த மருந்துகள் பாவிக்ககூடாது. நீர் . ''

என்னை தொடர விடாது இடை மறிப்பு

''அப்ப அவர் தந்த மருந்துகள் கூடாதே டொக்டர்''

''சீச்சீ அப்படியில்லை சில பேருக்கு சில மருந்துகள் பிரச்சினை கொடுக்கும் அப்ப அதைக் கைவிடவேணும் அவ்வளவு தான்'' - இது என் சமாளிப்பு. இந்த மட்டில் இளைஞரை அனுப்புகிறேன்.

கேஸ்களைப் பார்க்கப் புறப்படமுன் புதினப் பத்திரிகையை பார்க்கிறேன்.

'சுதேச வைத்தியம் புனரமைக்கப்படல் வேண்டும்' - இன்று ஆங்கில மருந்துகளைக் கலக்காது 'தாய்மை'யாக சுதேச வைத்தியம் செய்பவர்களை முதலில் இனம் காணல் வேண்டும் என என் மனம் முணுமுணுக்க பத்திரிகையை கைவிட்டு விட்டுப் புறப்படுகிறேன்.

சுகாதாரத் தொண்டன்

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

## வாங்கிய கடனை வட்டியோடு கொடுத்தான்

மாணிக்க புரத்தில் மணியன் என்னும் ஒருவன் வாழ்ந்து வந்தான். அவன் யாரிடம் கடன் வாங்கினாலும் திருப்பிக் கொடுக்கமாட்டான். என்னென்னவோ சாக்குப் போக்குச் சொல்வான்.

ஒருமுறை அவன் அடுத்த வீட்டு அப்புலிங்கத்திடம் இரு நூறு ரூபாய் கடன் வாங்கினான். ஆனால் ஒரு வருடமாகியும் அவன் அதைத் திருப்பிக்கொடுக்கவில்லை. அப்புலிங்கமும் அவனிடம் எவ்வளவோ தடவை தன் கடனைத் திருப்பிக் கேட்டுப்பார்த்தான். மணியனோ ஏதோ சாக்குப் போக்குச் சொல்லித் தட்டிக் கழித்து வந்தான்.

ஒரு நாள் மணியன் மாடு வாங்க அடுத்த ஊருக்குக் கிளம்பினான். இதை அறிந்த அப்புலிங்கமும் அவன் பின்னாலேயே சென்றான் மணியனுக்குப் பிடித்த மாடாக எதுவும் கிடைக்கவில்லை மாலையில் இருவருமே சந்திக்க — ஒன்று சேர்ந்து தம் ஊருக்குத் திரும்பி வரலானார்கள்.

வழியில் ஒரு திருடன் அவர்களை மடக்கி "உங்களிடம் உள்ள பணத்தை எல்லாம் எடுங்கள்" என மிரட்டினான். அப்புலிங்கத்திடம் ஒரு காசு கூட இல்லை. மணியனிடமே முன்னூறு ரூபாய் இருந்தது அவன் அதைச் சட்டென அப்புலிங்கத்திடம் கொடுத்து, "இந்தா உனது வட்டியும் முதலும் வைத்துக்கொள். எனது கடன் தீர்ந்தது." என்றான். திருடனோ அப்புலிங்கத்திடம் பணத்தைப் பிடுங்கிக் கொண்டு ஓடியே போய்விட்டான்.

மறுநாள் அப்புலிங்கம் தன் வேலைக்காரனிடம் இருபது ரூபாயும் ஒரு கடிதமும் கொடுத்தனுப்பினான்

அதில் "நீ எனக்குக் கொடுக்க வேண்டிய கடன் தீர்ந்தது. நேற்று வழியில் திருடனாக நடித்தவனுக்குக் கொடுத்த கூலி, எனக்குச் சேர வேண்டிய வட்டி, எல்லாம் போக மீதம் இருபது ரூபாய் அனுப்பி இருக்கிறேன் இதனை நீ பெற்றுக் கொள்ளவும். இவ்வாறு உன்னிடம் பணத்தை வசூலித்து விட்டேன்" என்று எழுதி அனுப்பினான்.

அதைப் பார்த்த மணியனுக்குத் தூக்கி வாரிப் போட்டது வெட்கித் தலை குனிந்தான். அன்று முதல் வாங்கிய கடனைத் திருப்பிக் கொடுக்காத கெட்ட பழக்கத்தை அறவே விட்டொழித்தான். அப்புலிங்கமும் தன் பணம் கிடைத்ததே என்று மனமகிழ்ந்தான்.

எம். பாஸ்கரன்
முருகானந்த மகாவித்தியாலயம்.
முரசுமோட்டை

## இருவர் பாட்டு

### சைக்கிள் வண்டி

இரண்டு வட்டச் சில்லு(க்)கள்
இடையில் இரண்டு கால் மிதிகள்
இறுக்கி நாமும் மிதித்திடுவோம்
ஏறி இருக்கச் சீற்றுண்டு —
இடையில் நிறுத்த பிறேக்குண்டு
இனியபெல்லை அடித்திடுவோம்
ஈசன் பாதம் நினைத்திடுவோம்
உருளும் சில்லு வண்டியிலே
ஊர்கள் எங்கும் போய் வருவோம்.

-தம்பி

### குட்டிப் பாப்பா

குட்டிக் குட்டிப் பாப்பா
எட்டி எட்டி உதைப்பான்
வட்டமான அம்மா
வயிற்றின் உள்ளே
பத்து மாதம் தங்கி
பார் புகழப் பிறப்பான்.

நா. சுகனியா

## நொடிப்பொழுதில் நொடி அவிழ்ப்பீரா?

செல்வி க. விஜிதா
(யாழ். இந்து மகளிர் கல்லூரி)

1. என் பெயரைக் கேட்பவர் அநேகர். என்னைப் போட்டு மிதிப்பவரும் அநேகர். ஆனால் நான் யார் பெயரையும் கேட்பதுமில்லை. எவரையும் போட்டு மிதிப்பதும் இல்லை.
என்னைத் தெரியுமா?

2. ஓராயிரம் பேர் ஒருமித்து அணிவகுத்தாலும் ஒரு தூசி கிளம்பாது.
அது என்ன?

3. வாசல் பல உண்டு வாரி முடிக்க வழியும் உண்டு.
அது என்ன?

4. பெண்ணுக்கும் பெயராகும். நோய்க்கு மருந்தாகும் அர்ச்சனைக்குப் பொருளாகும்.
அது என்ன?

5. நாக்கில் கயிற்றுடன் தூக்கில் தொங்குவான்.
அவன் யார்?

6. நான்கு எழுத்துக்காரன் நடு நரம்புக்காரன் நாக்கின் தோழன்.
அவன் யார்?

விடைகள்:
1. தெரு. 2. எறும்புக்கூட்டம். 3. சீப்பு 4. துளசி. 5 ஆலயமணி. 6. புகையிலை.

## தெரிந்து கொள்ளுங்கள்

நவரத்தினங்கள 22 வகைப்படும்

1. இந்திர நீலம்
2. மரகதம்
3. கர்கேதனம்
4. வஜ்ரம்
5. பத்மராகம்
6. ருத்திராச்சம்
7. வைடூரியம்
8. வயம்
9. விமலகம்
10. இராஜமணி
11. ஸ்படிகம்
12. சந்திரகாந்தம்
13. சௌகந்திகம்
14. கோமேதகம்
15. சங்கம்
16. மகா நீலம்
17. புஷ்பராகம்
18. பிரம்மமணி
19. ஜியோதிரசம்
20. ஸீஸ்யம்
21. முத்து
22. பவளம்

மதிவதனி இரங்கநாதன்
நீர்வேலி வடக்கு
நீர்வேலி

## நங்கை

### மகாத்மா வணங்கிய பெண்மை

வாழ்க்கையில் வெற்றி பெற்ற ஒவ்வொரு மனிதனின் பின்னாலும் ஒரு பெண். அந்த வெற்றியில் பங்கு கொள்கிறாள். அவள் தாயாகவும் இருக்கலாம். தாரமாகவும் இருக்கலாம். மகாத்மா வாழ்ந்த வாழ்க்கையை நம் மனக்கண் முன்னால் மீண்டும் காணும்போது மேற்கூறிய வாக்கியம் எத்தனை உண்மை என்று அறியலாம்.

காந்தி சிறுவயது முதல், தன் பெற்றோரிடம் குறிப்பாக தன் தாயிடம் வைத்திருந்த மதிப்பும், மரியாதையும் உலகம் அறிந்தவை. இளவயது முதலே அவர் அன்னை தன் சாத்விகமான வாழ்க்கை முறைகளாலும் சீலங்களினாலும் காந்தியின் உள்ளத்தில் எளிமைக்கும், தூய்மைக்கும் வித்திட்டார். அவர் மேற்படிப்புக்காக லண்டன் போகும் சமயம் அவர் அன்னை கேட்ட மூன்று சத்திய வாக்குகளே ஒரு மகாத்மா உருவாகுவதற்கு முதற்படியாயின!

காந்தியின் கண்ணோட்டத்தில் பொறுமை, தியாகம், அன்பு என்னும் பிறவிக் கவசங்களை அணிந்த பெண்ணுக்கு நிகர் வேறுயாருமில்லை. 'பெண்மணியின் அணிகலன் தங்க வைர நகைகள் அல்ல. அவள் தூய்மையும், கற்புமே' என்று காந்தியடிகள் கூறியிருக்கிறார்.

ஒரு பெண்ணின் வாழ்க்கையின் நிறைவே திருமணத்தில் தான் இருக்கிறது. பெண்கள் புன்னகை, தைரியம் என்ற அணிகளுடன் எளிமையான வாழ்க்கை முறைகளுடன் குறிப்பாக சொல்லப்போனால் கணவனுக்கு பக்கபலமாக வாழ்ந்தாலே உலக வரலாற்றில் உயர்ந்துவிடுவாள். ஆண்களின் பெரிய பங்கைவிட மேன்மையானது பெண்கள் ஏற்றிருக்கும் பங்கு. வீட்டின் உயர்வே, நாட்டின் உயர்வு என்பதைப் பெண்கள் மறத்தல் கூடாது.

நன்றி: மங்கை
தொகுப்பு: என் ஷாமினி

## அங்க லக்ஷணத்தில் பெண்களின் நெற்றி

தொகுத்தவர்: விஜயலக்ஷ்மி சிவபாலன்

✶ அர்த்த சந்திர வடிவமைந்த நெற்றியோடு கூடிய பெண்ணின் பிறந்த வீட்டில் செல்வமும், கல்வியும், பொருளும் நிறைந்து விளங்கும். அத்தகைய பெண்ணிற்கு குழந்தைச் செல்வமும் நிச்சயம் உண்டு. இவள் பிறந்தது முதல் இறக்கும்வரை, வீட்டில் உள்ள எல்லோரும் எல்லா நலன்களையும் அனுபவித்துக் கொண்டிருப்பார்கள்.

• நன்கு விசாலமான நெற்றியோடு விளங்கும் பெண் நீண்ட ஆயுளும், அறிவுச் சிறப்பும், பேச்சுத்திறனும், உதவும் குணமும் பெற்று விளங்குவாள்.

✶ நெற்றி குறுகியும் மத்தியில் பள்ளம் விழுந்தாற்போலும் தோற்றமுடைய பெண்களிடத்தில் இல்லற இன்பத்தைப் பெறமுடியாது. அனேகமாக இவர்கள் தெய்வபக்தியும் இல்லாதிருப்பார்கள். பொருட்செல்வத்தையும் பெற்றிருப்பார்கள்.

✶ நெற்றியில் குறுக்கு ரேகைகளைக் கொண்ட பெண் நீண்ட ஆயுளைப் பெற்றிருப்பாள்.

✶ நெற்றியில் ரேகைகள் இல்லாமல் சில நரம்புகள் மட்டும் தடித்ததுபோல் காணப்படும் பெண்கள் பொறுமைசாலிகளாக விளங்குவார்கள். இவளைத் திருமணம் செய்து கொண்ட ஆண் எல்லாவிதத்திலும் நன்மைகள் அடைவான்.

(சாமுத்திரிகா லக்ஷணத்தை ஆதாரமாகக் கொண்டு எழுதப்பட்டது)

## நல்ல சில ஆலோசனைகள்

வாழைப் பிஞ்சோடு பருப்பும் தேங்காயும் போட்டு காரம் சேர்க்காமல் சமைத்துச் சாப்பிட்டால் குடல்புண் ஆறும்.

✶ ✶ ✶

மணத்தக்காளியை உணவில் சேர்த்து அடிக்கடி சாப்பிட்டால் மூல நோய் நீங்கும்.

✶ ✶ ✶

இலுப்பை இலைகளைப் பறித்து வேகவைத்து அரைத்து தேமல் மீது பூசி சிறிதுநேரம் ஊறிய பின்பு குளித்தால் தேமல் மறைந்துவிடும்.

✶ ✶ ✶

வீட்டில் கொசுத் தொல்லையா? அரளிச் செடியின் இலைகளை நசித்து அதனுடன் தண்ணீர் கலந்து வீடு முழுவதும் தெளித்தால் கொசுக்கள் இருக்காது

(ஆதாரம்: ராணி)

## கண்ணொளி சிறக்க கண்ணான யோசனைகள்

✶ இரவென்றும், பகலென்றும் பாராது மங்கிய வெளிச்சத்தில் கோணல் மாணல் 'போஸ்'களில் கண்களை இடுக்கிக் கொண்டு புத்தகம் படிப்பதைத் தவிர்க்க வேண்டும்.

✶ சிறிது நேரம் படிப்பதாலோ, வெய்யிலில் சுற்றுவதாலோ, சினிமா பார்ப்பதாலோ கண் அழற்சி ஏற்படும்போது பன்னீரிலோ, தண்ணீரிலோ நனைத்த துணியைக் கண்களின் மேல் போட்டுக் கொண்டு பத்து நிமிஷம் 'சும்மா' படுத்திருப்பது நல்லது.

✶ இரவு துயிலும் போது கண் இமைகளின் மேல் ஆமணக்கெண்ணையைத் தடவிக் கொண்டு படுக்க வேண்டும். கண் எரிச்சல் இருந்தால் அந்த எண்ணெயில் ஒரு துளி கண்ணுக்குள்ளே விட வேண்டும்.

✶ கத்தரிக்காயை உணவில் அதிகமாகச் சேர்த்துக் கொள்ளக் கூடாது. விட்டமின் 'ஏ' உயிர்ச்சத்து உள்ள காய்கறிகளை உண்ண வேண்டும்.

ஆதாரம்: அமுதசுரபி.
தொகுப்பு:
செல்வி. ஜெயா ஞானசுந்தரம்

## சிலுக்கின் படம்!

சிலுக்கு ஸ்மிதாவின் சொந்தப் படத்தின் பெயர் 'வீர விகாரம்! தெலுங்கிலும் மலையாளத்திலும் படத்தை இயக்க இருப்பவர் 'க்ராஸ் பெல்ட் மணி'

மலையாளத்தில் முப்பது படங்களை இயக்கிய இவருக்கு இதுதான் முதல் தெலுங்குப் படம்.

## சத்தமில்லாத சாதனை

என்ன விழிக்கிறீர்கள்! அதுதான் சஸ்பென்ஸ். வி. எம். ஐ புரடக்ஷன்ஸ் 'உன்னை ஒன்று கேட்பேன்' திரைக்கு வரும் போதுதான் அந்த சஸ்பென்ஸ் வெளியாகும் என்கிறார்கள் இரட்டை இயக்குனர்கள் சக்தி கண்ணன்.

சத்தம் போடாமல் மௌனமாகவே சாதனை புரிவதில் மன்னர்கள் இவர்கள்.

## சென்னையில் ஆஷா ஆடினார் ஓர் ஆட்டம்



சென்னையில் அண்மையில் குமாரி ஆஷாவின் பரத நாட்டியக் கச்சேரி நடைபெற்றது.

யார் அந்த குமாரி ஆஷா? நடிகை ரேவதியேதான். என்ன திகைக்கிறீர்கள் ரேவதியின் சொந்தப் பெயர் ஆஷாதான்.

சினிமாவில் நடிப்பதற்காகவே பாரதிராஜா அவரின் பெயரை ரேவதி என்று மாற்றி இருந்தார்.

நடன நிகழ்ச்சிகளில் கலந்து கொள்ளும்போது அவர் தனது சொந்தப் பெயரையே பாவிக்கிறார்.

ரேவதிக்கு நன்றாக நடனம் ஆடத்தெரியும். ஏழுவயதிலிருந்தே நடனப் பயிற்சி பெற்றார்.

சென்னை பனகல் பார்க்கில் உள்ள புகழ்பெற்ற லலிதா ஜுவல்லரி மார்ட் என்ற நகைக்கடையினர் இந்த நடன நிகழ்ச்சிக்கு ஏற்பாடு செய்து இருந்தார்கள்.

## கே. ஆர். ஜியின் படத்தில் ஏழு காட்சிகளில் மாத்திரமே நடிக்கிறார் பாண்டியராஜன்

கே. ஆர். கோபாலகிருஷ்ணனின் 'தாய்க்கொரு தாலாட்டு' படத்தில் பாண்டியராஜன் ஏழே காட்சிகளில் மாத்திரமே நடிக்கிறார்.

இந்தப் படத்தில் சிவாஜி - பத்மினி ஜோடிக்கு மகனாக பாண்டியராஜன் நடிக்கிறார்.

ஊட்டியில் நடந்த முதல் கட்ட படப்பிடிப்பில் கலந்து கொண்ட பாண்டியராஜன் தன்னுடன் தன் உதவியாளர்களையும் கலந்துரையாடலுக்கு அழைத்துச் சென்றதாகவும் -

அந்தச் செலவை கே. ஆர் ஜி ஏற்றுக் கொள்ளாததால் இருவருக்கும் இடையே மோதல் ஏற்பட்டதாகவும் சொல்லப்படுகிறது.

முதல் இரண்டு கட்ட படப்பிடிப்புகளுக்கு கால்ஷீட் கொடுத்த பாண்டியராஜன் மூன்றாவது கட்ட படப்பிடிப்புக்கு கால்ஷீட் கொடுக்க மறுத்துவிட்டாராம்.

அதனாலேயே பாடல் காட்சிகள் உட்பட பல காட்சிகளை 'டூப்' போட்டுப் படமாக்கி விட்டாராம்.

இதுபற்றிப் பாண்டியராஜன் கூறுகையில்,

'இந்தப் படத்தை நல்ல விலைக்கு கே ஆர். ஜி விற்றிருக்கிறார். நான் நடிக்கிறேன் என்பதும் அதற்கு ஒரு காரணம்.

ஆனால் நான் இந்தப் படத்தில் கதாநாயகன் இல்லை. சிவாஜிதான் கதாநாயகன்.

படம் நன்றாக ஓடினால் கே ஆர். ஜிக்கு நல்ல நேரம். ஓடாவிட்டால் சிவாஜிக்குத்தான் கெட்ட பெயர். எனக்கு ஒன்றுமில்லை' என்று கூறுகிறார்.

## படப்பிடிப்பாளர் மீது கமலஹாசன் பாய்ச்சல்

அண்மையில் கமலஹாசன், சரிகா, குழந்தை சுருதி—மூவரும் சென்னையில் இருந்து விமானத்தில் பம்பாய்க்கு வந்தார்கள்.

செய்தி அறிந்து பம்பாயில்வெளிவரும்'மிட் டே' பத்திரிகையின் படப்பிடிப்பாளர் விமான நிலையத்துக்கு வந்தார்

மூவரும் விமானத்தில் இருந்து இறங்கி வந்து கொண்டிருக்கும்போது படம் எடுக்கத் தயாரானார் படப்பிடிப்பாளர்.

இதை அவதானித்த கமலும் சரிகாவும் கையால் முகத்தை மறைத்துக் கொண்டனர்

படம் எடுக்காதே! மண்டையைப் பிளந்து



விடுவேன்!" என்று இரைந்து கொண்டே கமல் கைத்தடியை ஓங்கினார். (சமீபத்தில் படப்பிடிப்பில் காலில் அடிபட்டிருந்ததால் கமல், கைத்தடியை ஊன்றியே நடந்து வந்து கொண்டிருந்தார் )

படப்பிடிப்பாளரும் விடவில்லை ஒரு மாதிரியாகக் கெமராவைத் தட்டி விட்டார்.

பத்திரிகைப் படப்பிடிப்பாளர் என்றால் சொல்லவும்வேண்டுமா?

கமல் — சரிகா — குழந்தை சுருதி ஆகியோர் சேர்ந்து உள்ள முதல் படம் என்ற அறிவிப்புடன், இந்தப் படம் "மிட் டே" பத்திரிகையில் வெளிவந்து பரபரப்பை ஏற்படுத்தியது.

## 'இழந்த மார்க்கெட்டை பிடித்து விடுவேன்' சரிதாவின் நம்பிக்கை

அண்மைக் காலங்களில் சரிதா நடித்த படங்கள் வெற்றிபெறவில்லை. அவரின் நடிப்பும் குறிப்பிடும்படியாக எடுபடவும் இல்லை.



'தண்ணீர் தண்ணீர்' படம் வெளியானதைத் தொடர்ந்து சரிதாவின் மார்க்கெட் உச்சநிலையை அடைந்திருந்தது.

அந்த பழைய நிலையை அடைவதற்குப் பகிரதப் பிரயத்தனம் எடுத்துக் கொண்டார் அவர்.

அதற்கு ஏற்றாப்போல் 'எல்லைக்கோடு' படத்தில் நடிப்பதற்குச் சந்தர்ப்பம் கிடைத்தது.

இந்தப்படத்தின் கதையும், கதாபாத்திரமும் நன்றாகப் பிடித்தால் ஆர்வத்துடன் நடித்துள்ளாராம் அவர்.

'எல்லைக்கோடு' படத்தின் மூலம் இழந்த மார்க்கெட்டை மீண்டும் பிடித்து விடலாம் என்ற நம்பிக்கையோடு இருக்கிறார் சரிதா.

தயாரிப்பு: பேரின்பம்

## வெள்ளித் திரை

### சகலகலா வல்லவர் ராஜேந்தரின் சாதனைகள்

டி. ராஜேந்தர் இதுவரை ஒன்பது படங்களுக்கு கதை, வசனம், பாடல்கள் எழுதி, இசை அமைத்து டைரக்ட் செய்ததுடன். "மைதிலி என்னைக் காதலி" படத்திலிருந்து ஒளிப்பதிவும் செய்கின்றார்.

எல்லாப் படங்களும் வசூலில் சாதனை புரிந்து உள்ளன. படங்களின் வரிசையும் ஓடிய நாட்களும் வருமாறு:-

1. ஒருதலைராகம் — 365 நாட்களுக்கு மேல்
2. வசந்த அழைப்புக்கள் — 100 நாட்களுக்கு மேல்
3. ரயில் பயணங்களில் — 175 நாட்களுக்கு மேல்
4. ராகம் தேடும் பல்லவி — 100 நாள்
5. நெஞ்சில் ஓர் ராகம் — 75 நாள்
6. உயிருள்ள வரை உஷா — 200 நாட்களுக்கு மேல்
7. தங்கைக்கோர் கீதம் — 150 நாட்களுக்கு மேல்
8. உறவைக் காத்த கிளி — 75 நாள்
9. மைதிலி என்னைக் காதலி — 100 நாள் தாண்டிய வசூலில் சாதனை புரிந்து ஓடிக் கொண்டிருக்கின்றது.

### வெளிப்படங்களுக்கும் இசை அமைப்பு

தான் இயக்கும் படங்களைத் தவிர வேறு படங்களுக்கு இசை அமைக்காமல் இருந்த டி ராஜேந்தர் முதன் முறையாக கிளிஞ்சல்கள் படத்துக்கு பாடல்கள் எழுதி இசை அமைத்தார்.

இந்தப் படத்தில் இடம் பெற்ற பாடல்கள் 'ஹிட்' ஆகி 210 நாட்களுக்கு மேல் ஓடி வெற்றி பெற்றதோடு படத்தின் இசைத்தட்டு விற்பனை உரிமை பெற்றிருந்த ஏ வி எம் பட நிறுவனம் டி ராஜேந்தருக்கு தங்க இசைத் தட்டு பரிசளித்தது அதை சிவாஜியின் கையால் ராஜேந்தர் பெற்றார்.

இது தவிர சட்டம் சிரிக்கிறது, எங்கள் குரல், உனக்காக ஒரு ரோஜா, இப்போது வெளிவந்த பூக்களைப் பறிக்காதீர்கள், விரைவில் வெளிவரும் வாழ்ந்தால் உன்னோடுதான், ஒரு பொண்ணு நெனச்சா இன்னும் சில படங்களுக்கு இசையமைக்கிறார் அவர். வாலிபா எழுதிய கஃபா என்ற படத்திற்கும் இசை அமைத்திருக்கிறார்.

தொகுப்பு: எம். முஜிப் எருக்கலம்பிட்டி

## இந்தியில் கைதியின் டயரி

அமிதாப் பச்சனும் பாக்கியராஜும் நெருங்கிய நண்பர்களாகி விட்டனர். அமிதாப்புக்காக 'கைதியின் டைரி' படத்தை இந்தியில் உருவாக்கிக் கொடுக்கிறார் பாக்கியராஜ்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முத்தமிழ்ச் சிறப்பு:

# உள்ளத்து உணர்ச்சிகளை எழுப்பும் ஆற்றல் மிக்க தமிழின் ஏழிசைகள்

(சென்றவாரத் தொடர்)

மனிதன் தன் உணர்ச்சிகளுக்கேற்ப தோற்றுவிக்கும், ஓசைகளிலிருந்து இசை வளர்ச்சியுற்றது. வீரம், மகிழ்ச்சி, அழுகை போன்றவைகளை உணர்த்தப் பாடப்படும் பாடல்கள் வெவ்வேறு ஓசைகளில் பாடப்படுதலை நாம் காண்கின்றோம். இசையினூடாக மனிதனின் உள்ளத்தில் எவ்வகை உணர்ச்சிகளையும் எழுப்ப முடியும். அதற்கொப்ப கால இடங்களுக்கேற்றவாறு இசைகள் பாடப்பட்டன.

பண்டைக்காலம் முதல் தமிழர் இசைபற்றும் இசைப்பயிற்சியும் கொண்டவர்களாய்த் திகழ்ந்தார்கள். குழந்தைகளை தாலாட்டுதல் முதல் எல்லாவற்றிற்கும் இசை பயன்படுத்தப்பட்டது. இறந்தவர்களைக் குறித்து அழும் அழுகை தானும் இசையுடையதாகும். அக்காலத்தில் தமிழாடவரும் மகளிரும் இசை பற்றி நன்கு அறிந்திருந்ததுடன் அரசவைகளில் பாடி மகிழ்விக்கும் பாடல் மகளிர் பலரும் இருந்தனர். கதைகள் நாடக முறையில் நடிக்கப்பட்டபோது அவைகளுக்கு இசை வேண்டப்பட்டது.

தமிழில் வழங்கிய ஆதி இசைகள் ஏழு. அவை குரல், துத்தம், கைக்கிளை, உழை, இளி, விளரி, தாரம் என்பனவாம்.

தமிழர் மத்தியில் வழங்கிய. இசைக்கருவிகளுள் சில யாழ், வீணை, குழல், கொம்பு, சங்கு, பேரிகை, படகம், இடக்கை, மத்தளம், தாளம் முதலியனவாம். அவை தோற்கருவி, துளைக்கருவி, நரம்புக்கருவி என மூவகையாக வழங்கின. இசைக்கருவிகள் ஒவ்வொன்றிலும் பலவகையிருந்தன. யாழ்களில் பேரியாழ், மகர யாழ், சகோடயாழ், செங்கோட்டி யாழ் எனப் பலவகையிருந்தது. அவை முறையே 21, 19, 14, 7 நரம்புகளைக் கொண்டு

ராஜப் பிரதானிகள், பெரும் தனவந்தர்களிடமும் சென்று பாடினார்கள் அவர்களின் இசைப் பாடல்களில் இன்புற்று மனம் மகிழ்ந்து மன்னர்களும் மற்றையோரும் பாணர்களுக்கு பொருள்களையும் வெகுமதிகளையும் வாரி வழங்கினர். பெரிய புராணத்திலும் நாலாயிர திவ்யபிரபந்தத்திலும் காணப்படும் திருநீலகண்ட யாழ்ப்பாணரும் திருப்பாணழ்வாரும் பாணர் மரபினரேயாம். திருநீலகண்ட யாழ்ப்பாணர் மரபில் வந்த ஒரு

★ ம. க. அ. அந்தனிசில் ★

விளங்கின. பேரி யாழ் அளவில் பெரியது சீறியாழ் மிகச் சிறியது. அது சுலபமாக கையில் எடுத்துச் சென்று வாசிக்கக் கூடியது. தமிழரது இசைக் கருவிகளின் மொத்த எண்ணிக்கை அன்று முப்பத்தொன்றும்.

அக்காலத்தில் வாய்ப்பாட்டு மிடற்றுப்பாட்டு எனப்பட்டது இசை பாடுவதில் மிகத் தேர்ச்சியுற்றவர்களாக பாணர்கள் விளங்கினர். பாணர் என்பார் தமிழரிடையே ஓர் வகுப்பினராகும். அவர்கள் ஒவ்வோர் அரசரிடமும் சென்று யாழ் மீட்டி இசை பாடினார்கள். அரசர்களைப் பற்றியும் பல பாக்களைப் பாடினார்கள்.

பெண்மணிதான் சைவத் திருமுறைகளுக்குப் பண் வகுத்தாரென்பது குறிப்பிடத்தக்கது.

இசை தொடர்பாக மூன்று பொருள்கள் கருத்தில் கொள்ளத்தக்கன. பாடல்கள் எளிதில் பொருள் விளங்கத்தக்கனவாயிருத்தல் ஒன்று. பாடல்களில் இனிய சொற்களும் மேலான கருத்துக்களும் அமைந்திருத்தல் மற்றொன்று பாடல்கள் பொருள்களுக்கேற்ற இசையில் பாடப்படுதல் இன்னொன்று ஆகும். பொருள் விளங்க முடியாத பாடல்களில் நுகர்வதற்குரியது மூன்றிலொரு பகுதியேயாம்.

வளரும்

## "ஒரு குப்பிவிளக்கு எரிகிறது"

ஆசிரியர்: அகஸ்தியர்



சஞ்சீவியில் கடந்த இரண்டுமாதங்களாகத் தொடர்ந்து வெளிவந்த 'ஒரு குப்பி விளக்கு எரிகிறது' நாவல் கடந்தவாரம் நிறைவுற்றது.

அதனை எழுதிய நாவலாசிரியர் திரு. எஸ் அகஸ்தியர் ஈழத்தின் முதுபெரும் எழுத்தாளர். எனினும் அவரைச் சஞ்சீவி வாசகர்களுக்குஅறிமுகம்செய்வது எமது கடமை

எழுத்தாளர் திரு. அகஸ்தியர் இப்பொழுது 60 வயதை எட்டிவிட்டார். அவர் தமது 38 வருடகால இலக்கியப் பயணத்தில் 14 புனை பெயர்களில் படைப்பு இலக்கியத் துறையில் பணியாற்றியுள்ளார்.

320க்கு மேற்பட்ட சிறுகதைகள், 8 குறு நாவல்கள் 9முழு நாவல்கள், 40க்கு மேற்பட்ட வானொலி மேடை நாடகங்கள் இன்னும் விவரணச் சித்திரங்கள், கட்டுரைகள், உருவகக் கதைகள், குட்டிக்கதைகள் பலவற்றையும் அவர் படைத்த சிறப்புக்குரியவராவார்.

உணர்வூற்று உருவகச் சித்திரம் என்ற பரிசோதனை இலக்கிய முயற்சியொன்றையும் அவர் செய்துள்ளார்.

இவரது பல படைப்புக்கள் சிங்கள மொழியிலும் ரஷ்ய மொழியிலும் மொழி பெயர்க்கப்பட்டுள்ளன.

முழுநேர எழுத்தாளராகத் தம்மை ஆக்கிக் கொண்டு எழுத்துப் பணியாற்றும் அகஸ்தியர் இலக்கியப் பரிசுகள் பலவற்றையும் பெற்றுக் கொண்டவர்.

இலங்கை சாகித்திய மண்டலத்தில் இரண்டு பரிசுகளைப் பெற்றுக் கொண்ட பெருமை இவருக்கு உண்டு. இலங்கையின் சகல பத்திரிகைகளிலும் சஞ்சிகைகளிலும் எழுதியுள்ள திரு. அகஸ்தியர் இந்தியாவிலிருந்து வெளிவரும் தாமரை, எழுத்து, கண்ணதாசன், தீபம், கலைமகள், ஜீவா ஆகியவற்றிலும் தமது எழுத்துத் திறமையை பதிக்கத் தவறவில்லை

எழுத்துலகில் இவர் பெறும் ஆதிக்கத்தையும் பரபல்யத்தையும் கௌரவிக்குமுகமாக 1970ல் தாமரை இதழும் 1982ல் மல்லிகை இதழும் இவரது படத்தை தமது முகப்பு அட்டைகளில் பிரசுரம்செய்தன.

35 வருடங்களாக இலங்கை முற்போக்கு எழுத்தாளர் சங்கத்தில் அங்கம் வகித்து வருகின்றார்.

மிருதங்கம் வாசிப்பதில் அதிக திறமை பெற்ற அகஸ்தியர் நாட்டுக் கூத்திலும் மிகுந்த ஈடுபாடு கொண்டவராவார்.

சொந்த மண்ணில் இராணுவ ஆக்கிரமிப்பால் பெரிதும் பாதிக்கப்பட்டவர் இந்த இலக்கியவாதி.

கடந்த கலவரங்களில் இவர் குடியிருந்த வீடு கூட கலவரமடைந்தது. இவரைத் தெரிந்தவர்களுக்கு நன்கு தெரியும்.

—பிரதம ஆசிரியர் சஞ்சீவி

# மகிழ்ச்சித் தூண்டுதலில் மலரும் மறுபிறப்பு ஆசை

மக்கள் இம்மண்ணில் எப்போ படைக்கப்பட்டனரோ அன்றே ஆசையும் அவர்களுடன் கூடப் பிறந்து விட்டது. துன்பம் ஏற்படும்போது அத்துன்பத்தினின்றும் விடுதலை பெறவேண்டுமென்ற ஆசை உண்டாவன் தற்செயலாக, தனக்கொத்த இளங்காளை ஒருவனைக் கண்டு, காதலித்து பல நாட்களாக அக்காதலை வளர்ப்பதுமுண்டு. முடிவில் இவர்களுக்குத்திருமணம் நடைபெறுவதுமுண்டு. இந்த முறையிலே இனைப்புனத்திருன்.

பெறுவது இயையாதாயினும்உறுவதொன்று உண்டுமன், வாழிய நெஞ்சே!......
மையீர் ஓதி மாசு யோள் வயின்
இன்றை யன்ன நட்பின் இந்நோய்

## காதல், நட்பு, பக்தி நிலைகளில் கனிந்து கருக்கொள்கிறது

கின்றது மகிழ்ச்சியில் மூழ்கியிருந்தால் அந்த மகிழ்ச்சி என்றும் நீடித்து நிலைத்து நிற்க வேண்டும் என்று ஆசை ஏற்படுகின்றது. இவை பற்றித் திட்டம் போடும் மக்கள் இப்பிறப்பிலன்றி அசித்திட்டம் மறுபிறவிக்கும் தொடர வேண்டும் என்று விரும்புகிறார்கள். இவர்கள் விரும்பும் மறுபிறப்புத் திட்டங்கள் பற்றி இலக்கிய வாயிலாகச் சிலவற்றை இங்கு பார்ப்போம்.

காதலன் காதலி மறுமையில் இப்படித்தான் இருக்க வேண்டுமென்பது ஒருவகை. நண்பர்கள் விரும்புவது மற்றொரு வகை. அடியார்கள் வேண்டுவது இன்னொரு வகை.

பண்டைக் காலத்தில் ஊர்களோ குடிகளோ நெருக்கமாக இருக்கவில்லை போக்குவரத்தும் இத்தனை இலகுவாக இருக்கவில்லை. நாகரிகமும் இன்றைய நிலைக்கு உயர்த்தப்படவில்லை. வயதான இளநங்கை தினைப்புனக்காவலுக்கோ வயல் வேலைக்காகவோ வெளியே செல்வது அக்காலத்தில் சாதாரண நடைமுறையாக இருந்தது. அப்படிச் சென்றதிலே ஒருவன் ஒரு கட்டிளம் பெண்ணைக் கண்டு காதல் கொண்டு அவளோடு பழகி வருகிறான். ஒரு நாள் வழக்கம்போல அவளைத் தேடி அவன் வந்த போது அவள் அங்கு காணப்படவில்லை.

எங்கெல்லாமோ தேடிப் பார்த்தும் அவள் இருப்பிடங்கூட அவனுக்குத் தெரியவில்லை இனி அவளைக் காணமாட்டேனே என வருந்திப் பிறகு சிறிது தேறிக்

### புத்தொளி

கொள்ளுகிறான்.

அவளை தான் மீண்டும் காணமுடியாது போனாலும் அவள்மேல் வைத்திருக்கும் காதலுக்கு எல்லையில்லை. அதற்கு அழிவென்பதும் கிடையாது. எனவே இப்பிறப்பிலே தான் அவளை மணம் முடிக்க முடியாமல் போனாலும் நிச்சயமாக மறுபிறப்பிலே அவளை மணம் முடிப்பேன். இன்று போலவே மறுபிறப்பிலும் என் காதல் தொடர்ந்து வரும். அப்போது எனது துணைவியாக்கி மகிழ்ந்து வாழ்வேன், என்று தன் நெஞ்சுக்கு ஆறுதல் கூறுகிறான்.

இறுமுறை என ஒன்'று) இன்றி
மறுமை உலகத்து
மன்னுதல் பெறுமே!

இம்மைப் பிறப்பில் இல்லாவிட்டாலும் மறுபிறப்பில் காதலின்பம் தொடர்ந்து வரும என்று கண்டோம் இது பற்றிக் காதலி என்ன எண்ணுகிறாள் என்பதையும் பார்ப்போம்.

பெண்ணொருத்தி தான் காதலித்த ஆடவனை மணந்து, மகிழ்ச்சி நிறைந்த இல்வாழ்க்கை வாழ்ந்து கொண்டிருக்கிறாள். மறு பிறப்பைப் பற்றி ஒரு சமயம் அவள் சிந்திக்க நேர்ந்தது. அப்போது இப்பிறப்பிலே தானும் தன் நாயகனுமாக இருந்து அனுபவிக்கின்ற இல்லற வாழ்க்கையே மறுமையிலும் வந்து வாய்க்க வேண்டும் என்ற ஆசையினாலே தன் எண்ணத்தை வெளிவிடுகிறாள்.

இம்மை மாறி மறுமையாயினும்
நீயா இயர் என் கணவனை
யானா கியர்நின் நெஞ்சு நேர்பவளே!

'மறுபிறப்பிலும் நீயே என் கணவனாக வந்து பிறக்க வேண்டும் உன் நெஞ்சம் விரும்பிக்

(6ஆம் பக்கம் பார்க்க)

# தமிழ் மண்ணில் நீதி சாகவில்லை; சமாதான சபைகள் பேணுகின்றன

இலங்கையில் தமிழர் நிலை குறித்து எழுதாத உலகப் பத்திரிகை எதுவும் இருக்க முடியாது எனத் துணிந்து கூறலாம். அந்த அளவுக்கு தமிழ் மண்ணில் தமிழ் மக்கள் அகதிகளாகி கண் கலங்கி நிற்கிறார்கள். தமது சொந்த நிலத்திலிருந்து விரட்டப்பட்டு நிர்க்கதியாகி நிற்கிறார்கள். தமது வாழ் மனைகளிலிருந்து வெளியேற்றப்பட்டு, வாழும் வழி தெரியாது நிற்கிறார்கள் தமிழ் மக்கள். பயிர் செய்த கமக்காரர்கள் காணிகளிலிருந்து அரத்தப்பட்டு துயரத்துடன் நடுத்தெருவில் நிற்கிறார்கள்; மீன் பிடித்துச் சீவியம் செய்வோர் கடலில் கால் வைக்கக் கூடாது என்ற உத்தரவால் பைத்தியம் பிடித்தார்போல் வீதியில் அலைகிறார்கள்! எஞ்சியோர் எப்போது நம் தலையில் குண்டுவீச்சு விமானங்கள் குண்டு போட்டு அழித்து விடுமோ என அஞ்சி அஞ்சி செத்துக்கொண்டிருக்கிறார்கள்; மேற் குறிப்பிட்ட அனைத்து நிகழ்வுகளாலும் தமிழ் மண்ணின் எதிர்கால சந்ததியினராகிய பச்சிளம் பாலகரின் உள்ளம் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளதாக உளவியல் விற்பன்னர்கள் கூறுகிறார்கள்; இதனால் கவலை தேங்கிட்ட மக்களை தமிழ் மண்ணில் எங்கு சென்றாலும் சந்திக்க முடிகிறது! அவர்களின் முகத்தில் தெரியும் கவலையின் கோடுகள் அவர்களின் உள்ளத்தினை மிகத்தெளிவாகத் தெரிய வைக்கிறது

இதுபோன்ற இன்னோரன்ன பிரச்சினைகளுக்கு மத்தியிலும் வாழும் தமிழ் மக்கள் தமது மண்ணில் தமிழ் கலாசாரங்களை எந்தக் குண்டுகளோ - துப்பாக்கிச் சன்னங்களோ கொன்றொழிக்க முடியாதவாறு பாதுகாத்து வருவது பாராட்டப்பட வேண்டியதே. எதிர்காலத்து சிறுவர்களுக்கு 'பொலீஸார்' யார் என்பது படம் கீறித் தான் விளக்க வேண்டிய அளவுக்கு பொலீஸ் இல்லாத மண்ணாகத் தமிழ் மண் மாற்றப்பட்டு விட்டது. பொலீஸ் நிலையங்கள் இயங்கவில்லை. ஆனாலும் தமிழ் மண்ணில் நீதிகள் செத்து விடவில்லை. மக்களுக்கு நீதி கிடைக்க அயராது உழைக்கும் மக்கள் சமாதான சபைகள் பல, தமிழ் மண்ணில் நீதியுடன் உழைக்கின்றன. மக்கள் தமது பிரச்சினைகளைத் தீர்க்கவல்ல ஒரே ஸ்தாபனமாக இன்று சமாதான சபைகளையே நம்பியுள்ளனர். பல வர்க்க மக்கள் வாழும் பகுதிகளில் பிரச்சினைகள் தலைதூக்குவது இயற்கையே. ஆனாலும் இவை பலாத்காரமாகவோ - அநீதியாகவோ மாறி மனித உயிர்வதைகளும்- உயிர்ப்பலிகளும் ஏற்படாமல் பாதுகாத்து மக்களிடையே புரிந்துணர்வையும் - சமாதான சகவாழ்வையும் போதிக்கும் சமாதான சபைகளின் பணியைப் போற்றுதவர் ஒருபோதும் சமாதானப் பிரியர் ஆகார்.

சமாதான சபைகள் பிரதிவாரமும் ஒரு நாளில் முழுநாள் விசாரணைகளைச் செய்கின்றன. சமாதான சபைத் தலைவரும் மற்றும் மூன்று அல்லது ஐந்து உறுப்பினர்களும் விசாரணைகளை மேற்கொள்கிறார்கள். விசாரணைகளுக்குத் தேவையான ஆவணங்களை வழக்காளி தரப்பினரும் எதிர்த்தரப்பினரும் வழங்கிய பின்னரும் தேவையேற்படின், சிலரைச் சந்தித்துக் குறுக்கு விசாரணைசெய்து நீதியை நிலைநாட்டி தீர்ப்பு வழங்கப்படுகிறது அந்தத் தீர்ப்பில் தவறு இருப்பதாக எண்ணினால் அதனை அப்பீல் சமாதான சபையிடம் முறையிடவும் மக்களுக்கு சுதந்திரம் வழங்கப்பட்டுள்ளது. அப்பீல் மன்ற சமாதான சபையில் தலைவரும் ஏனைய ஊர் சமாதான சபைத் தலைவர்கள் இருவரும் விசாரணைகளை மேற்கொள்கிறார்கள். திர விசாரித்துத் தீர்ப்பு வழங்கும் சபையின் சேவை பாராட்டுக்குரியதே.

உதாரணத்துக்கு சமாதானசபை ஒன்றுக்கு

மலரரசன்

வந்த வழக்கினையும் அது சம்பந்தப்பட்ட விசாரணைகளையும் பார்ப்போம். கிராமம்ஒன்றைச்சேர்ந்த சுகுமாரும் பெண் சுமதியும் நமது மகள் சாந்தினிக்கு சீதனமாக அதே யூரில் 14 பரப்பு வயலினை வழங்கி அதற்கு உறுதியும் முடித்துக்கொள்கின்றனர். சாந்தினியின் கணவன் சாந்தன் ஊரில் இல்லாது வெளியூரில் வேலை செய்து வந்தார். தனது மாமன் மாமி மீது நம்பிக்கையுடையவரான சாந்தன் 14 பரப்பு வயலினையும் பராமரிப்பை மாமன் மாமியாரிடமே விட்டுவிட்டுருந்தார். 1967 ம் ஆண்டு உறுதி முடிக்கப்பட்ட இக்காணியை 16 வருடங்களின் பின் இந்த ஆண்டு யாழ்ப்பாணத்திற்குமாற்றலாகி வந்தமையால் தான் பயிர் செய்ய எண்ணிய சாந்தன் தனது வயலுக்கு சென்றபோது அங்கே ஆச்சரியம் காத்திருந்தது. சிங்கதுரை என்பவர் அந்த வயலில் பயிர் செய்துகொண்டிருந்தார். சாந்தன் அவருடன் கதைத்து தெரிந்து கொண்டதின்படி 1981ம் ஆண்டு சிங்கதுரைக்கு சாந்தனின் மாமா சுகுமாரும் மாமியார் சுமதியும் விற்றுவிட்டதாகவும் தெரியவந்தது. தென்றல் வீசிய சாந்தன் சாந்தினி குடும்பத்தில் புயல் வீசும் அறிகுறி தென்பட்டது. சாமர்த்தியகாரரான சாந்தன் ஊரில் உள்ள சமாதானசபைக்கு முறையிட்டார். சம்பந்தப்பட்ட சமாதான சபைத் தலைவர்கள் விசாரணைகளை தீவிரப்படுத்தினர். மூன்று நாள் விசாரணைகளில் சுகுமாரும் சுமதியும் செய்த முறைகேடுகள் அம்பலத்துக்கு வந்தன. காணியினை சிங்கதுரை பெற்றுக்கொண்டது சட்டத்துக்கு விரோதமானது என்றும் அவர்கள் முடித்துக்கொண்ட உறுதி செல்லுபடியற்றது எனவும் தீர்ப்பு வழங்கப்பட்டது. சாந்தனின் பொறுமையையும் குடும்பத்தினை நேசிக்கும் பண்பினையும் பாராட்டிய சமாதானசபை தாம் பெற்ற மகளுக்கே துரோகம் செய்த பெற்றோரை வன்மையாக கண்டித்து இத்தகைய துரோகம் இழைப்போர்கள் — எந்த அந்தஸ்தில் இருந்தாலும் - சமூகத்தின் மத்தியில் இனம் காட்டி ஏனைய மக்களுக்கு சிறந்த பாடத்தினை கற்பிக்க வழி சமைக்க வேண்டும் எனவும் சமாதான சபை தீர்வில் வலியுறுத்தியது. இறுதியாகஅவ்வூர் சமாதான சபையினரின் ஆதரவுடன் காணியை மீண்டும் சாந்தன் சாந்தினி குடும்பத்தார்க்கு அவ்வூர் சமாதான சபை பெற்றுக் கொடுத்துள்ளது.

(6ஆம் பக்கம் பார்க்க)

## காலததால் அழியாத வரலாற்றுக்கடிதங்கள்

மனிதனின் வாழ்க்கைப் போராட்டம்

சென்றவாரத் தொடர்

ஆதியில் வேட்டையாடித் தனியே திரிந்த காட்டுமிராண்டி மனிதன் பின்பு சிறிது சிறிதாக ஒரு குடும்பமாக மலர்ச்சி அடைகிறான். ஒரு குடும்பத்தைச் சேர்ந்தவர்கள் கூட்டாகவும் ஒருவர் மற்றவருக்காகவும் உழைக்கும் வழக்கம் ஏற்படுகிறது. பல குடும்பங்கள் அல்லது வீடுகள் சேர்ந்து ஒரு கிராமம் உண்டாகிறது பல அதிக பலனைக் கொடுத்தது தனியாக உழைப்பதை விட பலர்கூடிஉழைத்தால் அதிகமான உணவுப் பொருள்களையும் இன்னும் வாழ்க்கைக்குத் தேவையான இதர பொருள்களையும் உண்டாக்கலாம். தனக்காக மட்டும் வேட்டையாடி பிழைத்து வந்த காட்டுமிராண்டி நிலையிலிருந்து மக்கள் கூடி வேலை செய்யத் தலைப்பட்டவுடன் அந்த வேலையில் ஏற்பட்ட ஒத்துழைப்புக் காரண

## நேருவிடமிருந்து இந்திராவுக்கு

கிராமங்களிலும் உள்ள வியாபாரிகளும் கைத்தொழிலாளிகளும் சேர்ந்து சங்கங்கள் அமைத்துக் கொள்ளுகிறார்கள்.

இவ்வாறு சிறிது சிறிதாக சமூகம் என ஒன்று வளர்ச்சி பெறுகிறது. ஆரம்பத்தில் காட்டுமிராண்டி நிலையில் மனிதன் தனியாக வாழ்ந்தான். எவ்விதமான சமூகமும் இல்லை. அதற்கு அடுத்த நிலை குடும்பம்; அதன் பிறகு கிராமம், அதன்பிறகு பல கிராமங்களின் சேர்க்கையாலான ஒரு சமூகம். இந்தச் சமூகம் இவ்வாறு வளர்ந்த காரணம் என்ன? பிழைப்புக்காகப் போராட வேண்டி இருந்ததால் தான் இந்த வளர்ச்சியும் ஒத்துழைப்பும் ஏற்பட்டன.

யாவருக்கும் பொதுவான விரோதியைத் தாக்குவதாயின் அல்லது அந்த விரோதியினின்றும் தம்மைக் காத்துக்கொள்வதாயினும் தனியே இருந்து அதைச் செய்வதைவிட எல்லோரும் சேர்ந்து செய்வது அதிக பலன் அளிக்கக் கூடியது [illegible] இதைவிட வேலை செய்வதில் ஏற்பட்ட ஒத்துழைப்புமாக அவர்கள் பொருளாதாரத் துறையிலும் வளர்ச்சி பெற்று வந்தார்கள். மனிதன் பிழைப்பை உத்தேசித்து செய்யும் முயற்சி பெருகப் பெருகப் பொருளாதாரத் துறையில் ஏற்பட்ட இவ் வளர்ச்சிதான் சமூகமென ஒன்று உண்டாவதற்கும் அது வளர்ச்சியுறுவதற்கும் காரணமென்று சொல்லலாம். நீண்ட காலமாக வரும் சரித்திரத்தைக் கவனித்துப் பார்த்தால் அதனூடே முடிவில்லாத போராட்டத்திற்கும் துன்பத்திற்கும் சிலவேளைகளில் பிற்போக்கிற்கும் இடையில், இவ்வளர்ச்சியைக் காணலாம். ஆனால் இவ்வளர்ச்சியின் பயனாக உலகம் முன் இருந்ததைவிட பிரமாதமாக முன்னேற்றம் அடைந்துவிட்டதென்றோ அல்லது அதிக இன்பம் பொங்கும் இடமாக விளங்குகிறது என்றோ சொல்ல முடியாது முன்னைவிட சிறிது உயர் நிலையை அடைந்திருக்கிறது என்று சொல்லலாம் ஆனால் எல்லாக் குற்றங்களும் நீங்கிய உத்தமமான நிலையை அடைவதற்கு இன்னும் வெகு

(6ஆம் பக்கம் பார்க்க)

# தமது பதவியை பெருமைப்படுத்திய இந்து மகளிர் அதிபர்

கடமை,கண்ணியம், கட்டுப்பாடு இவற்றை அணிகலனாகக் கொண்டு, பாரதியின் புதுமைப் பெண்ணுக்கு இலக்கணமாகத் திகழ்ந்து. யாழ் இந்து மகளிர் கல்லூரி சீரும், சிறப்பும் பொலிய முப்பத்து ஆறு ஆண்டுகள் தன் பொன்னான சேவையை ஆற்றிய அதிபர் செல்வி பத்மாவதி இராமநாதன் ஒய்வு பெறுகிறார்.

அவர் தமது பணிக் காலத்தில் கல்லூரிக்கு வந்து, தான் தொடுத்த பூமாலையை கல்லூரியில் உள்ள விநாயகருக்குச் சாத்திப் பூசை கண்ட பின் நிகழ்ச்சிகளை ஆரம்பிக்கும் சமயம் சிந்தைக்கும் பார்வைக்கும் அந்

இவ்வுலகில் தம்மால் பதவியைப் பெருமைப் படுத்தியவர் எங்கள்



கல்லூரி அதிபர் எனலாம்.

காரியாலயத்தில் கடமை புரியச் சென்றனால் தினம் பாடசாலை நிகழ்ச்சிகளையும்

திருமதி இந்திராணி நித்தியானந்தன்

தக்காட்சி ரம்மியமாக இருக்கும்

ஒவ்வொரு நாளும் கல்லூரியில் உள்ள அத்தனை வகுப்பறைகளுக்கும் சென்று கடமைகள் சரிவர நடக்கின்றதா என்பதைக் கவனிக்கத் தவறமாட்டார். கையுடன் கொண்டு வரும் காலை உணவைக் கூட சில நேரங்களில் உண்பதற்கே மறந்துவிடும் அளவுக்கு வேலையில் ஒன்றி விடுவார். காரியாலய வாசலில் நின்றபடியே கல்லூரியின் எந்தப் பக்கத்தில் என்ன நடக்கிறது என்பதை அறிந்துவிடும் ஆற்றல் அவரிடம் இயல்பாகவே இருந்தது.

அவரது அயராத முயற்சியினால் கல்லூரியில் பல மாடிக்கட்டடங்களும், விஞ்ஞான ஆய்வு கூடங்களும் கட்டப்பட்டன. ஆராதனை மண்டபமும் விநாயகர் ஆலயமும் திருத்தியமைக்கப்பட்டன. பதவியால் தமக்குப்பெருமை தேடிக் கொள்வோர் வாழும்

அதிபரின் செய்திறன் மிக்க நடவடிக்கைகளையும் அவதானிக்க முடிந்தது. எவ்வாறு நிழல் ஒருவரை விட்டுப் பிரியாதோ அவ்வாறே அவர் கல்லூரியின் நிழலாக நின்றார்.

பாடசாலையை விட்டுப் பிரிந்திருந்த நேரம் மிகக் குறைவானதென்றே கூறலாம்.

அவரது ஒவ்வொருசெயலும் பாடசாலையின் முன்னேற்றத்தையே கருத்திற் கொண்டிருந்தது.

கல்லூரி ஆசிரியர்களிடம் அன்பாய்ப் பழகும் அதே நேரத்தில் சகல உத்தியோகத்தர்களுடனும் அன்புடன் பழகும் விதம் மிக நேர்த்தியானது

தொழிலில் பேதம் காட்டாது எல்லோரையும் ஒரே குடும்ப அங்கத்தவர் போன்று பாவித்து ஒவ்வொருவரது சொந்த நலன்களையும் விசாரித்து இன்ப துன்பங்களில் தாமும் ஒருவர் போல் கலந்து கொள்ளும் சீரிய

(6ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# மிளகாய் நாற்றுக்களில் நோய்
## ஏற்படாமல் பாதுகாக்க வழிமுறை

(சென்றவாரத் தொடர்)

மேடையில் மெற்றசிஸ் ரோக்ஸ், மொனோ குரோட் போஸ், அக் டெலிக் போன்றவற்றுடன் சம்பரையும் கலந்து நாற்றுகளின் இலைகளின் இருபுறமும் நன்றாக நனையும் வண்ணம் தெளிக்கவேண்டும். இலேச்சுருளின் தாக்கத்தைக் கட்டுப்படுத்தும் சுவட்டு மூலகங்களைக் கொண்ட போலான் (Bayfloan) கொம்பிளாசால், மக்சிக்குரோப் செல்போவியர் ஆகியவற்றைத் தெளிப்பதனால் நல்ல ஆரோக்கியமான கருமையான நாற்றுக்களைப் பெறலாம்.

**பசளை:**

இரசாயன முறையில் தொழிற்சாலைகளிலிருந்து வெளிவரும் செயற்கைப் பசளைகளில் பயிர்ப் போசணைப்

இ) பிரதானமூலகங்களின் முக்கிய தொழிற்பாடு

1 நைதரசன்: பயிர் வளர்ச்சியைக் கூட்டி ஏனைய மூலகங்களைப் பயிர்கள் எடுப்பதற்கு உதவுகின்றது.

2. பொஸ்பரஸ்: வேர் உற்பத்தி வளர்ச்சி, பூத்தல் ஆகியவற்றை ஊக்குவிக்கும்.

3 பொட்டாசியம்: அறுவடை செய்யும் காய்கள், மணிகளின் தரத்தை உயர்த்தி நோய்களை எதிர்க்கும் சக்தியைக் கொடுக்கும்.

(ஈ) பசளைச் சிபார்சு:-

ஒரு பயிர் உட்கொள்ளும் பயிர் போசணைப் பொருள்களின் அளவைக் கொண்டும் பயிரிடப்படும் மண்ணில் அடங்கியுள்ள பயிருணவுப் பதார்த்தங்களின் அளவினை மதிப்பிட்டும் பல வயற் பரிசோதனைகளின் பெறுபேறினை ஆராய்ந்தும் அப்பயிருக்கு இடப்படவேண்டிய பசளைகளின் அளவு சிபார்சு செய்யப்படுகின்றது.

மேற்கூறிய ரீதியில் மிளகாய்ப் பயிருக்கு விவசாயத் திணைக்களத்தால் சிபார்சு செய்யப்பட்ட என். பி. கே. கலவை 13:11:6 ஆகும்.

உ) பசளைப்பாவனை-:

அடிக்கட்டுப் பசளையாக நடுகையின்போது 13:11:6 என். பி. கே. கலவையை ஏக்கருக்கு 75 கிலோவை ஒரு நடுகைக்குழிக்கு 18 - 20 கிராம் வரை இடவும்.

நாற்று நட்டு இரு வாரங்களின் பின் மேற்கட்டுப் பசளையாக மிளகாய் கலவையை மரத்திலிருந்து 4 - 10 அங்குல தூரம் தள்ளி வட்டமாக இட்டு மண்ணுடன் கலந்தபின் நீர் பாய்ச்சவும்.

ஊ) மேற்கட்டுப் பசளை இடும் அட்டவணை

| நாற்று நாட்டியபின் | | மிளகாய்க் கலவைப் பிரமாணம்; |
|---|---|---|
| 2வது வாரம் | — | 37½ கி. கி. / ஏக்கர், |
| 4வது வாரம் | — | 37½ கி. கி. / ஏக்கர், |
| 6வது வாரம் | — | 75 கி. கி. / ஏக்கர், |
| 8வது வாரம் | — | 37½ கி. கி / ஏக்கர், |
| 10வது வாரம் | — | 37½ கி. கி / ஏக்கர், |
| 12வது வாரம் | — | 75 கி கி. / ஏக்கர், |
| 14வது வாரம் | — | 37½ கி கி. / ஏக்கர், |
| 16வது வாரம் | — | 37½ கி கி. / ஏக்கர். |

இதன் பின் பயிரின் சேட்டத்தையும் அதனைத் தொடர்ந்து பராமரிப்பதால் கிடைக்கக்கூடிய வருமானத்தைக் கணக்கிட்டு மேற்கட்டுப் பசளை இடுவதை இருவார இடைவெளியில் தொடரலாம்.

(வளரும்)

க. தேவசபை, ஆராய்ச்சி உத்தியோகத்தர்
விவசாய ஆராய்ச்சி நிலையம், திருநெல்வேலி.

### கமமும் புலமும்

பொருள்கள் இயற்கைப் பசளைகளை விட அதிக அளவில் இருந்தாலும் இயற்கைப் பசளைப் பாவிப்பில் மண்ணின் வளமும் அதன் செழுமையும் அதிக காலம் நீடிக்கின்றது.

(அ) ஐக்கிய உரப்பசளைகளில் உள்ள பயிர் உணவுச்சத்துப் பெறுமானங்கள்:-

| | நைதரசன் | பொஸ்பரஸ் | பொட்டாஸ் |
|---|---|---|---|
| 1. யூறியா | 45-46 | - | - |
| 2. அடர் சுப்பர் பொஸ்பேற்று | - | 46 | - |
| 3. மியூறியேற் ஒவ் பொட்டாசு | - | - | 60 |

(ஆ) முக்கிய இயற்கைப் பசளைகளில் உள்ள பயிர் உணவுச்சத்துப் பெறுமானங்கள்:-

| | நைதரசன் | பொஸ்பரஸ் | பொட்டாஸ் |
|---|---|---|---|
| 1. மாட்டெரு | 0.60 | 0.15 | 0.45 |
| 2. ஆட்டெரு | 0.95 | 0 35 | 1 00 |
| 3. கூட்டெரு | 0 50 | 0 25 | 0.50 |

## சோதிடச் சஞ்சிகை

### கிரகப்பார்வையில் வருகிற வாரம் நாட்டு நிலை

| திகதி கிழமை | பிரச்சினை ஏற்படக்கூடிய இடங்கள் | பாதிக்கப்படக்கூடியவர்களின் நட்சத்திரங்கள் |
|---|---|---|
| 13-7-86 ஞாயிறு | வடமாகாணம் (காலையில்) தென்மாகாணம், வடமேல் மாகாணம் (இரவில்) | அச்சுவினி, பரணி, உத்தரம், அத்தம், அவிட்டம், சதயம். |
| 14-7-86 திங்கள் | வடக்கு, தெற்கு, கிழக்கு மாகாணங்கள் | பரணி, கார்த்திகை, அத்தம், சித்திரை, சதயம், பூரட்டாதி. |
| 15-7-86 செவ்வாய் | வடமாகாணம் (காலையில்) வடமேல் மாகாணம், தென்மேல் மாகாணம். | கார்த்திகை, ரோகிணி, சித்திரை, சுவாதி, பூரட்டாதி, உத்தரட்டாதி. |
| 16-7-86 புதன் | பொதுவாக அமைதி நிலவும். வடமேல் மாகாணம் (காலையில்) | ரோகிணி, மிருகசீரிடம், சுவாதி, விசாகம், ரேவதி. |
| 17-7-86 வியாழன் | வடமாகாணம், வடகரையோரப் பகுதிகளில் முற்பகலில் மழை பெய்யக்கூடும் தென்மாகாணம், மேல்மாகாணத்தில் காற்றுடன் மழை பெய்யலாம். இந்தியாவில்-மஹாராஷ்டிர மாநிலத்தில் (பம்பாயில்) மிக அதிக மழை. ஒரிஸ்ஸா மாநிலத்திலும் மழை. கடும்காற்று அல்லது சூறாவளி உருவாகலாம். | அச்சுவினி, மிருகசீரிடம், திருவாதிரை, விசாகம், அனுஷம். |
| 18-7-86 வெள்ளி | வடமாகாணம், வடமத்திய, மத்திய, வடமேல் மாகாணங்கள். | பரணி, திருவாதிரை, புநர்பூசம், அனுஷம், கேட்டை. |
| 19-7-86 சனி | வடக்கு, கிழக்கு மாகாணங்கள். வடகரையோரப்பகுதிகள் (இரவில்) | கார்த்திகை, ரோகிணி, புநர்பூசம், பூசம் கேட்டை, மூலம். |

- இறையருட்செல்வன்

### மொழி சமத்துவம்

ரஷ்ய மக்கள் 162 மொழிகள் பேசுகின்றனர். ஒரு மொழியைப் பேசுபவர்களின் எண்ணிக்கை மிகக் குறைவாக இருந்தாலும் அனைத்து மொழிகளுக்கும் சம அந்தஸ்து வழங்கப்பட்டிருக்கின்றது.

உதாரணமாக எஸ்கிமோ மொழியை வடகோடியில் வாழும் 1, 300 பேர் மட்டுமே பேசுகின்றனர். உக்ரேனியமொழி 4 கோடி பேருடைய தாய்மொழி;

இவை இரண்டுக்கும் இடையே தேசிய அந்தஸ்தில் வேறுபாடு எதுவும் இல்லை.

## பஞ்சாமிர்தம் பலரசஅமிர்தம்

# 13 வயது வீரபொம்மையனுக்கு 26 வயது மனைவி; 2 குழந்தைகள்

வீரபொம்மையனுக்கு இப்போது வயது 13.

அவனது மனைவியார் யார் தெரியுமா? அவன் சின்னம்மா காஞ்சம்மாள் தான். அவளுக்கு வயது என்ன தெரியுமா? 26 வயது

என்ன மூக்கில் விரலை வைக்கிறீர்களா?

இதுமட்டுமல்ல? இப்போது 2, 4 வயதில் அவளுக்கு குழந்தைகள் கூட இருக்கின்றன

வீரபொம்மையனை காஞ்சம்மாள் ஐந்து வருடங்களுக்கு முன்னர் திருமணம் செய்தபோது அவனுக்கு வயது எட்டுத்தான்.

இத்தகைய அதிசயக் குடும்பங்கள் எங்கே இருக்கின்றன தெரியுமா?

இந்தியாவில் அதுவும் தமிழ்நாட்டில்தான்.

வேளூரணி என்ற கிராமத்தில்தான் இவர்கள் இருக்கிறார்கள்.

இங்கு வாழும் ஒரு சாதி குடிமக்கள் தங்கள் குடும்பங்களை விட்டு வெளிக் குடும்பங்களில் திருமணம் செய்வதில்லை என்ற பிடிவாதமான பழக்கத்தைக் கொண்டவர்கள்.

அதனால் பெண்ணுக்குத் திருமணம் செய்ய குடும்பத்தில்—நெருங்கிய உறவில் பொருத்தமான மாப்பிள்ளை இல்லாவிட்டால் வயது, வித்தியாசம், உறவுமுறைப், பால்ய விவாகம் என்பனவற்றைப் பார்க்காமல் குடும்பத்துக்குள் அகப்பட்ட ஒரு 'ஆம்பிளைக்கு' கட்டி வைத்துவிடுகிறார்கள்.

அப்படி அகப்பட்ட ஒரு கேஸ்தான் வீரபொம்மையன்

ஒரு சொக்லேட்டிற்கு சண்டை போடும் வயதில் இரண்டு குழந்தைகளுக்கு அப்பாவான பொம்மையனிடம் அது பற்றி விசாரிக்கப்பட்டது.

"உன் வீட்டுக்காரியை எப்படிக் கூப்பிடுவாய்?"

'பேரைச் சொல்லித் தான்'

'அவ உன்னை எப்படி கூப்பிடுவா?

'தம்பின்னு'

'உன்பிள்ளைகள் உன்னை எப்படிக் கூப்பிடும்?'

"அண்ணன்னு"

'இந்த இரண்டுபேரும் உனக்குப் பிறந்தவர்களா?'

'இல்லை'

உறவுமுறை பார்க்காமல் திருமணம் செய்யும் இந்த சாதியினரிடையே இது சகஜம் தான் கண்டுக்காதீர்கள். (தகவல்:- ஜூனியர் விகடன்.

### இலக்கத்தில் ஒரு சொல்

கல்குலேட்டரில் வரும் 35007 என்ற எண்ணை தலைகீழாகத் திருப்பிப் பாருங்கள் LOOSE ஆகத் தெரியும்.

அது போல 10338 என்ற இலக்கம் BEEDI என்றும்-

735310 என்ற எண் DIESEL என்றும் வரும்.

வீட்டில் கல்குலேட்டர் இருந்தால் ஒரு தாம் முயன்றுதான் பாருங்களேன்!

### புத்தக வெளியீட்டில் ரஷ்யாவின் சாதனை

அதிகம் புத்தகம் படிக்கும் மக்கள் உலகிலேயே ரஷ்யர்கள் தான்! இங்கு 250க்கு மேற்பட்ட பதிப்பகங்கள் இருக்கின்றன.

அவை ஆண்டுதோறும் 130 கோடி புத்தகங்களை வெளியிடுகின்றன. இங்கு 89 மொழிகளில் புத்தகங்கள் வெளி வருகின்றன.

ரஷ்யாவில் மட்டும் ஆண்டுதோறும் 100 கோடி பிரதிகள் விற்பனையாகின்றன மிகுதி 30 கோடி வெளிநாடுகளுக்கு அனுப்பி வைக்கப்படுகின்றன.

மொழி பெயர்ப்பிலும் ரஷ்யா முன்னிலையில் இருக்கின்றது நாற்பது வெளிநாட்டு மொழிகளில் உள்ள சிறந்த இலக்கியங்கள் ரஷ்ய மொழியில் மொழி பெயர்க்கப்படுகின்றன.

## தமது பதவியை---

(5ஆம்பக்கத்தொடர்ச்சி)

பண்புமிக்கவர்.

வேலைப்பளு மிகுதியாக இருக்கும் சமயத்திலும் கூட பெற்றோர் அவரைச் சந்திக்க வந்து நின்றால் இன்முகத்துடன் வரவேற்று, இருக்கை கொடுத்து, அன்புடன் உரையாடி பிள்ளைகள் பற்றிய குறைநிறைகளை எடுத்துக்கூறி அவர்களிடமும் கல்லூரியின் முன்னேற்றத்தைப் பற்றிக் கதைக்கத் தவறமாட்டார்.

இங்கு கல்வி பயிலும் ஒவ்வொரு மாணவியரதும் 'சுய விவரக்கோவை' அலுவலகத்தில் இருந்தாலும் அதிபர் ஒவ்வொரு மாணவியைப் பற்றியும் தனித்தனியே நிரம்ப அறிந்து வைத்திருப்பார்.

மாணவிகள் படிப்பில் மட்டும் ஆர்வம் காட்டினால் போதாது. கல்லூரியின் பல்வேறுபட்ட நிகழ்ச்சிகளிலும் அவர்கள் தமது திறமையை வெளிக் கொணர வேண்டும் என்ற அவா உடையவர். இசை, நடனம், விளையாட்டு சகல துறைகளிலும் மாணவிகளை ஈடுபடவைப்பதோடு தாமும் கூட நின்று அவர்களுக்கு உற்சாகம் ஊட்டிச் செயற்பட வைக்கும் திறமை அவருக்கே சிறப்பானதாகும்.

தமது அன்பான அரவணைப்பில் மாணவியரையும் எம்மையும் நல்வழிப் படுத்தியவர் ஒய்வு பெறுவது தவிர்க்க முடியாததாகி விட்டது. அவரது ஒய்வு காலம் சிறப்பாக அமைய மகிழ்ச்சியையும் நீண்ட ஆயுளையும் வழங்கும்படி எல்லாம் வல்ல இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

## கவாஸ்கரின் மற்றொரு சாதனை

அதிக டெஸ்ட் ஆட்டங்களில் விளையாடியவர் என்ற சாதனையை தற்போது தட்டிச் செல்



பவர் உலக கிரிக்கெட் சாதனை வீரரான சுனில் கவாஸ்கர்.

அண்மையில் இங்கிலாந்துடன் நடைபெற்ற மூன்றாவது டெஸ்ட் ஆட்டத்துடன் சேர்த்து அவர் இதுவரை இந்திய அணிக்காக விளையாடிய டெஸ்ட் ஆட்டங்களின் எண்ணிக்கை 115.

இதற்கு முந்திய பழைய சாதனை இங்கிலாந்து வீரர் கொலின் கௌட்ரி 1954க்கும் 1975க்கும் இடையில் விளையாடிய 114 டெஸ்ட் ஆட்டங்களாகும்.

தொடர்ந்து தடைப்படாமல் அதிக டெஸ்ட் ஆட்டங்களில் விளையாடியவர்—,

டெஸ்ட் ஆட்டங்களில் அதிக ஓட்டங்களைக் குவித்தவர்—

அதிக செஞ்சுரிகளை அடித்தவர்-

இப்படியே கவாஸ்கரின் சாதனைப் பட்டியல் நீண்டு கொண்டே போகிறது.

## பொலீஸாருக்கு நேர்ந்த கதி!

நிர்வாண நீராடலைத் தடுத்து நிறுத்தப் போன பொலீஸாரும் சமூகத் தொண்டர்களும் நிர்வாணமாக்கப்பட்டனர்.

கர்நாடகத்தில் சந்திரகுடி என்று ஒரு தலம். அங்குள்ள ஆலயத்தில் பெண்கள் நிர்வாணமாக வழிபடுவர். இது பண்டைக்காலம் தொட்டு நடந்து வரும் சம்பிரதாயம்.

ஒரு பெண் தனது கணவனுடன் நிர்வாண நீராடலில் கலந்து, இறைவனை வழிபட அன்று வந்து இருந்தார்.

நிர்வாண நீராடலைத் தடுத்து நிறுத்தும் பணியில் பொலீஸார், சமூகத்தொண்டர்கள் ஈடுபட முயற்சித்தனர்.

இதனால் பக்தர்கள் கூட்டம் ஆத்திரம் அடைந்தது. பொலீஸார், சமூகத் தொண்டர்கள் சிலரை இழுத்துக் கொண்டு நிர்வாண நீராடலில் பங்கு பற்ற வைத்தது ஆத்திரம் கொண்ட பக்தர் கூட்டம்.

## மகிழ்ச்சித் தூண்டுதலில்---

(5ஆம்பக்கத்தொடர்ச்சி)

காதலிக்கும் பெண் நானேயாக அமைதல் வேண்டும்' என்பது காதலி தன் காதலனை முன்னிலைப்படுத்திச் செய்து கொள்ளும் பிரார்த்தனையாகும்.

காதல் வயப்பட்டோர் எண்ணக் கருத்துக்களைக் கண்டோம் நட்பைக் குறித்து இனிக் காண்போம்.

பெருங்கதைக் காப்பியக் கதாநாயகன் உதயணனை எல்லோரும் அறிவர். பிரச்சோதனச் சக்கரவர்த்தியால் சிறையிடப்பட்டிருந்தசமயத்தில் அவனுடைய மகள் வாசவதத்தையைக் கண்டு உதயணன் காதல் கொண்டான். ஒரு நாள் புனல் விளையாட்டின் போது நகரத்தில் நேர்ந்த குழப்பத்தால் உதயணன் அவளை ஒரு பிடியின் மீது ஏற்றிக் கொண்டு தன் நாடு நோக்கிச் சென்றான். நெடுந்தூரம் வந்த அயர்ச்சி தாங்கமாட்டாத பிடியானது வழியிலே விழுந்து இறந்தது. அப்போது அவ்யானையின் உயிர் தன்னெறியை அடையச் செய்ய வல்ல மந்திரமொன்றை அதன் காதில் உபதேசித்துவிட்டு, தனக்கு அந்த யானை செய்த நன்றிக்காகப் பெரிதும் மனம் நெகிழ்ந்து 'மறுபிறப்பிலும் நீ என்னுடன் சேர்ந்து உறைவாயாக' என்று வேண்டினனும்.

எம்மை இடுக்கண்
இம்மை தீர்த்தோய்
வரும்பிறப் மெய்மொடு
ஒழுங்கா கியர் எனச்
செந்தா மரைக் கண்
தெண்பனி யுறைப்ப
நிறுத்த பொற்கு
நெஞ்சில்திகழ் கவற்சியன்
ஒழுங்கு ஆகியர்-ஒன்றாக
வாழ்வாயாக

என்று ஆசிரியர் கூறுகிறார். தனக்கு உதவிய ஒரு விலங்கின் அன்புக்கு உருகி உளங்குழைந்து உதயணன் இவ்வாறு வேண்டுவது இலக்கிய உலகத்திலேயே தனிச் சிறப்புடையதோர் செய்தி.

நூற்றி இருபத்தைந்தாவது ஆண்டைக் கொண்டாடும் பாரத மகாபுருஷர் ரவீந்திர நாத்தாகூரின் மறுபிறப்பு ஆசையை இங்கு படிப்போம்.

(தொடரும்)

## காலத்தால்...

(5 ஆம்பக்க தொடர்ச்சி)

தூரம் இருக்கிறது. எங்கு நோக்கினும் துன்பத்திற்குக் குறைவில்லை.

பொருளாதார வளர்ச்சியும் சமூக வளர்ச்சியும் அதிகமாக ஆக சுக வாழ்க்கையும் அதிக சிக்கல் உள்ளதாக மாறுகிறது. வியாபாரமும் வர்த்தகமும் பெருகுகின்றன. பெற்றுக்கொள்பவனிடம் ஒன்றையும் எதிர்பாராமல் பண்டங்கள் கொடுத்து வந்தது போய் பதிலுக்கு வேறு பண்டங்களைப் பெற்றுக் கொள்வது என்கிற பண்டமாற்று முறை ஏற்படுகின்றது. அதன் பிறகு பணம் வழங்க ஆரம்பிக்கிறது அதனால் எல்லா விதமான பேரங்களிலும் பெரிய மாறுதல் உண்டாகிறது. வாங்கிய பொருளுக்கு பொன் அல்லது வெள்ளி நாணயங்களைக் கொடுப்பது மிகவும் சுலபமான முறையாய் இருப்பதால் வியாபாரம் பெருகுகிறது. இதற்குப் பிறகு ஜனங்கள் நாணயங்களைக்கூட எப்பொழுதும் உபயோகிக்காமல் அடையாளங்களை உபயோகிக்க ஆரம்பிக்கிறார்கள். இவ்வளவு பணம் கொடுக்கப்படும் என்று ஒரு காகிதத்தில் உறுதி எழுதப்பட்டிருந்தால் அதுவே போதும் என்று கருதப்படுகிறது. இவ்வாறு 'பாங்கி நோட்டு' களும் 'பண முறி' களும் வழங்கத் தலைப்படுகின்றன அதாவது பணம் கொடுக்கப்படும் என்கிற நம்பிக்கையின் மீது கடன் வியாபாரம் செய்யப்படுகிறது என்பது அர்த்தம். இந்த நம்பிக்கை காரணமாகவும் வியாபாரமும் வர்த்தகமும் விருத்தி அடைகின்றன. இக்காலத்தில் நோட்டுகளும் பண முறிகளும் அதிகமாக உபயோகப்படுத்தப்படுகின்றன என்பது உங்களுக்குத் தெரிந்ததே. தெரிந்தவர்கள் பொற்காசுகள் அல்லது வெள்ளிக்காசுகள் [illegible] கொண்டு போவதில்லை.

## தமிழ் மண்ணில்

(5ஆம் பக்கத் தொடர்)

சிவில் நிர்வாகம் இல்லாத நிலையில் ஒரு சிவில் வழக்கினை இவ்வளவு சீக்கிரம் முடித்துவைத்தமை பாராட்டுக்குரியதே. தமிழ் மண்ணில் மக்களும் - மாக்களும் புட்களும் - பூக்களும் அநியாயமாக கொல்லப்படுகின்ற போதிலும் தமிழ் மண்ணில் நீதியை சாகாமல் பாதுகாத்த பெருமையை இன்னும் பல தசாப்தங்களின் பின் சரித்திரமாக பயில்வோர் உணரக்கூடியதாக செயல்படும் மக்கள் சமாதான சபைகள் உயர்ந்த - உன்னத பணியை செய்து வருகின்றன. அவை வளர வேண்டும்.

## அருள்வேல் அழகன்...

(3ஆம் பக்க தொடர்ச்சி)

னித் தேயுமனமுடையவர்கள் செங்கைக்கு எட்டும் சிவஞானப் பழமாகவும் அருள் பாலித்து வருவது கேட்டு,அறிந்து, உணர்ந்து அனுபவித்த அடியார்களின் கருத்தாகும்.

அருள் மிகு மாவையம் பதியிலே நாள்தோறும் நல்லிசை முழங்குகிறது திங்கள் தோறும் திரு விழா ஒளி பெற்றுத் திகழ்கிறது. ஆண்டு தோறும் அணி விழாக் கோலமாக திகழ்கிறது. அறுதியிட்டுக் கூற முடியாத காலந்தொட்டே இந்த ஆலயத்தில் மகோற்சவங்கள் நடைபெற்று வருகின்றன.

மகோற்சவ காலங்களில் திங்களும், செங்கதிரும், மங்குலும் தங்கும் உயர்கோபுரத்தில் குக்குடத்துவஜம் பறக்க, முத்துவிதான மணிமண்டப உட்பிரகாரங்கள் ஒளி விளங்க, மறையொலி துலங்க, பக்தர் குழாம் பண்ணிசைபாட குழலொலி, முழவொலி, கூததொலி, ஏத்தொலி எங்கும் குழாம் பெருகி விழாவொளி விண்ணளவும் சென்று விம்ம பல்லியம் பலமுழங்க பச்சை மயில் வாகனத்தில், அணி பணிகளேந்திய அழகு முத்துக்குமரன் பவனி வரும் அற்புதக் காட்சிகளும் சித்திர முகமாறும் முத்துமணி மார்பும் திக்கினில் இல்லாத பெருமாளாகத் தோற்றுமறைகாணாத சிவன்தரு குழவிதெனகொண்ட அமரர் பதி திறைகொண்ட மாவைவேள் தேரேறி வரும் திவ்விய காட்சியும் ஐந்தாம் திருநாளன்று ஆறுமுகப் பெருமான் அரைவடம் அலம்பு கிண்கிணி பரிபுரம் நெருங்கு தண்டைகள் அணிமணி சதங்கை கொஞ்சிட அகமகிழ்வு கொண்டு ஆடிவரும் அழகராகக் காட்சி கொடுப்பதும் அழியாத புனித அதீதக் காட்சிகளாகும். வேண்டுவார் வேண்டும் வரங்களைத் தும் கிடைக்கக்கூடிய தாக மந்திர தந்திர பூசைகளால் உருவேற்றப்பட்ட இம்மகோற்சவங்களில் அடியார்கள் ஆயிரமாயிரமாக கூடி தரிசித்து தத்தம் இஷ்ட சித்திகளைப் பெறுகிறார்கள்.

### சாதனை

மனிதாபாதை நெடுந் தூரமுள்ளது எழுந்திரு. விழித்தெழுந்து இலட்சியத்தை அடையும் வரை நிற்காதே!

தெய்வீகம் உனது பிறப்புரிமை ஒழுங்கான சாதனையில் மூலம் அதை வெளிப்படுத்து

சாதனை உனக்கு மகிழ்ச்சியைக் கொடுக்கும்.

— ஸ்ரீசுவாமி சிவானந்தா

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# தீவுப்பகுதி நீர்வளம் பாதிப்படைந்து வருகிறது

## கூடுதலான நிலப்பகுதிகளின் பயன் இழக்கப்படும் அபாய நிலை

யாழ்ப்பாணக் குடாநாட்டிற்கு அண்மையாக பல தீவுகள் காணப்படுகின்றன. இவற்றுள் மண்டைதீவு, வேலணைத்தீவு, காரைதீவு, எழுவைதீவு, அனலைதீவு, புங்குடுதீவு, நயினாதீவு, நெடுந்தீவு என்பன குறிப்பிடத்தக்கன. இந்த எட்டுத் தீவுகளிலுமே மக்கள் நிரந்தரமாக வாழுகின்றார்கள். இத்தீவுகள் எல்லாம் சேர்ந்து 1981 மார்ச் மாதம் எடுக்கப்பட்ட மதிப்பீட்டின்படி 82110 பேரைக் கொண்டிருந்தன. பொதுவாகப் பார்க்கும் பொழுது இத்தீவுகள் அடர்த்தியாக மக்கள் வாழும் பகுதியென்றே சொல்லவேண்டியிருக்கின்றது. அதாவது மேற்குறித்த மதிப்பீட்டின்படி சதுர மைலுக்கு 1049 பேர் காணப்பட்டனர்.

இத்தீவுகளில் வாழும் பெரும்பகுதியான மக்கள் விவசாயம் சார்ந்த தொழில்களிலேயே ஈடுபட்டுள்ளனர். எனினும் காலநிலைத் தன்மைகள் விவசாயத் தொழில்களுக்கு அவ்வளவு சாதகமாக இல்லையென்றே கூறவேண்டியிருக்கின்றது. இத்தீவுகளின் நீரியல்புகள் பெருமளவுக்கு இவற்றின் அளவிலும், இவை சூழவாகப்பட்டுள்ள கண்ணக்கற்பாறையின் தன்மையிலும், ஒரு டார்த்த மழைவீழ்ச்சி ஒழுங்கிலும் தங்கியுள்ளது.

**இ. மதனாகரன்**
யாழ். பல்கலைக்கழகம்

கடந்த சில தசாப்தங்களாக இத்தீவுகளில் ஏற்பட்டுள்ள நீர்ப் பிரச்சினை இன்று ஓர் பெரும் பிரச்சினையாக உருவெடுத்துள்ளது. நெடுந்தீவு, புங்குடுதீவு, எழுவைதீவு ஆகியவற்றிலும் ஏனைய தீவுகளின் சில பகுதிகளிலும் நீர்ப்பிரச்சினைகள் காரணமாக பயிர்ச் செய்கையிலும் வீழ்ச்சி ஏற்பட்டுள்ளது. இப்பாகங்களில் பயிர்ச்செய்கை வீழ்ச்சி காரணமாக நெடுந்தீவு, புங்குடுதீவு ஆகியவற்றிலிருந்து பல விவசாயக் குடும்பங்கள் குடியேற்றத் திட்டங்களை நோக்கிச் சென்று குடியேறியுள்ளார்கள். இன்னும் பலர் விவசாயக் கூலிகளாகவும், ஏனைய கூலிகளாகவும் பல பகுதிகளிலும் சென்று குடியேறியுள்ளனர். இவர்களை விட வியாபார நோக்கமாக சேவைத் தொழில்களில் ஈடுபடுவோரும் பலர் இந்நாட்டின் பல பகுதிகளிலும் தொழில் புரிகின்றனர். வருடம் முழுவதும் குடிப்பதற்குத் தேவையான நீரின்மையால் இத்தீவுகளின் பல பகுதிகள் மக்கள் வாழத் தகுதியற்ற பகுதிகளாக மாறிவருகின்றன. வருடத்தில் ஆறு மாதங்களுக்கு மேலாக புங்குடுதீவு போன்ற சில பகுதிகளுக்கு சமூக சேவைத் திணைக்களத் திணைக்களத்தினரால் பவுசர்கள் மூலம் குடிநீர் விநியோகிக்கப்படுகின்றது.

கடந்த சிலகாலமாக வேலணைத்தீவில் களங்களில் மண்ணை வெட்டி எடுத்து நெல்வயல் பகுதிகளை நிரப்பி தோட்ட நிலங்களாக மாற்றிவருகின்றனர். அத்துடன் மிளகாய் விலை உச்சத்தை அடைந்த காலப்பகுதிகளில் இத்தகைய பகுதிகளில் கிடைக்கக்கூடிய நீரின் அளவினைக் கருத்திற்கொள்ளாது பலர் கிணறுகளையும் வெட்டுவித்தார். சிறிய விவசாய நிலங்களாக இருந்தமையாலும், நீர்ப்பீடம் மேற்பரப்புக்கு அண்மையாக இருந்தமையாலும், தரையின் தன்மையின் காரணமாகவும் அதிகளவு கிணறுகள் குறுகிய காலப்பகுதியில் அமைக்கப்பட்டன. அத்துடன் நீரை இறைக்கும் முறையிலும் பழைய முறைகளுக்குப் பதிலாக நீரிறைக்கும் இயந்திரங்கள் பயன்படுத்தப்பட்டன. இத்தகைய காரணிகளால் கிணறுகளில் உவர்நீர் ஊடுருவத் தொடங்கியது. கடந்த காலத்தில் நன்னீர்க் கிணறுகளாயிருந்த பல கிணறுகள் இன்று உவர் நீரைக் கொண்டு காணப்படுகின்றன. இதேபோன்று பல தோட்ட நிலங்களும் இன்று பயிர்ச்செய்கைக்குதவாத நிலங்களாக மாறியுள்ளன.

இன்று தீவுப்பகுதியின் பெரும்பாலான மக்களுக்கு வருடத்தில் ஏறத்தாள 9 மாதங்களுக்கு சிறந்த குடிநீர் கிடைக்காமலிருப்பதே முக்கிய பிரச்சினையாக இருக்கின்றது. வீட்டிலிருக்கும் பெண்கள் ஒரு நாளின் பெரும்பகுதியை தூர இடங்களுக்குச் சென்று குடிக்கும் நீரை கொண்டு வருவதற்கே செலவிட வேண்டியிருக்கிறது. இப்பாகங்களில் மக்கள் வாழ்க்கையை மேலும் நிலைக்கச் செய்வதற்கு அடிப்படைத் தேவையான நீரும் மற்றும் வசதிகளும் கிடைக்கக்கூடியதான வழிவகைகளை ஏற்படுத்தவேண்டும். இப்பாகங்களில் கிடைக்கக்கூடிய நீரின் அளவினை அறிந்து இதனை விஞ்ஞான முறையில் பயன்படுத்தத்தக்க வழிவகைகளை இனங்கண்டு கொள்ள வேண்டியுள்ளது. மேல் மண்படை

> தீவுப்பகுதியின் நெருக்கடி நிலை பற்றிய விரிவான கருத்தரங்கு ஒன்று யாழ். இந்துக் கல்லூரியில் இன்று நடைபெறுகிறது. அதனையொட்டி இக்கட்டுரை இங்கு பிரசுரிக்கப்படுகிறது.

பெருமளவு அகற்றப்படுவதனாலும் கரையோரப் பாகங்களில் முருகைக் கற்பாறைகள் அகற்றப்படுவதினாலும் நீர்ப்பீடத்தில் ஏற்படக்கூடிய தீங்குகள்பற்றி மக்களுக்கு அறிவுறுத்தி தேவையான சந்தர்ப்பங்களில் சட்டவிதிகள் மூலம் இத்தகைய தீங்குகள் தவிர்க்கப்படவேண்டும். கிடைக்கும் நீரை சிக்கனமாகவும், உச்சநிலைப் பயனைத்தரத்தக்க வகையிலும் பயன்படுத்துவதற்கு மக்கள் முயற்சிக்கவேண்டும். இவ்வகையான முயற்சிகள் மேற்கொள்ளப்படாவிட்டால் இத்தீவுகள் மக்கள் வாழ்க்கையற்ற பகுதிகளாக வருங்காலத்தில் மாறினாலும் ஆச்சரியப்படுவதற்கில்லை.

## ஜெயவர்த்தன---

(3ஆம் பக்கத் தொடர்)

ளது.

1984 சர்வகட்சி மாநாட்டை பயனற்றதாக்கிய மகாசங்கம் உட்பட பல சமய நிறுவனங்கள் புதிய அரசியல் கட்சிகள் மாநாட்டுக்கு அழைக்கப்படவில்லை.

இது அரசியல் தீர்வு ஒன்றைக் காணும் நம்பிக்கையை நிச்சயம் தந்திருக்க வேண்டும்.

ஜூன் கடைசி வாரத்தில் மாநாடு ஆரம்பமானது. ஆனால் மிதவாத இலங்கை அரசியல் தலைவர்களை மாநாட்டில் கலந்து கொள்ளச் செய்ய முடியவில்லை.

வடக்கு, கிழக்கு மாகாணங்களில் மாகாண சபைகள் அமைக்கும் இலங்கையின் யோசனைகளில் முன்னேற்றம் காணப்பட்டும் மிதவாத அரசியல் தலைவர்களை மாநாட்டில் கலந்து கொள்ளச் செய்ய முடியவில்லை.

**திருப்தி இல்லை**

இந்த யோசனைகளில் அதிகாரப்பரவலாக்கல் முறை, காணி அபிவிருத்தி, சட்டம், ஒழுங்கு முதலியன குறித்துக் காணப்படும் முன்னேற்றங்கள் திருப்தியானதாக இல்லை என்று சுதந்திரமான வட்டாரங்கள் தெளிவாகக் கூறிவிட்டன.

இலங்கைத் தமிழர் அமைப்புக்களின் ஆகக் குறைந்த எதிர்பார்ப்புக்களுக்கும் அரசின் யோசனைகளுக்கும் இடையேயான இடைவெளி இன்னும் பெரிதாகவே உள்ளது என்பது தெளிவாகத் தெரிகிறது.

(தொடரும்)


Something New In
JAFFNA.
YOU ARE CORDIALLY INVITED TO VISIT:
Hotel Gnanam's
UNDER NEW MANAGEMENT
Relax at BEER GARDEN
ALSO
CHINESE MEALS, COOL DRINKS, SHORTEATS, LUNCH
ORDERS UNDERTAKEN FOR
* WEDDING RECEPTION
* BIRTHDAY PARTIES
* COCKTAIL PARTIES
* CONFERENCE
* SEMINAR
Etc. Etc. Etc. Etc. Etc.
உங்கள் உவகைக்கும் உளத்திற்கும் புதிய தெம்பை அளிக்க
காலை 9.30 மணி தொடக்கம் இரவு 11.30 மணி வரை சேவை செய்யக் காத்திருக்கிறது.
ஹோட்டல் ஞானம்ஸ்
299, மணிக்கூட்டு வீதி,
யாழ்நகர்.
தொலைபேசி: 22082, 23067
Where our Standards are High


# பிற்பட்டோர் நலனுக்கு உழைத்த 'பாபுஜி' ராம்

அன்பே ஆண்டவன் என்று நினைத்தால், அனைவரும் ஒரு குலமாகவே வாழ்ந்தால்—

சாதியும் இராது சாதிப்பிரச்சினையும் எதனையும் சாதிக்காது

மாநிலம்மேல் சில மானுடரால் வரும் மாறுதல்கள் மாற்றமடையவேண்டும் அவர்களால் ஏற்படுத்தப்படும் இனப்பூசல்கள் முற்றாக ஒழிக்கப்படவேண்டும்.

**கணதீபன்**

கல்கத்தா பல்கலைக்கழகத்தில் படித்துக்கொண்டிருந்த இளைஞன் ஜெகஜீவன்ராமின் மனதில் ஆழமாகப் பதிந்தவை இவை.

மண்ணில் பலவித பிரிவினைகளை அறவே வெறுத்தார்.

மனிதன் மிருகமாய் மாறுவது கண்டு உள்ளம் குமுறினார்

நசுக்கப்பட்டும் ஒடுக்கப்பட்டும் அவதிப்படும் சமுதாய மேம்பாட்டுக்காகத் தன்னால் இயன்றதைச் செய்யவேண்டும்.

அனைவரும் ஓர்குலமாகவே வாழவேண்டும்.

அதற்காக தனது வாழ்வையே அர்ப்பணிக்க வேண்டும் என அவர் துடித்தார்.

அந்த உணர்ச்சித் துடிப்புடன்தான் 1930 ஆம் ஆண்டு அரசியலில் புகுந்தார் பாபுஜி ஜெகஜீவன்ராம்.

தொடர்ந்து பல ஆண்டுகள் ஓயாது பணியாற்றினார் அந்த உத்தமத் தொண்டர் இப்பொழுது நம்மத்தியில் இல்லை.

அவர் மறைந்துவிட்டார். அவரது பாதையின் சுவடுகளும் அவர் காட்டிச் சென்ற நெறிகளும் என்றும் மறையமாட்டாது.

ஹரிஜனர் எனப் பெயரிட்டு, சில மக்களால் தீண்டப்படக் கூடாதவர் எனக் கருதப்பட்டு வந்த மக்களின் ஒப்பற்ற தலைவரை அக்கினி தேவன் வாஞ்சையுடன் அரவணைத்துக்கொண்டான்.

புகழ்பெற்ற இந்திய தேசியத் தலைவரும், விடுதலைப் போராட்ட வீரரும், சுமார் 40 வருட காலம் இந்திய அரசியலில் சிறப்பிடம் பெற்றவருமான ஜெகஜீவன்ராமின் வாழ்வு முடிந்துவிட்டது.

மத்திய அமைச்சரவையில் 30 ஆண்டு காலம் அவர் தொடர்ந்து இடம் பெற்றிருந்தார்.

தொழிலாளர் நலம், உணவு, விவசாயம், தகவல், தொடர்பு, ரயில்வே, பாதுகாப்பு போன்ற அமைச்சர் பதவிகள் இவரால் அலங்கரிக்கப்பட்டன.

ஜவஹர்லால்நேருவின் ஆலோசகராக, காங்கிரஸ் கட்சியின் முக்கிய தூணாக, நல்ல நிர்வாகியாக, சிறந்த பேச்சாளராக, பாராளுமன்றத்தில் எதிர்க் கட்சியினரின் தாக்குதல்களால் தளராமல் சாட்டையடி கொடுப்பதில் வல்லவராக மிளிர்ந்தவர் ஜெகஜீவன்ராம்.

1908ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 5ஆம் திகதி பீகார் மாநிலத்திலுள்ள சாண்டோ என்ற கிராமத்தில் பிறந்தவர் இவர்.

இந்திராணியை மணம் முடித்த இவருக்கு மீனாகுமாரி என்ற மகளும் சுரேஷ்ராம் என்ற மகனும் பிள்ளைகள்.

மகள் மீனாகுமாரி இந்திரா காங்கிரஸ் கட்சியில் சேர்ந்து தந்தையின் ஆசியுடன் நாடாளுமன்ற உறுப்பினராக இருக்கின்றார்.

மகன் சுரேஷ்ராம் 1985ஆம் ஆண்டு மாரடைப்பால் மாண்டான்.

ஆரேநகரப் பாடசாலையில் கல்வியை ஆரம்பித்த ஜெகஜீவன், கல்வி இந்து பல்கலைக் கழகத்திலும் கல்கத்தா பல்கலைக் கழகத்திலும் பட்டப் படிப்பை முடித்தார்.

1930 ஆம் ஆண்டு சுதந்திரப் போராட்டத்தில் ஈடுபட்டார்.

ஒடுக்கப்பட்ட மக்களின் உயர்வுக்காக பாடுபடும் பொதுவாழ்வில் அவர் இறங்கினார்

பீகாரில் வேளாண்மை தொழிலாளர் இயக்கத்தின் முன்னோடியாகவும் அவர் திகழ்ந்தார்.

விடுதலைப் போராட்டத்தில் தீவிரமாக ஈடுபட்ட ஜெகஜீவன்ராம் 1940 ஆம் ஆண்டு தனிநபர் சத்தியாக்கிரகத்தில் ஈடுபட்டு சிறை சென்றார். பின்னர் 1942 இல் வெள்ளையனே வெளியேறு' போராட்டத்தில் இறங்கி கைது செய்யப்பட்டார்.

1936 ஆம் ஆண்டு பீகார் சட்டமேலவை உறுப்பினரான அவர் 1937 இல் சட்ட பேரவைக்கு தெரிவானார்.

1946 ஆம் ஆண்டுமுதல் 1950 வரை மத்திய சட்டப் பேரவையிலும் அரசியல் அமைப்பவையிலும் திரு ஜெகஜீவன் ராம் உறுப்பினராக பொறுப் பேற்றிருந்தார்.

1950 — 1952 இடைக்கால நாடாளுமன்ற உறுப்பினராக இருந்து வந்தார்.

1952 முதல் பீகார் ஸஸராம் தொகுதியிலிருந்து அவர் தொடர்ந்து நாடாளுமன்றம் தேர்ந்தெடுக்கப்பட்டவர் இறுதி மூச்சுவரை அவர் இப்பதவியிலிருந்தார்.

1946 செப்டம்பரில் ஜவகர்கலால்நேருவின் இடைக்கால அமைச்சரவையில் இடம்பெற்ற அவர் 1977 ஆம் ஆண்டு வரை தொடர்ந்து மத்திய அமைச்சரவையில் அங்கம் வகித்து வந்தார்.

காமராஜர் திட்டத்தின்படி பதவி விலகி 28 மாதங்கள் மட்டுமே வெளியில் இருந்தார்.

பாதுகாப்பு, ரயில்வே, விவசாயம், உணவு, தொழில், தொழிலாளர் நலம், தகவல் தொடர்பு முதலான பலதுறைகளில் அமைச்சராக இருந்து திறம்பட செயலாற்றினார்.

1969 ஆம் ஆண்டு காங்கிரஸ் கட்சி பிளவுண்ட போது இந்திராவுடனிருந்து காங்கிரஸ் கட்சி தலைவரானார்.

1977 இல் இந்திராவுடனான உறவுகளைத் துண்டித்துக் கொண்டு ஜனநாயக காங்கிரஸ் என்ற கட்சியை ஆரம்பித்து பின்னர் ஜனதாவுடன் சங்கமித்தார்.

மொரார்ஜி தேசாய் தலைமையிலான ஜனதா அரசு ஆட்சிக்கு வந்த பொழுது ஜெகஜீவன் ராம் அமைச்சராகப் பதவி ஏற்றார். சிறிது காலம் துணைப் பிரதமராகவும் பணிபுரிந்தார்.

1980 இல் ஜனதாவிலிருந்து விலகி காங்கிரஸ் (ஜெ) என்ற கட்சியை உருவாக்கினார்.

அண்மையில் பிரதமர் ராஜீவ் நியமித்த பஞ்சாப் ஆலோசனைக் குழுத் தலைவராக அவர் அமர்த்தப்பட்டார் என்பதும் குறிப்பிடத்தக்கது.

## தொழிற்சங்க வரலா---

(2-ம் பக்கத் தொடர்ச்சி)

டத் தம்மாலான ஆலோசனைத்து உதவியும் புரிந்தார்

நியாயமற்ற முறையில் அரசஊழியர் தண்டிக்கப்பட்டபோதெல்லாம் அவர்க்கென வாதிட அவர் என்றும் பின்நின்றதில்லை

சாதாரணச் சிற்றூழியர்களிலிருந்து அதியுயர் மட்ட அதிகாரிகள்வரை குற்றம் சாட்டப்பட்டவர்களுக்காக வாதாடி நியாயம் பெற்றுத்தந்தவர். ஒரு உயர் அதிகாரியை இடைநிறுத்திய ஓர் அமைச்சின் செயலாளரைத் தொடர்ந்தும் பதின்மூன்று நாட்கள் குறுக்குவிசாரணை செய்து குறித்த உயர் அதிகாரியை மீள வேலைக்கமர்த்திச் செய்தவர் நித்தி.

**அகதிகள் புனர்வாழ்வு**

1958 கலவரத்தின் அகதிகளுக்கென கொழும்பு றோயல் கல்லூரியில் செனட்டர் நடேசனுடன் முகாமை நடத்திவரும் 1967 ஒகஸ்ட் அகதிகட்கெனக் கொழும்பு பம்பலப்பிட்டி இந்துக் கல்லூரியிலும் அதனைச் சூழவும் ஆறுக்குக்குறையாத முகாம்களைப் பொறுப்பேற்று நடத்தியவரும் நித்தியே.

1977 அகதிகளை கப்பல், விமான புகையிரத மார்க்கத்தில் விரைவாக வடக்கு கிழக்கிற்கு அனுப்பவும் இடம்பெயர்ந்த மலையகத் தமிழ் மக்களைக் கிளிநொச்சியிலும், கண்ணடி, டொலர், கென்ட் பண்ணைகளிலும் குடியமர்த்தவும் தூண்டுகோலாயிருந்தவர் நித்தி.

1978 நவம்பரில் மட்டக்களப்பைக் கலக்கிய சூறாவளியிற் துயருற்றோர் துயர்களையப் பறந்து பறந்து பணியாற்றினார் நித்தி.

தமிழ் அகதிகளின் புனர்வாழ்வுக்கெனத் தமிழ் அகதிகள் புனர்வாழ்வுக் கழகத்தை (T.R.R.O) நிறுவி அதனை ஒரு தர்மஸ்தாபனமாக அரசை அங்கீகரிக்குமாறு விண்ணப்பித்தபோது அதன் பெயரிலுள்ள தமிழ் எனும் பதத்தை நீக்குமாறு அரசாங்கம் கூற அவ்விதம் நீக்கமுடியாதென எதிர்த்து நின்று அத்தகைய அங்கீகாரம் எதுவுமின்றியே கழகத்தை நடாத்தியவர் நித்தி.

**பனம்பொருள் அபிவிருத்திச் சபை**

தொழிற்சங்க சமூக சேவைத்துறை ஈடுபாட்டினால் பதவிகளைத் தியாகம் செய்தவர் அவர். இ. நி சேவைப் பதவியுயர்வுகூட இறுதிக்காலத்தில் உவந்துதான் அவருக்கு வழங்கப்பட்டது.

1978 யூன் மாதத்தில் பனம் பொருள் அபிவிருத்திச் சபை உருவாக்கப்பட்டபோது அதன் தலைவராக நியமிக்கப்பட்டார். அதன் உயர்வுக்கான திட்டங்களை உருவாக்கி வருகையிலேயே நோய்வாய்ப்பட்டு வைத்தியசாலையிற் படுத்தபடுக்கையானார்.

அந்நிலையிலும் கூட அவர் எண்ணமெல்லாம் தமிழ், தமிழர் வாழ்வு என்பதைச் சுற்றியே இருந்தது. பனம் பொருளைக் கொண்டு தமிழர் பொருளாதாரத்தை உயர்த்தும்திட்டங்களைத் தீட்டினார். தமிழ் அகதிகள் புனர் வாழ்வுக்கான திட்டங்களை உருவாக்கினார். ஆனால் அவற்றை நடைமுறைப்படுத்து முன்----

1980 யூலை 18ம் திகதி அவரது மூச்சு [illegible] உடன் கலந்தது.

## பண்டிதமணி..

(3ஆம் பக்கத் தொடர்)

வர் வரிசையில் ஓர் அங்கத்தவர் அன்றிப் பண்டிதப்பரீட்சை நடத்தும் பரீட்சகர்களுள்ளும் ஒருவர். அவர்களவ்வாறிருந்தும் பரீட்சைக்குப் படிக்கும் வழியைச் சொல்லி வைக்கவில்லை. அவர்களிடம் அதனைக்கேட்பதற்கு எனக்குத் துணிவும் இல்லை''

இவ்வாறுகப் பிள்ளை அவர்களின் பாட்டன் முறையினரும் மகாலிங்க சிவம் முதலான ஐவரின் தந்தையாரும் உரையாசிரியர் எனப் புகழ்பெற்றவரும், சிதம்பரத்துச் சைவப்பிரகாச வித்தியாசாலைத்தலைமை உபாத்தியாயருமான உயர்திரு. ம. க. வேற்பிள்ளை என்னும் பெரியார் யாழ்ப்பாணத்துக்கு வந்திருந்தார். அவர் வரவைக் கண்ட பிள்ளை அவர்கள் கொண்ட மனநிலையை அவரே கூறுகின்றார்.


"இந்நிலையில் சிதம்பரத்திலிருந்து உரையாசிரியர் ம. க. வேற்பிள்ளை அவர்கள் யாழ்ப்பாணம் வந்தார்கள். வண்ணார்பண்ணை நாவலர் வித்தியாசாலையிலும் சில தினம் தங்கினார்கள். அவர் சிதம்பரத்தில் நாவலர் வித்தியாசாலைத் தலைமையாசிரியர் அவர்களை இங்கே நிறுத்திப் புலவர் அவர்களின் இடத்துக்கு வைத்துக் கொண்டால் என்னுடைய பரீட்சை ஆசையும் நிறைவேறும் என்பதை மனசில் வைத்துக் கொண்டு, மனேச்சர் அவர்களுக்கு விண்ணப்பித்தேன். அவர்கள் உடன்பட்டார்கள்.

ஆனால் உரையாசிரியர் அவர்கள் சிதம்பரசபா நடேசரைத் தரிசியாமல் இங்கே நாள்களைக் கழிக்க விரும்பவில்லை. ஆயினும் தங்கள் விருப்பத்தை நிறைவேற்ற வழிவகுக்க வேண்டும் [illegible] சிதம்பரம் சென்றுவிட்டார்கள்.

—வளரும்

## சொற்சிலம்பம்

**போட்டி இல. 24**



அனுப்புவோர் பெயர்: ..............................

விலாசம்: ..............................

..............................

ஒப்பம்: ..............................

**போட்டி விதிகள்**

சொற்சிலம்பம் போட்டி விதிகள் ஒவ்வொரு மாதமும் முதல்வாரத்தில் வெளியாகும்.

**மேலிருந்து கீழ்**

1. நடனமாடும் பெண்கள் அணியும் அணிகலன்களில் ஒன்று
2. அனேகம்
3. இளையவன்
4. முனிவர் இயற்றுவது
5. வாய் உறுப்பில் இருக்கும்
7. ரணம்
9. வாத்தியக்கருவி ஒன்று
11. இரண்டு
12. கிலேசம்
14. பெண்களின் பருவங்களுள் ஒன்று
15. பலவந்தமாக உட்செலுத்துதல்
16. விலகு
17. அயர்ச்சி
19. பூமி
21. காட்டு மிருகம்
23. சமுத்திரம்

**இடமிருந்து வலம்**

1. பிரதிக்கினை
4. முனிவர்
6. சேத்திரம்
7. பாதுகாப்பு
8. விருப்பம்
10. வடக்குக் கிழக்கில் கேட்டுக் கேள்வியின்றி நடப்பது
12. தாண்டு
13. முடியில் வருவது
16. ஒன்பது
18. தமிழ் காப்பியம் ஒன்றின் நாயகி
20. யுத்தம்
22. செல்வம்
24. மறைப்பதற்குத் தேவை
25. பழம்
26. ஓழி

**சொற்சிலம்பம் இல. 22 விடைகள்**

**இடமிருந்து வலம்**

1. மகாபாரதம் 6. கவிதை 7. ஆணி 8. அடுக்கு 9. துருவம் 11. திதி 13. வசி 14. பதவி 17. பலகார 18. நயம் 19. தரை 21. தகும் 22. அம்புலி

**மேலிருந்து கீழ்**

1. மகத்துவம் 2. காவி 3. பாதை 4. தண்டு 5. வாணி 7. ஆகுதி 8. அம்பலம் 10. குசி 12. திட்டு 14. பலம் 15. தகா 16. விரதம் 17. பயம் 18. நகு 20. ரைபு

**வெற்றி பெற்றவர்கள் விவரம்**
**சொற்சிலம்பம் இல. 22**

முதலாம் பரிசு: சா. ஜெயச்சந்திரன்
இலங்கை வங்கி,
ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம்.

இரண்டாம் பரிசு: திருமதி எஸ். சுப்பிரமணியம்
'நல்லாறு'
தபாற்கந்தோர் வீதி,
வீமன்காமம்,
தெல்லிப்பளை.

மூன்றும் பரிசு: க. செல்வகுமாரி
3 ஆம் வட்டாரம்,
புங்குடுதீவு.

* பரிசுக்குரிய பணத்தைப் பெறுவதற்கு, கடிதம் கிடைத்த பின்னர் பரிசு பெற்றவரே உரிய அடையாள அத்தாட்சிகளுடன் நேரில் வர வேண்டும்.

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org



உள்ளூர் உற்பத்திக்கு
ஆதரவு தாருங்கள்
சுப்ப மில்க்வைற் சோப்
புதிய விலை
ரூபா 4-50 சதம்
மட்டுமே!
8 மேலுறைகளை
அனுப்பி
"மில்கவைற்"
செய்தியை
பெற்றுக் கொள்ளுங்கள்
மில்க்வைற்— யாழ்ப்பாணம்.



# சஞ்சீவி

12 - 07 - 1986 சனிக்கிழமை



நுரைவளம் கூடிய
'மில்க்வைற் நீலசோப்'
வாங்கி உபயோகியுங்கள்.
100 மில்க்வைற் நீலசோப் மேலுறைகளில் உள்ள திருக்குறள் வசனத்தை வெட்டி அனுப்பி அழகிய கைலேஞ்சி ஒன்றை பரிசாகப் பெற்றுக்கொள்ளுங்கள்.
'மில்க்வைற்- யாழ்ப்பாணம்'


## அடியைக் கண்டாயிற்று

# முடியைத் தேடக் கொழும்பு வரும் கூட்டணியின் தலைவர் குழாம்

அடியைக் கண்டாயிற்று இனி முடியைத் தேடிப்பிடிக்க வேண்டும்.

முடியைத் தேடிப் பிடிப்பதற்கு மீண்டும் கொழும்பு வரப் போகிறார்கள் தமிழர் விடுதலைக் கூட்டணித் தலைவர்கள்.

19 மாதங்களுக்குப் பின்னர் கொழும்பு வரப் போகும் தமிழர் தலைவர்கள் 'மூவராக' வரவில்லை. 'அறுவராக' வருகிறார்கள்.

1984 அனுபவம் 'அறுவராக' வரவைத்துள்ளது போலும்.

அடிப்படை இன்றி 1984 இல் பேச்சுக்கள் நடந்தன.

'குழப்பியடிப்பது' என்று தீர்மானிக்கப்பட்ட நிலையில் தான் இலங்கை அரசு சர்வகட்சி மாநாட்டை நடத்தியது.

'19 மாதகால அனுபவங்கள்' இன்று ஜனாதிபதியை 'நினைத்ததை முடிப்பேன்' என்று சொல்ல வைத்துள்ளது.

அந்த நிலையில் தான் 1986 அரசியல் கட்சிகள் மாநாடு நடைபெறுவதாக ஜனாதிபதி வட்டாரங்கள் கூறுகின்றன.

### முதலே வந்தது வேறுபாடு!

1986 யோசனைகளிலும் ஆரம்பத்திலேயே வேறுபாடு. அரசியல் கட்சிகள் மாநாட்டில் சமர்ப்பித்த யோசனை வேறு; சிதம்பரம் மூலம் அனுப்பப்பட்ட யோசனை வேறு.

இந்த நிலையில் சிதம்பரம் மூலம் அனுப்பப்பட்ட யோசனையின் அடிப்படையிலேயே கூட்டணியுடன் பேச்சுக்கள் நடத்தப்படும்— இப்படி ஜனாதிபதி அறிவித்த பின்னரே கூட்டணியினர் கொழும்பு வரத் தீர்மானித்தனர்.

இந்த வேறுபாட்டின் மத்தியில் வேற்றுமைகளையும் பேச்சுக்கள் தொடங்கப் போகின்றன.

"பேச்சுக்கள் தலைப்படியாக அமையும் என்று நான் நினைக்கவில்லை; அதற்கான காரணங்கள் எம்மிடம் உண்டு (I am not optimistic. We have reason not to be optimistic) — இப்படி கூட்டணிச் செயலதிபர் திரு. அமிர்தலிங்கம் ராய்ட்டர் செய்தி ஸ்தாபனத்திடம் சொல்லி விட்டார்.

சீதனம், சீர் வரிசைகள் பற்றிப் பேசித் தீர்மானிக்கும் முன்னரே, மாகாண சபைத் தேர்தல்களுக்கு கொழும்பில் திகதி கூட நிர்ணயிக்கப்பட்டு விட்டதாம்.

உள்ளும் புறமும் குறுமுனி

### கொழும்பின் அவசரக் கோலம்

கொழும்பு அவசரக் கோலம் காட்டுகின்றது. காரணம் என்ன? இந்தியாவோ மிக அமைதியாக இருக்கின்றது. (9 இந்திய மீனவர்கள் கடலில் சுட்டுக் கொல்லப்பட்டும் கூட) மர்மம் புரியவில்லை.

இந்தியாவின் பகீரதப் பிரயத்தத்தினால் கண்டு பிடிக்கப்பட்ட 'அடி' யில் இருந்து தமிழர் அபிலாஷைகளை பூர்த்தி செய்யக்கூடியதான 'முடி'யைக் கண்டுபிடிப்பதில் தமிழர் விடுதலைக் கூட்டணியினர் எவ்வளவு தூரம் வெற்றி பெறுவார்கள்?

அடுத்த வாரம் எல்லாம் ஓரளவு தெரியலாம்.

1984 இல் சர்வகட்சி மாநாடு நடந்த சமயம் வடக்கு, கிழக்கு மாகாணங்களில் இருந்த நிலை வேறு.

சென்னையில் இருந்து சர்வகட்சி மாநாட்டுக்கு கொழும்புக்கு வந்த தமிழ்த் தலைவர்கள் தங்கள் தொகுதிகளுக்கும் அப்போது வந்து விட்டுச் சென்றனர்.

தமிழர்களும் தங்கள் சொந்த வீடுகளிலேயே வாழ்ந்து வந்தனர்.

தமிழர் கொலை செய்யப்பட்டவர் எண்ணிக்கை அன்லை கண்டனக்குரல் எழுப்புவார்; வன்செயல் அடங்கிவிடும். இது 1984 இன் நிலை.

### அடக்குமுறை அதிகரித்தது

1985 பிறந்தது. தமிழர் மீது அடக்குமுறை அதிகரித்தது.

நாற்றுக்கணக்காகக் கொல்லப்பட்டனர். இந்தியா கண்டனம் தெரிவித்ததும் எண்ணிக்கை அதிகரித்ததே தவிரக் குறையவில்லை.

அகதிகளானார்கள். பிறந்த மண்ணைவிட்டு உடைமைகளை இழந்து, உற்றார், உறவினர்களை இழந்து நாடோடிக் கூட்டங்களிலும் மோசமாக ஊர் விட்டு ஊர் இடம் பெயர்ந்து விட்டார்கள் கிழக்கு மாகாணத் தமிழர்கள். குடியிருக்கும் எஞ்சியோர் உயிரைக் கையில் பிடித்தவண்ணம் வாழ்கிறார்கள்.

நாடோடிக் கூட்டத்துக்கு உயிர்ப்பாதுகாப்பு உண்டு. அந்தப் பாதுகாப்புக் கூட இல்லாதவர்கள் தமிழர்கள். நடைப்பிணமாகக் காடு, மேடு, அகதி முகாம்களில் உலாவுகின்றார்கள்.

அன்றாடம் உழைத்து வாழ்க்கை நடத்தும் மன்னார், வவுனியா, முல்லைத்தீவு மாவட்டங்களில் வாழும் தமிழ் மக்களும் அகதிகளாக இடம் பெயர்ந்துள்ளார்கள்,

தமிழர்களின் தலைநகரம் என்று 1952 இல் இருந்து தமிழ்த் தலைவர்களினால் வர்ணிக்கப்பட்டு வந்த திருகோணமலைக்கு இன்று தமிழ்த் தலைவர்கள் செல்லமுடியுமா?

திருமலை நகரைச்சுற்றியுள்ள தமிழ்க் கிராமங்கள் அழிக்கப்பட்டு விட்டன. எஞ்சியிருக்கும் பகுதிகளில் வசிப்பவர்கள் கூட வீதிக்கு இழுத்து வரப்பட்டு சுட்டுக்கொல்லப்பட்டு எரிக்கப்படுகின்றார்கள்.

### தமிழர் தாயகத்தில் ஆவிகள்

தமிழர் தாயகம் ஆவிகள் உலாவும் பிரதேசமாக மாறிவருகிறது.

உயிரைக் காப்பாற்ற ஓடிவரும் தமிழருக்கு அடைக்கலம் கொடுப்பதில் யாழ். குடாநாடே அகதி முகாமாகிவிட்டது.

வந்தாரை வாழவைக்கும் யாழ் குடாநாட்டிற்கும் தலைக்கு மேல் ஆபத்துக் காத்து இருக்கிறது.

எப்போது 'வானம்' வெடித்து விழும் என்று சொல்லமுடியாத நிலை.

இலங்கை அரசுடனான 1986 பேச்சுக்கள் மேற்கண்ட சூழ்நிலையில் நடைபெறுகின்றன என்பதை கொழும்பு வரும் கூட்டணித் தலைவர்கள் நிச்சயம் நினைவில் வைத்து இருப்பார்கள் என்று எடுத்துக் கொள்ளலாமா?

காணப்பட இருக்கும் அரசியல் தீர்வு எப்படி இருக்கவேண்டும்?

● தமிழரின் அபிலாஷைகளுக்காக உயிரிழந்த தமிழரின் தியாகம் அவம் போகக்கூடாது அவர்களின் ஆத்மா சாந்தியடைய வேண்டும்.

● தமிழ் மக்கள் தங்கள் சொந்தப் பிரதேசத்தில் கௌரவம், உயிர் உடைமைக்குப் பாதுகாப்புடன் வாழக்கூடியதாக தீர்வு அமையவேண்டும்

● பஞ்சைகளாக, பராரிகளாக அகதி முகாம்களில் வாழும் தமிழர் பரம்பரையாக வாழ்ந்த இடங்களுக்கு மீண்டும் திரும்பிச் சென்று வாழக்கூடியதான தீர்வாக அது இருக்க வேண்டும். இது தான் தமிழர் தாயகத்தில் வாழும் தமிழர்களின் அபிலாஷை.

இந்தியாவிலிருந்து கொழும்புக்கு பேச வரும் கூட்டணித் தலைவர்களுக்கு இது சமர்ப்பணம்!

இன்று நடப்பவை

### சிலுவை ஊர்வலங்கள்

உடுவில், ஜூலை 12

சுன்னாகம் - மல்லாகம் - ஏளமகால் ஆகிய பகுதிகளில் இருந்து ஆரம்பமாகும் மூன்று சிலுவை ஊர்வலங்கள் இன்று சனிக்கிழமை மல்லாகம் சந்தியில் இணைந்து பேரணியாக தொடர்ந்து மல்லாகம் சகாய அன்னை சந்நிதானத்தைச் சென்றடையும்.

இன ஒழிப்பினைக் கண்டித்து நடத்தப்படும் இந்த சிலுவை ஊர்வலங்கள் சுன்னாகம் பங்கு மக்களினால் ஏற்பாடு செய்யப்பட்டிருக்கின்றன.

சுன்னாகம் புனித அந்தோனியார் ஆலயத்தில் இருந்து பிற்பகல் 3-45க்கு ஆரம்பிக்கும் சிலுவை ஊர்வலம், மல்லாகம் புதுமை மாதா ஆலயத்திலிருந்தும் ஏளமகால் புனித சவேரியார் ஆலயத்திலிருந்தும் பிற்பகல் 4-00 மணிக்கு ஆரம்பமாகும் ஊர்வலத்துடன் இணையும். (உ-27)

### திறப்பு விழா

யாழ்ப்பாணம், ஜூலை 12

மானிப்பாய் வடக்கு உதயசூரியன் சன சமூக நிலையத் திறப்பு விழா இன்று சனிக்கிழமை பிற்பகல் 4-30 மணிக்கு நடைபெறும்.

சிவதர்ம வள்ளல் க. கனகராசா நிலையத்தைத் திறந்து வைப்பார். சன சமூக நிலையத் தலைவர் திரு. எஸ். தர்மசீலன் திறப்பு விழா நிகழ்ச்சிகளுக்குத் தலைமை வகிப்பார்.

மானிப்பாய் இந்துக் கல்லூரி முன்னாள் அதிபர் திரு. எஸ். ரி சாரி, யூனியன் கல்லூரி முன்னாள் அதிபர் திரு கே. கிருஷ்ண பிள்ளை ஆகியோர் உரை ஆற்றுவார்கள். (உ-9)

### அங்குரார்ப்பணம்

யாழ்ப்பாணம், ஜூலை 12

நாவலர் வரலாற்றுக் கண்காட்சிக்கான சிற்பங்களை உருவாக்கும் அங்குரார்ப்பணம் இன்று சனிக்கிழமை பிற்பகல் 3 மணிக்கு நல்லை ஆதீன கலாமண்டபத்தில் இடம் பெறுகின்றது.

ஸ்ரீ ஸ்ரீ ஆறுமுகநாவலர் சபை, யாழ் மாவட்ட இந்து இளைஞர் பேரவையின் அனுசரணையுடன் நடத்தும் இவ்வைபவத்தில் நல்லை ஸ்ரீ சோமசுந்தர தேசிக ஞானசம்பந்த பரமாசார்ய சுவாமிகள் ஆசியுரை நிகழ்த்துவார்.

நாவலர் சபையின் இணைத் தலைவரான பேராசிரியர் ஆ. சண்முகதாஸ் தலைமை வகிப்பார். (உ-எ)

### நூல் அறிமுக விழா

யாழ்ப்பாணம், ஜூலை 12

இணுவையூர் சிதம்பர திருச்செந்திநாதனின் 'என்றாவது ஒரு நாள்..?' குறுநாவல் அறிமுகவிழா இணுவில் கலை இலக்கிய இளைஞர் வட்டத்தின் ஏற்பாட்டினால் இன்று நடைபெறுகிறது

பிற்பகல் 2.30 மணிக்கு பேராசிரியர் ப. சந்திரசேகரம் அவர்கள் தலைமையில் இணுவில் அமெரிக்கன் மிஷன் தமிழ்க் கலவன் பாடசாலை மண்டபத்தில் நடைபெறும். இவ்விழாவில் மாநகரசபை ஆணையாளர் திரு சி. வி. கே சிவஞானம் சிறப்புரை வழங்குவார்.

முதல் பிரதியைத் தொழிலதிபர் திரு எஸ். பி நடராசா பெற்றுக் கொள்ளுவார். (உ)

## பஞ்சாப்: ராஜீவுக்கு தொடர்ந்து தலையிடி

### ஒப்பந்த அமுலுக்கான மூன்றுவது காலக்கெடுவும் வீணாகலாம்

பஞ்சாப் ஒப்பந்தத்தை அமுல் செய்வதற்குப் பிரதமர் ராஜீவ் காந்தியால் விதிக்கப்பட்ட மூன்றுவது காலக்கெடுவும் இன்னும் மூன்று நாட்களில் முடிவடைகிறது.

இம்முறையும் பிரதமர் ராஜீவ் காந்தியின் முயற்சி தோல்வியிலேயே முடிவடையலாம் என்பதை கடந்த சில தினங்களாக பஞ்சாப்பில் நிகழும் சம்பவங்கள் கோடிட்டுக் காட்டுகின்றன.

### லோங்கோவால் ராஜீவ் ஒப்பந்தம்

கடந்த ஆண்டு சீக்கிய மிதவாதத் தலைவர் லோங்கோவாலுக்கும் பிரதமர் ராஜீவ் காந்திக்கும் இடையில் செய்து கொள்ளப்பட்ட ஒப்பந்தத்தின் பிரகாரம் சண்டிகார் நகரம் முழுமையாக பஞ்சாப்பிடம் கையளிக்கப்படவேண்டும்

அதற்குப் பதிலாக பஞ்சாப்பைச் சேர்ந்த 70 ஆயிரம் ஏக்கர் நிலப் பரப்பு ஹரியானாவிடம் ஒப்படைக்கப்பட வேண்டும்.

பஞ்சாப்பில் இந்துக்களைப் பெரும்பான்மையாகக் கொண்ட எல்லைப்புற கிராமங்களில் இருந்து இந்த 70 ஆயிரம் ஏக்கரும் தெரிவு செய்யப்படவேண்டும்.

இந்த ஒப்பந்தத்தை அமுல் செய்வதற்காக இந்த ஆண்டு குடியரசுத் தினமான ஜனவரி 26 ஆம் திகதி ராஜீவால் முதலாவது காலக்கெடு விதிக்கப்பட்டது

அதற்குள் காரியங்கள் நிறைவேறாததால் ஜூன் 21 ஆம் திகதி இரண்டாவது காலக்கெடு விதிக்கப்பட்டது

அதிலும் தடங்கல் ஏற்பட்டதை அடுத்தே ஜூலை 15 ஆம் திகதி அதாவது எதிர்வரும் செவ்வாய்க்கிழமை மூன்றுவது காலக்கெடு விதிக்கப்பட்டது.

ஒப்பந்தத்தை அமுலுக்கு கொண்டுவர முதலாவது காலக்கெடு விதிக்கப்பட்ட நாளில் இருந்து இதுவரை 400க்கும் அதிகமானோர் பஞ்சாப்பில் வன்செயல்களால் உயிர் இழந்துள்ளனர். ஆயிரக்கணக்கானோர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

நாற்றுக்கணக்கான இந்துக்கள் பீதியால் பஞ்சாபை விட்டு வெளியேறிவிட்டனர்.

பஞ்சாப் எல்லையில் உள்ள பாகிஸ்தானில் இருந்து வரும் ஊடுருவல்காரர்களையும் சமாளிப்பதற்கு இந்திய ஆயுதப் படையினர் பெரும் போராட்டம் ஒன்றையே நடத்த வேண்டிய நிலைமை இருந்து வருகிறது.

எப்படியாவது சமரச நிலையைத் தோற்றுவித்து பஞ்சாப்பில் அமைதியை ஏற்படுத்துவதில் பிரதமர் ராஜீவ் முழு மூச்சாக ஈடுபட்டு வருகிறார்.

### சண்டிகார்

ஹரியானாவுக்குச் சேர வேண்டிய 70 ஆயிரம் ஏக்கர் நிலப்பரப்பைத் தெரிவு செய்வதில் இருந்துவரும் இழுபறியே ராஜீவால் குறிப்பிடப்பட்ட கால எல்லைக்குள் ஒப்பந்தத்தை அமுல் செய்ய முடியாமல் போனதுக்குக் காரணம் ஆகும்.

20 வருடங்களாக பஞ்சாப்புக்கும் ஹரியானாவுக்கும் பொதுவான தலைநகராக சண்டிகார் இருந்து வந்தது.

### தீவிரவாதிகள் கைக்குள் பர்னாலா

கடந்த ஆண்டு லோங்கோவால்—ராஜீவ் ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்டவுடன் ஒப்பந்தத்துக்கு பஞ்சாப்பிலும் ஹரியானாவிலும் பெரும் வரவேற்புத் தெரிவிக்கப்பட்டது

ஆனால் காலக்கிரமத்தில் இந்த ஒப்பந்தத்துக்கு எதிராக ஹரியானாவில் இந்து தீவிரவாதிகளின் கையும், பஞ்சாப்பில் சீக்கிய தீவிரவாதிகளினது கையும் ஓங்கின.

சீக்கியர் தரப்பில் ஒப்பந்தத்தில் கையெழுத்திட்ட லோங்கோவால் சீக்கிய தீவிரவாதிகளால் சுட்டுக் கொல்லப்பட்டார்.

அகல்பீடம் பொற்கோயிலுக்குள் பொலிஸார் நுழைந்த சம்பவத்தை வைத்து பஞ்சாப் முதல்வர் சுர்ஜித்சிங் பர்னாலாவின் அமைச்சரவையில் இருந்து தீவிரவாத அமைச்சர்கள் சிலர் விலகிச் சென்றனர்.

சுர்ஜித்சிங் பர்னாலாவின் அகாலிதள் கட்சியும் பிளவு பட்டது

இந்தச் சம்பவங்களே பர்னாலாவை படிப்படியாக தீவிரவாதிகளின் வலைக்குள் சிக்கவைத்தன

தீவிரவாதிகளை முழு அளவில் எதிர்த்துக் கொண்டு ஆட்சி செய்ய முடியாத நிலையும் அவருக்கு ஏற்பட்டது

இதனால்தான் ஹரியானாவுக்குச் சேரவேண்டிய 70 ஆயிரம் ஏக்கர் நிலப் பரப்பையும் தெரிவு செய்வதற்காக ஏற்படுத்தப்பட்ட டி. ஏ. தேசாய் கமிஷனின் நியாயாதிக்கத்தை ஏற்க முடியாது என்று இவ்வாரம் பர்னாலா அறிவித்துவிட்டார்.

கமிஷனின் கூட்டத்தில் கலந்து கொள்ளவும் பர்னாலா மறுப்புத் தெரிவித்துவிட்டார்.

ஒப்பந்தத்தை அமுலுக்கு கொண்டு வருவதற்கு ராஜீவால் விதிக்கப்பட்ட மூன்றுவது காலக்கெடுவும் கைகூடாமல் போகலாம் என்பதற்கு இது தான் காரணம்.

### பன்சிலால் ஹரியானாவில் பஜன்

லாலுக்குப் பதிலாக பன்சிலாலை மாநில முதல்வர் ஆக்கியது மூலம் ஹரியானாவில் இந்த ஒப்பந்தத்துக்கு மாநில அரசு மட்டத்தில் இருந்து வந்த தடையை பிரதமர் ராஜீவ் அகற்றிவிட்டார்

பஞ்சாப்தான் தொடர்ந்து நெருக்கடியைக் கொடுத்து வருகிறது.

ஹரியானாவிடம் ஒப்படைக்கப்பட வேண்டிய 70 ஆயிரம் ஏக்கர் பரப்பு முழுவதையும் டி. ஏ தேசாய் கமிஷனே தெரிவு செய்வதை, பஞ்சாப் முதல்வர் சுர்ஜித்சிங் பர்னாலா தற்போது வன்மையாக எதிர்த்து வருகிறார்

டி ஏ தேசாய் கமிஷனுக்கு முன் ஏற்படுத்தப்பட்ட கமிஷனால் தெரிவு செய்யப்பட்ட 45 ஆயிரம் ஏக்கர் நிலத்துடன் மிகுதி 25 ஆயிரம் ஏக்கர் நிலத்தைத் தெரிவு செய்யும் பொறுப்பு மட்டுமே டி ஏ தேசாய் கமிஷனிடம் விடப்பட வேண்டும் என்பதே பர்னாலாவின் தற்போதைய நிலை ஆகும்.

பஞ்சாப் பிரச்சினையை எந்த வகையிலாவது தீர்த்துவைக்க பிரதமர் ராஜீவ் உறுதி கொண்டிருப்பதால் ஹரியானாவுக்கு பாதகமாகவே அவரின் அடுத்த நடவடிக்கைகள் அமையலாம் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

உலக உலா ஏன்.பி.சீலன்

## மாகாண....

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

சபையும் கிழக்குமாகாண சபையும் பொது விஷயங்களில் இணைந்து செயல்படக்கூடியதாக ஏதாவது ஒரு வகையான நிர்வாக ஒழுங்குகள்.

மேற்கூறப்பட்ட மேலதிக வியாக்கியானங்களை இலங்கை அரசு இந்தியாவூடாக சமர்ப்பித்த பின்னரே தமிழர் விடுதலைக் கூட்டணித் தலைவர்கள் கொழும்பு வந்து ஜனாதிபதி ஜெயவர்த்தனாவைச் சந்திக்கத் தீர்மானித்தனர். (ஆ-எ-21)

## பனையும் கடலும்...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

இருந்து வரும் தினார்களையும், டொலர்களையும் நாடி ஓடும் மோகம் வந்திருக்கிறது.

தனியாட்சி, சுயாட்சி என்று ஒரு நிலை வரும்போது அந்தச் செயற்கைப் பொருளாதாரம் எமக்குக் கைகொடாது. இந்தக் கட்டத்திலாவது எமது மக்கள் அதனை உணர வேண்டும். எமது பிரதேசத்தை வளமாக்கி, இயற்கையான பொருளாதாரத்தை வளர்த்துக் கொள்ளுதல் மிக மிகப் பிரதானம்.

அரசியல் சுதந்திரப் போராட்டத்துடனேயே — சம காலத்திலேயே பொருளாதாரப் போராட்டமும் தொடக்கப்பட வேண்டும்.

எனவே இதுவரை நாம் விட்ட தவறைத் திருத்திக் கொள்ளுதல் அவசியம். இயற்கை தந்த செல்வத்தை எமது பொருளாதார விருத்திக்குப் பயன்படுத்தத் திட்டமிட்டுச் செயலாற்ற வேண்டும். செயற்கைப் பொருளாதாரத்தை நம்புவோமெனில் எமக்கு வீழ்ச்சி அன்றி மீட்சி இல்லை.

பனைவளம், கடல் வளம் ஆகியவற்றோடு விவசாயம், கைத்தொழில் ஆகிய துறைகளையும் எமது மண்ணில் இப்போதே ஊன்றத் தொடங்க வேண்டும்.

கற்பகதருவாம் பனையின் வளத்தை விருத்தி செய்ய ஐந்தாண்டுத் திட்டம் வகுக்கப்பட்டிருப்பதாக ஒரு செய்தி உண்டு. மகிழ்ச்சி தருகிறது. அதே போல ஏனைய மூலத் துறைகளையும் திட்டமிட்டு விருத்தி செய்ய முனைய வேண்டும்.

## காங்கேசனில் சீனி, அரிசி கப்பல்கள்

யாழ்ப்பாணம், ஜூலை 12

காங்கேசன்துறைமுகத்தில் சீனி, அரிசிக் கப்பல்கள் வந்துள்ளன.

"கொழும்பு" எனும் கப்பல் ஆயிரம் தொன் அரிசியுடனும் 2 ஆயிரம் தொன் சீனியுடனும் வியாழனன்று வந்தது.

"ருகுணு" எனும் கப்பல் ஆயிரம் தொன் அரிசியுடன் இன்று காங்கேசன் துறைமுகத்தை வந்தடையும் என எதிர்பார்க்கப்படுகிறது (உ-5)

## நாளைபெரு...

(1ஆம்பக்கத்தொடர்ச்சி)

அவகாசத்தைப் பெறுவதற்கே அரசு பேச்சுவார்த்தைகளையும் மாநாடுகளையும் நடத்தி வருகிறது—இப்படி அப்பிரசுரத்தில் மேலும் தெரிவிக்கப்பட்டிருக்கிறது

சகல தனியார் போக்குவரத்து பஸ் உரிமையாளர்களும் சங்கங்களும் ஆர்ப்பாட்டப் பேரணிக்கு ஒத்துழைப்புத் தருமாறு அப்பிரசுரத்தில் வேண்டுகோள் விடுக்கப்பட்டிருக்கிறது. (உ)

எமது கலை. செல்வம், ஆற்றல், திறமை, முயற்சி — கடின உழைப்பு ஆகியவாவும் அந்த வழியில் இடப்பெயர்ந்து போது ... காலம் ஓமையமாகும்

## கூட்டணி...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

பில் ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன

கட்டுநாயக்கா விமான நிலையத்திலும் பாதுகாப்பு ஏற்பாடுகள் பலப்படுத்தப்பட்டுள்ளன.

ஜனாதிபதி- கூட்டணித் தலைவர்கள் சந்திப்பு இங்கள் காலை 11 மணிக்கு இடம்பெறும். (உ-எ)

## சிறிமா பேச்சு

மாகாணசபை யோசனைகள் குறித்து சுதந்திரக் கட்சித் தலைவி திருமதி சிறிமாவோ பண்டாரநாயக்காவும் அஸ்கிரிய மகாநாயக்கதேரர் பலிபான சந்தானந்தவும் நேற்று மாலை பேச்சுக்கள் நடத்தினர். (உ-எ)

## புலிகள்...

(1 ம் பக்கத் தொடர்ச்சி)

தலைப் புலிகள் இயக்கத்தைச் சேர்ந்த தோமஸ் (ரதீஸ்வரன் - அரியாலை) வீரமரணமடைந்தார்.

அவருக்கு எமது வீர வணக்கம் — இப்படித் தமிழீழ விடுதலைப் புலிகள் நேற்று விடுத்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டிருக்கிறது (உ)

## நாணய மாற்று விவரம்

வாசகர்களின் நன்மை கருதி வெளிநாட்டு நாணயங்களுக்கு உரிய இலங்கை நாணய மதிப்பு விவரம் வாராந்தம் சஞ்சீவியில் பிரசுரமாகிறது.

(இது நேற்றைய மாற்று விகிதமாகும்)

| வெளிநாட்டு நாணயம் | இலங்கையில் (ரூபா சதத்தில்) |
|---|---|
| ஸ்ரேலிங் பவுண் | 41 88 |
| அமெ. டாலர் | 27. 84 |
| இந்திய ரூபா | 2. 40 |
| மார்க் (ஜெர்மனி) | 12. 67 |
| கனடா டாலர் | 19. 98 |
| பிராங் (பிரெஞ்சு) | 3. 94 |
| பிராங் (சுவிஸ்) | 16 51 |
| அவுஸ். டாலர் | 17. 48 |


வியாபாரம் பெருக விளம்பரம் செய்க

Wanted Immediately

RESIDENT MEDICAL OFFICER

Applications are called for Resident Medical Officer at Mission Hospital, Murasumoddai. Those with MBBS qualifications and those who are qualified western practitioners RMP can apply.

Salary negotiable

For further particulars please contact:

THE ACTING MEDICAL SUPERINTENDENT,
Green Memorial Hospital,
Manipay.



இப்பத்திரிகை யாழ்ப்பாணம், மின்சாரநிலைய வீதி, இரண்டாவது ஒழுங்கை 15-ஆம் இலக்கத்தில் உள்ள உதயன் பப்ளிகேஷன்ஸ் (பிரைவேட்) லிமிடெட், ஸ்தாபனத்தாரால் அவர்களது அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது. வெளியீட்டு திகதி 12—07—1986.

Printed and Published by Uthayan Publications (Private) Ltd, 15 Second Lane, Power House Road. JAFFNA.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org